கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

மானியக் கோரிக்கை எண்: 17 கல்வி

1994-95

©
தமிழ்நாடு அரசு
1994

தமிழ்நாடு அரசுக்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்துறை
இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

முன்னதாகவே பார்வைக்கு சுற்றனுப்பப்படுகிறது.

சட்டமன்றப் பேரவையில் விவாதிக்கப்படுமுன் இதனை எவ்விதத்திலும் வெளியிடக் கூடாது.

## பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | பள்ளிக் கல்வி | |
| | (i) தொடக்கக் கல்வி | 14 |
| | (ii) உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கல்வி | 24 |
| | (iii) ஆசிரியர் கல்வி, ஆய்வு மற்றும் பயிற்சி | 36 |
| | (iv) அரசுத் தேர்வுகள் | 38 |
| 3. | ஆசிரியர் தேர்வு வாரியம் | 41 |
| 4. | தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் | 44 |
| 5. | பள்ளிசார் மற்றும் வயதுவந்தோர் கல்வி | 45 |
| 6. | கல்லூரிக் கல்வி | 53 |
| 7. | தொழில் நுட்பக் கல்வி | 62 |
| 8. | பொது நூலகங்கள் | 70 |
| 9. | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் | 75 |
| 10. | விளையாட்டு உடற்பயிற்சி மற்றும் இளைஞர் நலன் | 79 |
| 11. | அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் | 93 |

அத்தியாயம் 1

# முன்னுரை

*"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு"*

– திருவள்ளுவர்.

மணலின்கண் இருக்கும் கேணியானது தோண்டிய அளவுதான் நீரினைச் சுரக்கும். மக்களுக்கு கற்ற அளவுதான் அறிவு சுரக்கும்.

சமுதாயத்தில் தகுதியான வாழ்க்கை வாழ ஒருவருடைய வாழ்க்கையில் கல்வி முக்கியமான பங்குவகிக்கிறது. அதுமட்டுமல்லாமல், சமுதாயம்பல நற்பயன்களைப் பெற்று உயர்வதற்கு கல்வி உறுதுணையாக உள்ளது. எப்போதும் போல தமிழக அரசின் செயல் திட்ட நிரலில் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

வறுமை மற்றும் எழுத்தறிவின்மை ஆகிய இரண்டு தீமைகளை அறவே களையும் பொருட்டு தமிழ்நாடு அரசு ஒரு தீர்க்கமான கொள்கையை பின்பற்றி வருகிறது. மேலும் தேசிய அளவில் கடைபிடிக்கப்படும் முன்னுரிமை நிரலுக்கு ஏற்றவாறு தமிழக அரசும் "அனைவருக்கும் தொடக்கக் கல்வி" என்ற இலக்கினை கி.பி.2000 ஆண்டுக்குள் எய்தும் பொருட்டு வரையப்பட்ட செயல் திட்டத்தின்படி தமிழகம் செயல்பட்டு வருகிறது.

சுதந்திர இந்தியாவில் கல்வியில் தேவையான அளவிற்கு அளவுப் பெருக்கம், தரமேம்பாடு மற்றும் சமத்துவம் ஆகியவை தலையாய குறிக்கோள்களாகும். இந்த மூன்று முனைகளிலும் தமிழக அரசு ஒருமித்த வழியில் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பள்ளிகளில் மாணாக்கர் இருக்கை எண்ணிக்கையும் மற்றும் கூடுதல் ஆசிரியர் பணியிடங்களும் தேவையான அளவிற்கு அவ்வப்போது வழங்கப்படுகிறது.

கல்வித் தொழில் நுட்பவியலை நிறுவன மயமாக்கி சிறப்பான தரமுன்னேற்றத்திற்கான மேம்பாட்டுப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்வி தொலைக்காட்சி படப்பிடிப்பு நிலையம் கூடுதல் கருவிகளை வாங்குவது மூலம் படிப்படியாக விரிவாக்கப்படுகிறது. மேலும், தொழிற்கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை கவனம் அளிக்கப்படுகிறது. ஆசிரியர்கட்கு அவ்வப்போது பணியிடைப் பயிற்சியும் மற்றும் பணிக்கு முந்தைய பயிற்சித் திட்டத்தை மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப அவ்வப்போது மேம்படுத்தும் திட்டமும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

சமுதாயத்தில் கீழ்மட்ட நிலையில் உள்ள குழந்தைகள் மற்றும் கல்வியில் பின்தங்கியுள்ள குழந்தைகளின் நலமேம்பாடு எப்பொழுதும் அரசின் முக்கிய கவனத்தில் உள்ளது.

இத்தகைய மாணாக்கர்களை இனங்கண்டுகொண்டு அவர்களுக்கு பல்வேறு வகையான ஊக்க இடு பொருட்கள் வழங்குவதன் வாயிலாக கல்வித் துறையிலும் அரசு இத்தகைய கொள்கையை கவனமாக கடைபிடிக்கின்றது. இவ்வகையில் யுனிசெப், உலக வங்கி மற்றும் நடுவண் அரசு ஆகியவற்றின் நிதியுதவி மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களில் "குறைந்த பட்ச கல்விக்கற்றலின் அளவீடு, வட்டார தீவிரக் கல்வித் திட்டம், மாவட்ட ஆரம்பக் கல்வித் திட்டம் மற்றும் கல்வி கற்பிப்பு தொண்டர் பணித்திட்டம்" ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கல்வியில் தரமும் மற்றும் சமூக நீதியும் ஒருங்கே பின்பற்றப்படும் வகையில் ஒரு முன்னோடி செயல்திட்டமாக தர்மபுரி மாவட்டத்தில் டாக்டர் புரட்சித் தலைவி சீர்மிகு உயர் பள்ளி ஒன்றினை அரசு தொடங்கியுள்ளது. பின்னர் தொடங்கவுள்ள இத்தகைய பள்ளிகளுக்கு முன்மாதிரி பள்ளியாக இது விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விளையாட்டுகளுக்கு ஊக்கம் வழங்கும் வகையில் 1995 டிசம்பர் திங்களில் நடக்கவிருக்கும் எஸ்.ஏ.எஃப்.(South Asian Federation Games) விளையாட்டுகளை தமிழகத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழக மக்களின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அரசு இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. நிதி கட்டுப்பாடுகள் இம்முயற்சிகளை பாதிக்காது.

## மாநில வரவு செலவு திட்டத்தில் கல்வி குறித்த செலவு

மானியக் கோரிக்கை 17 "கல்வி" என்ற தலைப்பின் கீழ் மூலதனச் செலவு ரூ.2002.46 கோடியாகும். இதில் ரூ.115.09 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். இது மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் கல்வி என்ற ஒளி விளக்கை ஏற்றுவதற்கு அரசு பொறுப்பேற்றிருப்பதைக் காட்டுகிறது. மேற்குறிப்பிட்ட மூலதன ஒதுக்கீடு 1993–94 இல் ஒதுக்கப்பட்ட (ரூ.1820.32 கோடி) தொகையை விட ரூ.182.14 கோடி அதிகமாகும். வருவாய் கணக்கின் பேரிலான மொத்த செலவான ரூ.9083,53 கோடியில் மூலதனச் செலவு 22.04% எனக் கணக்கிடப்படுகிறது.

1. மேலே குறிப்பிட்டவாறு 1994–95–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் "புதிய திட்டங்கள்" கொண்டு வரப்பட்டுள்ளன. சில திட்டங்களுக்கு ஏனைய துறைகளின் வரவு செலவு திட்ட ஒதுக்கீடுகளிலிருந்து பின்வரும் பக்கங்களில் விவரித்துக் கூறியுள்ளபடி, நிதியுதவி அளிக்கப்பட்டு வருகின்றன.

| | கணக்குத் தலைப்பு | திட்டப்பணி | திட்டத்தில் சேராதது (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2059 | அரசுப் பள்ளிகள் கல்லூரிகள் முதலியவற்றின் கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | – | 929.53 | 929.53 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| 01 | தொடக்கக் கல்வி | 4217.49 | 89671.67 | 93889.16 |
| 02. | இடைநிலைக்கல்வி | 1989.35 | 66883.74 | 68873.09 |
| 03. | பல்கலைக்கழகக் கல்வியும், உயர்கல்வியும் | 331.78 | 17981.68 | 18313.46 |
| 04. | முதியோர் கல்வி | 2126.63 | 17.84 | 2144.47 |
| 05. | மொழி வளர்ச்சி | 0.02 | 160.95 | 160.97 |
| 80. | பொதுவானவை– ஏனைய செலவு | 0.01 | 3000.00 | 3000.01 |
| | **மொத்தம்–பொதுக்கல்வி** | 8665.28 | 178645.41 | 187310.69 |
| 2203 | தொழில் நுட்பக் கல்வி | 864.03 | 5477.32 | 6341.35 |
| 2204 | விளையாட்டுகளும்– இளைஞர் நலனும் | 357.81 | 1019.61 | 1377.4 |
| 2205 | கலையும் பண்பாடும் பொது நூலகங்கள் ஆவணக் காப்பகங்கள் | 60.72 | 1410.26 | 1470.98 |
| 2225 | ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டோர்நலன் | 400.00 | – | 400.00 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | – | 9.54 | 9.54 |
| 2351 | மலைப்பிரதேச மேம்பாடு | 0.01 | – | 0.01 |
| 3425 | அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் | 217.55 | – | 217.55 |
| 3454 | மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வு புள்ளியியல் விவரச்சுவடி | 11.05 | – | 11.05 |
| 4202 | மூலதன ஒதுக்கீடு மற்றும் பள்ளிக் கட்டடம் | 894.43 | 131.76 | 1026.19 |
| | திருப்பி வசூலிக்கப்பட்டவை | 39.01 | 2042.55 | 2081.50 |
| | **மொத்த மானியம் கோரிக்கை–17 கல்வி** | 11509.89 | 188736.45 | 200246.34 |

2. இவை தவிர கல்விக் கட்டடங்கள் முதலியவற்றிற்கான மானியக் கோரிக்கைகளில் 1994–95 இல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்விவரம் வருமாறு:

| கணக்கு தலைப்பு | 1994–95ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் சேர்ந்தவை | வரவு செலவு திட்ட திட்டத்தில் சேராதவை | மதிப்பீடு மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| ஏ.வருவாய்க் கணக்கிற்கு உட்பட்ட செலவு மானியக் கோரிக்கை எண் 27 சமூதாய மேம்பாடு சமூகக் கல்வி | 18.00 | – | 18.00 |
| மானியக்கோரிக்கை எண். 36 பொதுப்பணிகள் அரசினர் பள்ளிகள் கல்லூரிக்களுக்கான கட்டிடங்கள்–சிறுபணிகள் | 6.00 | 16.80 | 22.80 |
| மானியக் கோரிக்கை எண்.41 2071 அரசு மானியம் பெறுகின்ற உள்ளாட்சி அமைப்பின் கீழ் வருகின்ற கல்வி நிலையங்களின் பணியாளர்களுக்கு ஒய்வூதியம் | – | 13185.44 | 13185.44 |
| பி. வருவாய் கணக்கிற்கு உட்படாத செலவு | | | |
| மானியக் கோரிக்கை எண். 55 4202 கல்வி, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு அரசினர் கல்வி நிலையங்களுக்கான கட்டடங்கள் | 894.43 | 131.76 | 1026.19 |
| மானியக் கோரிக்கை எண்.61 6202 கடன் அடிப்படையில் வழங்கப்படும் தேசியப் படிப்புதவித் தொகையும் தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்கு கடனும் | – | 0.07 | 0.07 |
| 7615 மானிய உதவி பெறும் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குக் கடன்கள் | – | 8.25 | 8.25 |
| மொத்தம் | 918.43 | 13342.32 | 14260.75 |

மேற்கூறிய ஒதுக்கீடுகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் கல்வி குறித்த செலவு 1994–95 இல் ரூ. 2145 கோடிக்கு மிகையாக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட கணக்கில் ஆதி திராவிடர் பிற்பட்ட வகுப்பினருக்கான பள்ளிகள் விடுதிகளுக்கான ஒதுக்கீடுகள்; ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோருக்கான படிப்புதவித் தொகைகள்; சீர்திருத்தப் பள்ளிகள், உடல் ஊனமுற்றோருக்கான பள்ளிகள், தொழிற் பயிற்சி நிலையங்கள் முதலியவற்றிற்கான நிதி ஒதுக்கீடும் மற்றும் மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால் நடைக் கல்வி ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடும் அடங்காது.

## 1994–95 இல் கல்வி பணித் திட்டங்கள் குறித்த நிதி ஒதுக்கீடு

1994–95 இல் கல்வி குறித்த பல்வேறு துறைகளுக்காகும் திட்டச் செல வு (2202 பொதுக் கல்வி, 4202 கல்வி குறித்த மூலதன ஒதுக்கீடு 6202 கடன்கள் முதலில் அனைத்துத் தலைப்புகளின் கீழ்) வருமாறு :

(* குறியீடு உள்ள தொகை நடுவண் அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவைக் குறிக்கும்)

| *கணக்குத் தலைப்பு* (1) | *ஏற்றுக்கொள்ளப் பட்டது* (2) | *புதிய திட்டங்கள் 1994–95–இல் அனுமதிக்கப்பட்டது* (3) | *மொத்தம்* (4) |
|---|---|---|---|
| | | *(ரூபாய் இலட்சத்தில்)* | |
| I. பொதுக்கல்வி | | | |
| (i) தொடக்கக் கல்வி | 4189.08 | 68.38 | 4257.46 |
| | *360.03 | | *360.03 |
| (ii) பள்ளிக் கல்வி | 1454.38 | 177.10 | 1631.48 |
| | *210.16 | | *210.16 |
| (iii) ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி | 21.79 | 5.00 | 26.79 |
| | *498.26 | | *498.26 |
| (iv) முதியோர் கல்வி | 1924.34 | – | 1924.34 |
| | *202.09 | | *202.09 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| (v) பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் | 344.18 | 118.95 | 463.13 |
| II. தொழிற் கல்வி | 1218.15<br>*5.28 | 16.00 | 1234.15<br>*5.28 |
| III. விளையாட்டும் இளைஞர் நலனும் | 168.03<br>*263.42 | 58.08 | 226.11<br>*263.42 |
| IV. கலை பண்பாடு கல்வி ஆவணக் காப்பகம் பொது நூலகம் | 398.10 | 19.00 | 417.10 |
| V. அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் | 207.50<br>*10.00 | 10.05 | 217.55<br>*10.00 |
| மொத்தம் | 9925.55<br>*1549.24 | 472.56 | 10398.11<br>*1549.24 |

## 1994–95 க்கான புதிய திட்டங்கள்

### 1. 200 புதிய இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தல்

ஓராசிரியர் ஆரம்பப் பள்ளிகளுக்கும் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளுக்கும் (170) கூடுதலாக இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் தேவைப்படுகின்றன. இதற்காகவும், 1994–95 இல் 30 ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்காகவும் 200 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை தோற்றுவிக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்காக 1994–95 இல் ரூ. 62.52 இலட்சம் வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

### 2. 8 பி.எட்., உதவி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்.

மொத்தமுள்ள 5608 நடுநிலைப்பள்ளிகளில் 2941 பள்ளிகளே பி.எட்., நிலையிலுள்ள தலமையாசிரியர்களை கொண்டுள்ள பி.எட். நிலையிலுள்ள தலைமையாசிரியர்களை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் நியமனம் செய்ய தேவைக்கேற்ப, 8 பி.எட்., நிலை தலைமையாசிரியர் பணியிடங்களை தோற்றுவிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென ரூ. 3.06 லட்சம் 1994–95 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்காக 9 தமிழாசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்தல்.

தற்போதுள்ள 5608 நடுநிலைப் பள்ளிகளில் 1717 பள்ளிகளில் மட்டுமே தமிழாசிரியர் பணியிடங்கள் உள்ளன. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்களின் தேவையைக் கருதி, 9 தமிழாசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென 1994–95 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 2.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. 25 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்.

1986–87 இல் நடத்தப்பட்ட 5–வது அனைத்திந்திய கல்வி அளவீட்டின்படி 26.11 லட்சம் மக்கள் தொகையுடைய 5,742 குடியிருப்புகளுக்கு 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள் உயர்நிலைப் பள்ளி வசதிகள் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. 5 கிலோமீட்டர் தூரத்திற்குள் உள்ள இடங்களில் உயர்நிலைப்பள்ளி வசதி அளிக்கும் நோக்கத்துடன் 25 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென 1994–95இல் ரூ. 33.45 இலட்சம் வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. 12 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேநிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்

கிராமப்புற மாணவர்களுக்கு குறிப்பிட்ட தூரத்திற்குள் சென்று மேநிலைப் பள்ளிக் கல்வி வசதிகளைப் பெற ஏதுவாக 12 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேநிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது. இதற்கென ரூ. 30.75 இலட்சம் 1994–95–ஆம் கல்வி ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. 24 பி.எட்., உதவி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தல்

கல்வித்தரத்தை உயர்த்தும் பொருட்டு, 14–16 வயது தொகுதியிலான மாணவர்களின் கூடுதல் சேர்க்கையினையும் கருத்தில் கொண்டு 24 பி.எட்., உதவி ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிக்க அரசு உத்தேசித்துள்ளது. இதற்கென ரூ.9.20 இலட்சம் 1994–95 இல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. அரசு உயர்நிலை,மேநிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்

1994–95 இல் ரூ.75 இலட்சத்தில் அரசு உயர்நிலை, மேநிலைப் பள்ளிகளுக்கு கட்டடம் கட்ட அரசு உத்தேசித்துள்ளது. பள்ளிகளின் முன்னேற்றத்திற்காக சமுதாய ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் பொருட்டு 50 சதவீதம் கட்டட மதிப்பீட்டின் பங்கீடு அளித்தால் அரசு தனது பங்காக பள்ளிக் கட்டடங்கள் கட்ட 50 சதவீதம் நிதி அளிக்கும். இதனால் நடப்பு நிதி ஆண்டில் ரூ.150 இலட்சம் பள்ளிக் கட்டட வசதிக்காக நிதி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 8. உயர்நிலை,மேநிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்துதல்

உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் இதுவரை 3203 உயர்நிலைப் பள்ளிகளில் 1163 உயர்நிலைப்பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1994–95 ஆம் ஆண்டு ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்ய அரசு உத்தேசித்துள்ளது.

## 9. அரசுத் தேர்வுத்துறை இயக்கக அலுவலகத்திற்கு டீசல் வேன் வாங்குவது

அரசுத் தேர்வுத்துறையில் தேர்வுப்பணிகளை தாமதமில்லாமல் நடத்தும் பொருட்டு தேர்வு இயக்குநரகத்தில் உள்ள ஒரு பழைய வண்டிக்கு பதிலாக புதிதாக 'டிராவல் டெம்போ' வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1994–95 இல் இதன் செலவினம் ரூ.3.70 இலட்சம் ஆகும்.

## 10. ஏற்கனவே துவக்கப்பட்ட வேலைவாய்ப்பளிக்கக் கூடிய வகுப்புகளுக்கு கூடுதல் ஆசிரியப் பணியிடங்கள் ஏற்படுத்துதல்

கடந்த ஆண்டுகளில் கணிப்பொறி அறிவியல் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு மட்டும் 14.ஆசிரியப் பணியிடங்கள் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 1994–95 இல் ரூ.8.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. கிருஷ்ணகிரியில் உள்ள அன்னை சந்தியா அரசு மகளிர் கல்லூரிக்கு 3 கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்

1991–92 ஆம் ஆண்டில் அரசு அனுமதியுடன் கிருஷ்ணகிரியில் ஒரு மகளிர் கல்லூரி துவக்கப்பட்டு 1992–93 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. மேற்படி கல்லூரியில் 1993–94 ஆம் ஆண்டில் இரண்டாம் ஆண்டு பட்டவகுப்புகள் நடக்கின்றன. 1994–95 ஆம் ஆண்டில் மூன்றாம் ஆண்டு பட்டவகுப்புகள் செயல்பட உள்ளதால் 3 கூடுதல் ஆசிரியர் பணியிடங்களை தோற்றுவிக்க அரசு ஒப்பளித்துள்ளது. 1994–95 இல் இதனை செயல்படுத்த ரூ.1.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. தற்போதுள்ள 3 அரசு கல்லூரிகளில் முகப்பு அறை மற்றும் கட்டட வசதிகளைப் பெருக்குதல்

மகளிர் அனுமதிக்கப்பட்டுள்ள 3 அரசு ஆடவர் கல்லூரிகளில் மகளிருக்கு மட்டுமான முகப்பு அறை மற்றும் கழிப்பிட வசதிகளை 1994–95 ஆம் கல்வி ஆண்டிலிருந்து படிப்படியாக ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1994–95 இல் இதற்கான செலவுக்காக ரூ.10.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

13. பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவிபெறும் அரசு கல்லூரிகளுக்காக கட்டடம் கட்டுதல்

குறைந்தபட்சம் 10 அரசு கல்லூரிகளுக்கு கூடுதல் வகுப்பறைகளைக் கட்டுவதற்கான உதவியினை பல்கலைக் கழக மானியக் குழுவிடம் பெறுவதற்காக, 1994–95 இல் அரசு தனது 25% பங்காக ரூ.10, இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது.

14. நிர்வாகத்தை வலுப்படுத்தும் பொருட்டு வேலூரில் புதிய மண்டல கல்லூரிக் கல்வி துணை இயக்குநர் அலுவலகம் நிறுவுதல்

உதவி பெறும் கல்லூரிப் பணியாளருக்காக கூடுதல் நலத் திட்டங்கள் அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து வேலைச்சுமை கணிசமாக அதிகரித்துள்ளது. மேற்கண்ட மண்டல அலுவலகங்களில் வேலைச்சுமையை சமாளிக்கும் வகையில் தற்போது இயங்கிவரும் ஐந்து மண்டலங்களை ஆறு மண்டலங்களாக்க அரசு உத்தேதித்துள்ளது. ஆறாவது மண்டல அலுவலகத்தை வேலூரை தலைமையிடமாகக் கொண்டு 1994–95 இல் தொடங்க ரூ.2 இலட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

15. இராமநாதபுரத்தில் ஒரு புதிய பெண்கள் கல்லூரி ஆரம்பித்தல்

இராமநாதபுரம் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கு முதலிடம் தர வேண்டியுள்ளது. 11.44 லட்சம் மக்கள் தொகை கொண்ட இம்மாவட்டத்தில் 3 கல்லூரிகள் (1 பெண்களுக்கானது) மட்டுமே உள்ளன. போதுமான மகளிர் கல்லூரிகள் இம்மாவட்டத்தில் இல்லாததினால். பின்தங்கிய ஒரு பகுதியிலுள்ள மகளிரின் கல்வியை மேம்படுத்துவதைக் கருத்தில்கொண்டு இராமநாதபுரத்தில் ஒரு மகளிர் கல்லூரியைத் தோற்றுவிக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது. இதற்காக 1994–95 இல் ரூ.35.57 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. சென்னையிலுள்ள கிண்டி தொழில்நுட்பக் கல்லூரி இருநூற்றாண்டு நினைவு விழாக் கட்டடம் கட்டுதல்

கிண்டி தொழில்நுட்பக் கல்லூரி 17–5–1994 அன்றுடன் இருநூறாண்டு நிறைவு பெறுவதை நினைவு கூறும் வகையில் இருநூற்றாண்டு நினைவு விழாக்கட்டடத்திற்காக ரூ.45 இலட்சம் செலவில் கட்டடம் எழுப்ப மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக்குழு இதற்காக ரூ.20 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 1994–95 ஆம் கல்வி ஆண்டிற்கு மாநில அரசுப் பங்காக ரூ.10 இலட்சம் அளிக்கிறது.

17. அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை – கூடுதல் கட்டட வசதி

கோவை அரசினர் பொறியியல் கல்லூரியில் புரடெக்ஷன் இன்ஜினியரிங் முதுகலைப் பொறியியல் பட்டப் படிப்பு கற்பிக்கப்படுகிறது. இதில் ரோபோடிக் ஆய்வுக்கூடம் மேற்படி புரடெக்ஷன் பொறியியல் பிரிவிற்கு தளவாடங்கள் மைய அரசின் உதவியுடன் வாங்கப்பட்டுள்ளது. இந்த தளவாடங்களை சரிவர பயன்படுத்திப் பாதுகாக்கும் வகையில் புதிய கட்டடத்தை ரூ. 3 இலட்சம் செலவில் 1994–95 இல் கட்ட அரசு உத்தேசித்துள்ளது.

18. கோவை அரசினர் பொறியியல் கல்லூரியில் பவர் எலக்ட்ரானிக்ஸ் ஆய்வுக் கூடம் நிறுவுதல்

பவர் எலக்ட்ரானிக்ஸ் பிரிவில் படிக்கும் மாணவர்கள் சிறந்த பயிற்சியும், வளர்ந்து வரும் சூழ்நிலைக்கேற்ப தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்கு, ஒரு முழுமையான சகல உபகரணங்களுடைய எலக்ட்ரானிக்ஸ் ஆய்வுக் கூடம் நிறுவ வேண்டியது அவசியமாகும். ஆகவே இக்கல்லூரிக்கான புதிய ஆய்வுக்கூட கட்டடம் ஒன்றினை ரூ. 3 இலட்சம் செலவில் 1994–95 இல் கட்ட உத்தேசித்துள்ளது.

## 19. ஊரக விளையாட்டு மையம்

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களை விளையாட்டில் ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ் நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றிய தலைமையகங்களில் ஒரு ஊரக விளையாட்டு மையம் 4 ஏக்கர் நிலத்தில் 400 மீட்டர் ஓடுகள பாதையுடன் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையத்திற்கும் ரூ.10,000 செலவில் விளையாட்டு ஒடு பொருட்களும், விளையாட்டு தடப்பொருட்களும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1994–95 இல் ரூ. 38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. மாவட்ட விளையாட்டு ஸ்டேடியம்

விளையாட்டு அரங்கங்கள் இல்லாத மாவட்டங்களில் மாவட்ட அளவிலான விளையாட்டு வளாகங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் முக்கிய பிரமுகர்களுக்கான பார்வையாளர் பெவிலியன் மற்றும் கேலரியுடன் உதைப்பந்து, கூடைப்பந்து முதலான விளையாட்டு இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். மேற்கண்ட வசதிகளை இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஏற்படுத்த 1994–95 இல் ரூ. 12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 21. விளையாட்டுச் சிறப்பு விடுதி

சென்னையில் "விளையாட்டுச் சிறப்பு விடுதி" ஒன்று தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விளையாட்டுச் சிறப்பு விடுதி 16 முதல் 20 வரை வயதுள்ள பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் நல்வாய்ப்பை உண்டாக்கி அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட திறன்வாய்ந்த மாணவர்கள் விளையாட்டு விடுதிகளால் தத்தெடுக்கப்பட்டு சிறப்புப் பயிற்சி தரப்படுவார்கள். சத்துணவு, விளையாட்டுச் சீருடைகள் மற்றும் கல்வி பயிலகக் கட்டணங்கள் முதலானவை அவர்களுக்கு வழங்கப்படும். திறமையுள்ள விளையாட்டு வீரர்கள் கல்வியைத் தொடர்வதோடு விளையாட்டுப் பயிற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் மேம்பட்டு விளங்க இது வாய்ப்பினைத் தரும். இதற்கென 1994–95 இல் ரூ. 8.08 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. இடைநிலை ஆவணக் காப்பகத்திற்கு தமிழ்நாடு ஆவணக் காப்பக வளாகத்தில் கட்டடம் கட்டுதல்

5–6–1987 முதல் பாதி நடப்பு ஆவணங்களை (3 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை) தனியாக பராமரிக்க இடைநிலை ஆவணக் காப்பகம்

தமிழ்நாடு ஆவணக் காப்பக வளாகத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த இடைநிலை ஆவணக் காப்பகத்தைத் தனிக் கட்டடத்தில் இயங்கி வரச் செய்யும் முகமாகத் தமிழ்நாடு ஆவணக் காப்பக வளாகத்தில் ரூ. 47 இலட்சம் மதிப்பீட்டில் தனிக் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 17 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 23. கன்னிமரா பொது நூலகத்திற்கு புத்தகங்களும் மற்றும் பருவ இதழ்களும் வாங்குதல்

தமிழ்நாடு பொது நூலக விதி 1948 இன் கீழ் சென்னை கன்னிமரா பொது நூலகம் மாநில மைய நூலகமாக செயல்பட்டு வருகிறது. அந்நூலகத்தில் கல்லூரி மாணவர்களின் பாடப் புத்தகங்களுக்கான தேவை பெருகி வருகின்றது. எனவே, கன்னிமரா பொது நூலகத்திற்கு அயல்நாட்டு மற்றும் இந்தியப் பாட நூல்களை அதிக அளவில் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு 1994–95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளது.

## 24. தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்பவியல் மாநிலமன்றத்திற்கு உதவி

அறிவியல் மற்றும் தொழில் நுட்ப யுக்திகளைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்த உள்ளன:

1. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் திட்டங்களுக்காக ரூ.25.50 இலட்சம்.
2. மாணவர்கள் திட்டங்களுக்காக ரூ.1.25 இலட்சம்
3. பரிசுத் திட்டம் – அறிவியல் வல்லுநர் பரிசுத் திட்டங்கள் ரூ. 1 இலட்சம்.

மேற்படி திட்டங்களை ரூ.10.05 இலட்சம் செலவில் 1994–95 ஆம் ஆண்டில் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

## 25. குறைந்த பட்ச கற்றல் இலக்குகளில் ஆசிரியர் பயிற்சித் திட்டம்

அனைவருக்குமான ஆரம்பக் கல்வி என்ற கோட்பாட்டினை செயலாக்குவதற்காக குறைந்தபட்சக் கற்றல் இலக்குகளை அனைத்து வகுப்பு மற்றும் கட்டங்களில் நிர்ணயிக்க வேண்டியது அவசியமாகும். இதற்காக ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் கற்றல் இலக்குகள்

பற்றிய தேவையான அறிவையும், பயிற்சியையும் அளித்து தயார் செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட திட்டத்திற்காக ரூ. 5 இலட்சம் 1994–95 இல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 26. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிலையங்களை ஒருங்கிணைத்து செயலாற்றுவதற்காக தமிழ்நாடு உயர்கல்வி மன்றம் நிறுவப்பட்டது. இம்மன்றம் அரசுக்கும் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிலையங்களுக்குமிடையே இணைப்புப் பாலமாக விளங்குகிறது. பல்கலைக் கழக மானியக்குழு உதவிபெறும் திட்டங்களுக்கு ஆதரவாக, பயன்பாட்டுக்கென 1994–95 இல் இந்த அரசு ரூ. 50 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.

## 27. ஆங்கிலம் பயிற்றுவிக்கும் மாநில நிறுவனம்

கல்லூரிக் கல்வி இயக்ககம் மற்றும் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவைகளின் கீழ் உள்ள ஆங்கில மொழிப் பயிற்சிப் பிரிவுகளை ஒருங்கிணைத்து ஒரு புதிய தன்னாட்சி நிறுவனத்தை மாநில அளவில் ஏற்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது.

---

# அத்தியாயம் 2

# பள்ளிக் கல்வி

## I. தொடக்கக்கல்வி

### (i) எல்லோருக்கும் தொடக்கக் கல்வி

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் வழிகாட்டுக் கொள்கையின்படி 14 வயது வரையிலுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க மாநில அரசு வழிவகை செய்ய வேண்டும். இந்திய நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து இக்குறிக்கோளினை அடைய திட்டமிட்ட உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கல்வியின் முழுப்பலனை அடைய அடித்தளத்திலிருந்து ஒரு தரமான கல்வித் திட்டத்தை உருவாக்குவதே மாநில அரசின் தலையாய முயற்சியாகும். ஏற்றத் தாழ்வின்றி சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை நீக்குவதும் குறிப்பாக ஏழை மற்றும் நலிந்த பிரிவினருக்கு தரமான கல்வியை அவரவர் வாழும் பகுதியிலேயே அரசுப் பள்ளிகள் மூலம் அளிப்பதும் "அனைவருக்கும் தொடக்கக் கல்வி" வலியுறுத்தும் கோட்பாடாகும். இந்த கோட்பாட்டை நோக்கி மாநிலத்திலுள்ள எல்லாக் கல்வி நிறுவனங்களும் வேகத்துடனும், உறுதியுடனும் செயல்பட வேண்டுமென்பதே அரசின் நோக்கமாகும். மேற்கண்ட வகையில் "அனைவருக்கும் தொடக்கக் கல்வி" என்ற கோட்பாட்டிற்கு இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

### (ii) முதலமைச்சரின் 15 அம்ச திட்டம்

தமிழக அரசு "டாக்டர் ஜெ. ஜெயலலிதாவின் 15 அம்சத் திட்டம்" என்ற பெயரில் 1993 இல் குழந்தைகள் தினத்தன்று குழந்தைகள் நலத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. அதில் 8வது அம்சம் குறைந்தபட்சம் 5வது ஆண்டு வரை குழந்தைகள் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்ற திட்டம் சட்டமாக்கப்படும் என்பதாகும். ஆகவே 6 வயது முதல் 11 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் கட்டாய ஆரம்பக்கல்வி என்ற சட்டம் 1994–95 இல் இயற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொடக்கக் கல்வியில் வலியுறுத்தப்படுவது

(அ) பள்ளி செல்லும் வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்தல், அவ்வாறு சேர்ந்த குழந்தைகளை 14 வயது வரை தொடர்ந்து படிக்கச் செய்தல்

(ஆ) கல்வியின் தரத்தில் நிறைவான முன்னேற்றத்தை அடைதல்

(இ) பெண்கள் கல்வியை மேம்படுத்துதல்

(ஈ) கல்வி கற்பிப்பதில் ஆண். பெண் பாகுபாடுகளை நீக்குதல் மற்றும்

(உ) சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கு கல்வியளித்தல்

## 2. மாணவர் சேர்க்கை

1982 ஆம் ஆண்டு கல்வி வளர்ச்சியில் ஒரு திருப்புமுனை வாய்ந்ததாகும். ஏனெனில் இந்த ஆண்டில்தான் மாணவர்கள் பெருமளவில் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். இதற்குக் காரணம் இந்த ஆண்டில்தான் அப்போதைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பள்ளி மாணவர்களுக்கென வரலாறு படைத்த சத்துணவு திட்டத்தை தொடங்கிவைத்தார்.

1981–82 ஆம் ஆண்டிற்கு முன்னால் தொடக்கப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 44.72 இலட்சத்திற்கும் குறைவாக இருந்தது.

சத்துணவு திட்டம் தொடங்கப்பட்டதால் ஒவ்வொரு ஆண்டும் மாணவர் சேர்க்கை வீதம் கணிசமான அளவில் உயர்ந்தது. இது இன்று 57.20 இலட்சத்தை எட்டியுள்ளது. இது பள்ளியிலிருந்து மாணவர் நின்றுவிடும் விகிதத்தை வெகுவாக குறைத்து படிப்பறிவு பெற்றவர்கள் எண்ணிக்கையை உயர்த்தி தரமான கல்வியை அளிக்க வழிவகுத்திருக்கிறது. இதன்மூலம் கிராமப்புறங்களில் வாழும் ஏழை மற்றும் வசதியற்ற மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது.

தொடக்கப் பள்ளியில் மாணவர் சேர்க்கை பின்வருமாறு:

| வ.எண். (1) | ஆண்டு (2) | மாணவர் (3) | மாணவியர் (4) | மாணவர்களின் சேர்க்கை (5) |
|---|---|---|---|---|
| | | | (இலட்சங்களில்) | |
| 1. | 83–84 | 26.21 | 21.85 | 48.06 |
| 2. | 84–85 | 26.53 | 26.59 | 48.92 |
| 3. | 85–86 | 27.30 | 23.12 | 50.42 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 4. | 86–87 | 28.09 | 23.68 | 51.77 |
| 5. | 87–88 | 28.58 | 24.14 | 52.72 |
| 6. | 88–89 | 28.99 | 24.63 | 53.62 |
| 7. | 89–90 | 29.41 | 25.05 | 54.46 |
| 8. | 90–91 | 29.80 | 25.70 | 55.50 |
| 9. | 91–92 | 30.19 | 26.06 | 56.25 |
| 10. | 92–93 | 30.39 | 26.33 | 56.72 |
| 11. | 93–94 | 30.60 | 26.60 | 57.20 |

பொதுவாக மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மக்கட்தொகைப் பெருக்கத்திற்கேற்ப 6–11 வயதுப் பிரிவிலும் 11–14 வயதுப் பிரிவிலும் அதற்கேற்றவாறு மாணவர் சேர்க்கை அதிகமாகி அரசுக்கு கூடுதலான சுமையை ஏற்படுத்தியுள்ளது. தொடக்கத்தில் 6–14 வயது மாணவர் சேர்க்கை நிலை 1984–85, 1991–92, 1992–93 மற்றும் 1993–94 ஆண்டுகளில் படிப்படியாக உயர்ந்துள்ளதை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வயது | வகுப்பு | 84–85 | 90–91 | 91–92 | 92–93 | 93–94 |
|---|---|---|---|---|---|---|
| | | | | (இலட்சங்களில்) | | |
| தொடக்கம் | | | | | | |
| 6–11 | 1–5 | 70.44 | 77.64 | 78.50 | 79.36 | 80.21 |
| நடுநிலை | | | | | | |
| 11–14 | 6–8 | 23.19 | 31.59 | 32.84 | 34.09 | 35.35 |
| மொத்தம் | | 93.63 | 109.23 | 111.34 | 113.45 | 115.56 |

6–14 வயதுப் பிரிவில் மாணவர் பள்ளியிலிருந்து நின்றுவிடும் விகிதத்தைக் குறைப்பதும் மாணவர் சேர்க்கையினை 100 சதவிகிதமாக உயர்த்துவதும் பள்ளியைவிட்டு விலகாமல் இருக்கச் செய்வதும் இவ்வரசின் சீரிய முயற்சியாக இருக்கிறது.

## 3. மாநிலத்தில் தொடக்கக் கல்வி வளர்ச்சி

அனைவருக்கும் தொடக்கக் கல்வியளித்தல் என்ற கோட்பாட்டினை எய்த மாநிலத்தில் தொடக்கக் கல்வியில் ஒரு சீரான வளர்ச்சி இன்றியமையாததாகும். இந்த நிலை ஏற்படுவதற்கு பள்ளிகள் மாணவர்களின் இருப்பிடங்களுக்கு அருகாமையில் இருக்க வேண்டும்.

5,000 மற்றும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 340 குடியிருப்புகளிலும் தொடக்கப் பள்ளிகள் அமைந்துள்ளன. 2,000 முதல் 4,999 வரை மக்கள்தொகை கொண்ட 2,906 குடியிருப்புகளில் 2,792 இல் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. ஒரு கிலோ மீட்டர் இடைவெளி கொண்ட 2,895 குடியிருப்புகளில் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இது முறையே குடியிருப்புகளில் 99.6 சதவீதமும் மக்கள்தொகையில் 99.7 சதவீதமும் ஆகும். 1,000 முதல் 1,999 மக்கள்தொகைக்கு 98.9 சதவீதமும் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. மக்கள்தொகை குறைய இச்சதவீதமும் குறைந்து கொண்டே வருகிறது. 500 மற்றும் அதற்கு மேல் மக்கள்தொகை கொண்டதும் 1 கிலோ மீட்டர் தூரத்திற்குட்பட்டதுமான பள்ளிகளில்லாத பகுதிகளில் புதிய தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிப்பது அரசின் கொள்கையாகும். 1981–82 முதல் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து முன்னேற்றம் காணப்படுகிறது. அதாவது 28,548 ஆக இருந்த பள்ளிகளின் எண்ணிக்கை 1993–94 இல் 30,329 ஆக உயர்ந்துள்ளது. தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு உயர்ந்து வருவதை கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகளின் வளர்ச்சி**

| வ.எண் | ஆண்டு | தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை | நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|
| 1. | 1983–84 | 28,548 | 5,635 | 34,183 |
| 2. | 1984–85 | 28,847 | 5,691 | 34,538 |
| 3. | 1985–86 | 29,118 | 5,691 | 34,809 |
| 4. | 1986–87 | 29,268 | 5,663 | 34,931 |
| 5. | 1987–88 | 29,319 | 5,749 | 35,068 |
| 6. | 1988–89 | 29,359 | 5,707 | 35,066 |
| 7. | 1989–90 | 29,491 | 5,651 | 35,142 |
| 8. | 1990–91 | 29,979 | 5,624 | 35,603 |
| 9. | 1991–92 | 30,004 | 5,581 | 35,585 |
| 10. | 1992–93 | 30,098 | 5,608 | 35,706 |
| 11. | 1993–94 | 30,329 | 5,593 | 35,922 |

1A

## 4. பள்ளியைவிட்டு இடையில் நின்று போவதற்குக் காரணமான பிரச்சினைகள்

மாணவர்கள் பள்ளிகளிலிருந்து அதிக அளவில் இடையில் நின்று போவதற்கு பின்வருபவை பெரிதும் காரணமாக அமைகின்றன :

1. மாணவர்களின் குடும்பங்களின் ஏழ்மை மற்றும் பொருளாதார சூழ்நிலை.
2. குடும்ப வருமானத்தைப் பெருக்க வேலைக்கு சென்று பொருளீட்ட வேண்டிய நிலை.
3. வீட்டிலுள்ள சிறு குழந்தைகளைப் பராமரிக்க வேண்டிய சூழ்நிலை.

1993–94 ஆம் ஆண்டில் தொடக்கப் பள்ளியிலிருந்து இடையில் நின்றுபோன மாணவர் சதவீதம் பின்வருமாறு :

| வகுப்புகள் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 முதல் 5 வரை | 16.39 | 18.35 | 17.30 |
| 1 முதல் 8 வரை | 32.16 | 41.20 | 36.35 |

பள்ளிப்படிப்பை இடையில் விட்டுச் செல்லும் மாணவிகளின் எண்ணிக்கை மாணவர்கள் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ளது. ஆதலால் 6–14 வயதுள்ள மாணவிகளின் சேர்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென அரசு கருதுகிறது.

ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலிருந்து இடையில் நின்றுபோன மாணவ மாணவிகளின் எண்ணிக்கை குறைந்தும் தொடர்ந்து படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தும் வருகின்றது.

## 5. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளியை விட்டு விலகுவோரின் எண்ணிக்கை

| | | தொடக்க விழுக்காடு | |
|---|---|---|---|
| *வ.எண். (1)* | *வருடம் (2)* | *6–11 வயது பிரிவு (3)* | *6–14 வயது பிரிவு (4)* |
| 1. | 1984–85 | 23.14 | 58.75 |
| 2. | 1985–86 | 22.48 | 56.45 |
| 3. | 1986–87 | 22.29 | 52.45 |
| 4. | 1987–88 | 21.78 | 48.22 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5. | 1988–89 | 21.42 | 45.97 |
| 6. | 1989–90 | 21.05 | 45.43 |
| 7. | 1990–91 | 20.32 | 44.48 |
| 8. | 1991–92 | 19.31 | 41.67 |
| 9. | 1992–93 | 18.27 | 38.86 |
| 10. | 1993–94 | 17.30 | 36.35 |

மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிடும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்க ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் தீவிரமாக்கப்படும்.

1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்
2. இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்
3. இலவச சீருடை வழங்கும் திட்டம்
4. இலவசக் காலணி வழங்கும் திட்டம்
5. பள்ளி செல்லும் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்.
6. 1 ஆம் வகுப்பில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசப் பலகைகள் வழங்கும் திட்டம்.

1993–94 ஆம் கல்வியாண்டில் 305 இடைநிலையாசிரியர் பணியிடங்கள் புதியதாக தொடங்க இருக்கும் தொடக்கப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்டு அவ்வாண்டுக்கான குறிக்கோள் நிறைவேற்றப்பட்டது.

தற்போதைய அரசு ஆரம்பக் கல்வியின் தரத்தினை உயர்த்தவும் குறைந்தபட்ச அளவு கற்றலை (Minimum level of learning) உறுதிப்படுத்தவும் 1 முதல் 3 வகுப்புவரை பயிலும் பிள்ளைகளை தேர்ச்சியின்றி நிறுத்தக்கூடாது என்ற கொள்கை கைவிடப்பட்டது. அனைத்து பள்ளி வகுப்புகளிலும் இனி தேர்வுகள் நடத்தப்படும்.

### 6. கரும்பலகைத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஓராசிரியர் பள்ளிகள் ஈராசிரியர் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. கட்டட வசதியில்லாத பள்ளிகளுக்கு இரண்டு அறைகள் கொண்ட கட்டடம் கட்டித் தரப்படுகிறது. கற்பிப்பதற்கு இன்றியமையாத பொருள்கள் தொடக்கப் பள்ளிகளுக்கு மூன்று கட்டங்களில் வழங்கப்பட்டுள்ளன.

1B

இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட 1,829 இடைநிலையாசிரியர் பணியிடங்கள் ஏற்கனவே உள்ள 1,829 ஓராசிரியர் பள்ளிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாசிரியர் நியமனத்திற்காக 31–3–1992 வரை ஆன செலவினம் ரூ. 1,204.28 இலட்சமாகும். இத்தொகை நடுவண் அரசால் வழங்கப்பட்டுள்ளது. கற்பிப்பதற்குத் துணையாகும் பொருட்களும் நூலகப் புத்தகங்களும் 29,075 தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக ரூ.2,306.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 2,227.51 இலட்சம் மூன்று கட்டங்களில் செலவு செய்யப்பட்டுள்ளது.

கரும்பலகைத் திட்டத்தின் நான்காவது கட்டத்தில் 120 ஆரம்பப் பள்ளிகளுக்கும் 560 நடுநிலைப் பள்ளிகளில் உள்ள தொடக்க நிலை வகுப்புகளுக்கும் கற்பிப்பு பொருள்கள் வழங்கத் தேவையான கருத்துருக்கள் நடுவண் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 895 ஓராசிரியர் பள்ளிகளை ஈராசிரியர் பள்ளிகளாகவும். 4613 ஈராசிரியர் பள்ளிகளை மூவாசிரியர் பள்ளிகளாகவும் மாற்ற கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. 1197 பள்ளிகளுக்கு மூன்றாம் அறை கட்டித் தரவும் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கரும்பலகைத் திட்டத்தின் கீழ் நான்காம் கட்டமாக மேற்படித் திட்டத்தினை செயல்படுத்த மொத்தச் செலவினம் ரூ.30.48 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 7. நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் கல்வியினை மேம்படுத்துதல்

அறிவியல் கல்வி மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் முதலாம் கட்டமாக 1,159 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.19.08 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 1,151 நடுநிலைப் பள்ளிகளுக்கு இப்பெட்டகங்கள் ரூ.13.24 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டத்தில் 328 நடுநிலைப்பள்ளிகளுக்கு ரூ.5.25 இலட்சம் செலவில் அறிவியல் பெட்டகம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 2,002 நடுநிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் பெட்டகம் வழங்க ரூ.40.04 இலட்சம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 8. தொழில் நுட்பவியல் மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 2,666 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 2,666 வானொலி மற்றும் ஒலிப்பதிவுக் கருவிகள் ரூ.30 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. இத்தொகை நடுவண் அரசால் அனுமதிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 6,222 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் பயனடைய ரூ. 70 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. மூன்றாம் கட்டமாக 10,000 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு வானொலி மற்றும் ஒலிப்பதிவுக் கருவிகள் வழங்க ரூ.100 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டியும் ஒலிப்பதிவுப் பெட்டியும் வழங்கப்பட்டுள்ளது. நான்காம் கட்டமாக 16178 பள்ளிகளுக்கு ரூ.161.78 இலட்சம் செலவில் வானொலி மற்றும் ஒலிப்பதிவு கருவிகள் வழங்க நடுவண் அரசுக்குக் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

## 9. உலக வங்கியின் உதவிபெறும் வளர்ச்சித் திட்டம்

உலக வங்கியின் உதவியோடு தீவிரப்படுத்தப்படவிருக்கின்ற விரிவான "மாவட்ட தொடக்கக் கல்வி திட்டம்" (District Primary Education Programme).

### திட்டத்தின் நோக்கம்

1. பள்ளிகளின் அடிப்படை வசதிகளை – குறிப்பாகப் பழங்குடியினர் வாழ் பகுதிகளில் பலப்படுத்துதல்.
2. கல்வியின் தரத்தை உயர்த்துதல்.
3. கல்வித்துறை நிர்வாகிகளையும் ஆசிரியர்களையும் காலத்தின் வளர்ச்சிக்கேற்ப உயர்வடையச் செய்தல்.
4. கல்வியில் மகளிர் நிலையை ஊக்குவித்தல்.
5. மலைவாழ் மாணவர்களுக்கென "உடனுறைப் பள்ளிகள்" திறத்தல்.

எல்லோருக்கும் தொடக்கக் கல்வி அளிக்கவும், பள்ளியிலிருந்து மாணவர்கள் இடையில் நின்றுவிடுவதை தடுக்கவும், பெண்கள் கல்வியின் முன்னேற்றத்திற்கும் கல்வி கற்பிப்பதில் ஆண், பெண் பாகுபாடுகளை நீக்குவதற்கும், சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பள்ளி, பள்ளிசாராக் கல்வி மூலம் கல்வி அளிப்பதற்கும் தமிழக

1C

அரசு அதிக சிறப்பிடம் அளித்து வருகிறது. ஏற்கனவே உருவாக்கப்பட்டு வருகின்ற மாவட்ட ஆரம்பக் கல்வித்திட்டம் என்ற உலக வங்கி திட்டத்தின் மூலம் வரவுள்ள ரூ. 120 கோடி நிதியுதவியுடன் மேற்காண் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. இத்திட்டம் ஆரம்பத்தில் தர்மபுரி, இராமசாமி படையாச்சியார், திருவண்ணாமலை சம்புவராயர், தென் ஆற்காடு வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில் ஆரம்பக் கல்வியின் தரத்தினை ஊரகப் பகுதிகளில் உயர்த்த பயன்படும்.

இத்திட்டத்தினை செயற்படுத்துவதால் பரந்துபட்ட தொடக்கக் கல்வியானது இப்போது இருப்பதைவிடச் செழித்துத் தழைத்து கி.பி. 2000 இல் தலைமுறை முழுவதும் கல்விக்கண் பெற்று 21 வது நூற்றாண்டில் பீடுநடை போடும்.

## 1994–95 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள உத்தேசத்திட்டங்கள் பள்ளி சேர்க்கையும், தக்க வைத்தலும்

### குறிக்கோள்கள்

(அ) 6–7 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளையும் நூறு சதவீதம் பள்ளியில் சேர்த்தல்.

(ஆ) ஒன்றாம், இரண்டாம் வகுப்புகளில் உள்ள நூறு சதவீதம் குழந்தைகளையும் பள்ளியைவிட்டு விலகாது தொடர்ந்து கல்வி பயிலச்செய்தல்.

(இ) தொடக்கப் பள்ளிகளில், பள்ளிச் சிறார்கள் பள்ளியைவிட்டு விலகும் சதவீதத்தை பத்து சதவீத அளவுக்கு குறைத்தல்.

மேற்குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை அடைய உத்தேசித்துள்ள செயல்முறை திட்டங்கள்:

1. 'அனைவர்க்கும் கல்விக்கான' குறிக்கோளினை எய்திட அனைத்துத்து வருவாய் மாவட்டங்களிலும் பள்ளிக் கல்வி வரைபட பணிகள் (Mapping) உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

2. கட்டாயத் தொடக்கக் கல்வியை நடை முறைப்படுத்துதல்.

   (அ) மாநிலம் முழுவதும் அனைவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டாயக் கல்வி முறைக்குச் சட்டமியற்றல்.

(ஆ) சட்டம் இயற்றப்பட்டமை குறித்து பரவலான விளம்பரங்கள் மூலமாக பொதுமக்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டி உடனே தம் மக்களை பள்ளியில் சேர்க்க வேண்டியது பற்றிய கருத்தேற்றமும் செய்தல். இதனை பல்வேறு மக்கள் தொடர்பு சாதனங்கள் வழியாகவும் மாவட்ட நிர்வாக உதவியுடனும் செயல்படுத்தல்.

(இ) அனைத்து குழந்தைகளையும், கட்டாயமாகப் பதிவுபடுத்த, கிராமக் கல்விக்குழு மற்றும் அன்னை ஆசிரியர் குழு போன்ற அமைப்புக்களின் ஒத்துழைப்பை நாடுதல்.

(ஈ) 1994–95ல் ஒன்றாம் இரண்டாம் வகுப்புகளில் பிள்ளைகளைச் சேர்க்குமாறு கட்டாயக் கல்வித் திட்டத்தை அமல்படுத்துதல்.

(உ) பள்ளிச் சிறுவர்களை பிற பணிகளில் அமர்த்துவோரை திட்டவட்டமாகத் தடுக்கவகை செய்யும் சிறார் உழைப்புத்தடை சட்டத்தை குழந்தைகளுக்கும் கண்டிப்பாக அமலாக்குதல்.

(ஊ) நிர்ணயிக்கப்பட்ட குறியிலக்கான சேர்க்கை, விலகாது பேணல், வகுப்புகளை நிறைவு செய்தல் ஆகியவற்றில் சாதனை புரியும் ஊராட்சி மன்றங்களை ஒன்றியங்களை மாவட்டங்கள் வாரியாகத் தேர்ந்தெடுத்து பாராட்டுகளும் பரிசுகளும் வழங்குதல்.

(எ) பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மரபினர் வேலைக்குச் செல்லும் சிறுவர்கள், சிறுமிகள், தெரு வாழ்வோர் குழந்தைகள் மற்றும் கல்வியில் பின்தங்கிய குழந்தைகள் ஆகியோரை முன்னுரிமை அடிப்படையில் பள்ளியில் சேர்த்தல்.

(ஏ) கல்வியின் தரத்தை உயர்த்த நல்ல கற்பிப்பு உபகரணங்கள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தல் ஆசிரியர்களுக்கு பணியிடைப்பயிற்சி அளித்தல்.

(ஐ) வேலைக்குச் செல்லும் சிறுவர்கள் அதிகமாக உள்ள இடங்களில், உள்ளூர் நிலை மற்றும் தேவைக்கேற்ப கல்வி அமைப்பில் அலைநெகிழ்வுத் தன்மை உருவாக்குதல். மாற்றுமுறைப் பள்ளி நடைமுறைப்படுத்துதல் மற்றும் வெவ்வேறு நேரங்களில் பள்ளிகளை நடத்துதல்.

### மொத்த நிதி ஒதுக்கீடு

| வ.எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது | திட்டம் | திட்டத்தில் சேராதது | திட்டம். |
| | | (ரூபாய் இலட்சங்களில்) | | | |
| 1. | 1991–92 | 50467.81 | 3922.46 | 59343.45 | 4403.97 |
| 2. | 1992–93 | 60290.47 | 3205.14 | 70474.37 | 4539.80 |
| 3. | 1993–94 | 84644.24 | 3830.67 | 82095.43 | 4074.90 |
| 4. | 1994–95 | 83007.81 | 4109.91 | | |

## II உயர் /மேநிலைக்கல்வி

பல்வேறு கல்வி நிலைகளுள் இடைநிலைக் கல்வி தொடக்கக் கல்விக்கும், உயர்கல்விக்கும் ஒரு இணைப்புப் பாலமாக உள்ளது. மாணவர்களின் திறன், இயல்பு, ஆர்வம், பண்பு ஆகியவை இந்நிலையிலேயே வளர்கின்றன.

பள்ளிக் கல்விக்குத் தமிழ்நாட்டில் எப்பொழுதும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

### பள்ளியில் மாணவர் சேர்க்கை

30–9–1993 ஆம் நாளின் கணக்குப்படி பள்ளி செல்லும் 14 முதல் 16 வயது நிலையிலுள்ள 20.37 இலட்சம் குழந்தைகளில் 13.13 இலட்சம் குழந்தைகள் 9 ஆம் வகுப்பிலும் 10 ஆம் வகுப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இது 64.44 சதவீதம் ஆகும். ஒவ்வொரு ஆண்டிலும் இந்த வயது நிலையிலுள்ளவர்கள் 0.50 இலட்சம் சேர்க்கப்படவேண்டும் என்பது ஆண்டு வரையறை ஆகும். ஆனால் 1993–94 ஆம் ஆண்டில் கூடுதலாக 0.52 இலட்சம் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் 3270 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 2221 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. மாநிலக் கல்வித்துறை பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆகியவற்றில் மொத்தம் 1,16,825 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இப்பள்ளியில் பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| மாணவர்கள் | .. | 26.12 | இலட்சங்கள் |
| மாணவியர் | .. | 19.33 | இலட்சங்கள் |
| மொத்தம் | .. | 45.45 | இலட்சங்கள் |

### புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறத்தல்

1986–87 இல் தமிழ்நாட்டில் நடத்தப்பெற்ற 5–வது அகில இந்திய கல்வி அளவீட்டின்படி 6 கி.மீ. தூரத்திற்கும் அப்பால் உயர்நிலைப் பள்ளிக் கல்வி வசதிகளுடைய இடங்கள் பின்வருமாறு :

| மக்கள் தொகை | குடியிருப்புப் பகுதிகள் |
|---|---|
| 1. 5000ம் பேரும் அதற்கு மேலும் | 11 |
| 2. 2000ம் பேரிலிருந்து 4999 பேர் வரை | 198 |
| 3. 1000ம் பேரிலிருந்து 1999 பேர்வரை | 944 |

1986–87 முதல் 1993–94 வரை 701 புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டதுடன் ஒவ்வொரு ஆண்டும் குடியிருப்புப் பகுதிகளின் தேவைக் கேற்ப 14–16 வயதுடைய மாணவர்களை அதிகம் சேர்க்கும் பொருட்டு புதிய பள்ளிகள் திறக்கப்படுகின்றன. 1994–95 இல் 25 அரசு உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்படவிருக்கின்றன. அரசுக் கொள்கையின்படி கிராமப்புறங்களில் புதிய அரசுப் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசுக் கொள்கையின்படி 1991–92 க்குப்பின் திறக்கப்படும்/அங்கீகரிக்கப்படும் பள்ளிகள் சுயநிதியில் செயல்படவேண்டும் என்னும் அடிப்படையில் அனுமதிக்கப்படுகின்றன. இன்றியமையாத் தேவையை முன்னிட்டே அரசு/ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும்.

### புதிய மேநிலைப் பள்ளிகள் தொடங்குதல்

கோத்தாரிக் கல்விக்குழுவின் (1964–66) பரிந்துரைப்படி 10+2+3 கல்வி அமைப்பு தமிழ்நாட்டில் 1978–ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 11, 12 வகுப்புகள் பள்ளிகளில் இடம்பெற்றன. இந்த அமைப்பின்படி கிராமப்புற மக்கள் அதிக எண்ணிக்கையில் பயனடைந்தனர்.

5 ஆவது அகில இந்தியக் கல்வி அளவீட்டின்படி (1986–87) 8 கி.மீ. தொலைவில் மேநிலைப்பள்ளி வசதி உள்ள மக்கள் தொகையும் குடியிருப்புகளும் வருமாறு :

| மக்கள் தொகை | குடியிருப்பு பகுதிகள் |
|---|---|
| 1. 5000 பேரும் அதற்கு மேலும் | 28 |
| 2. 2000 பேருலிருந்து 4999 பேர் வரை | 680 |

1986–87 முதல் 1993–94 வரை, 645 மேல்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. 1994–95 இல் பல்வேறு பகுதிகளில் மேலும் 12 அரசு மேல்நிலைப் பள்ளிகள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 30–9–93 இன்படி 16 முதல் 18 வயது வரையிலான 19.22 இலட்சம் பள்ளி செல்லும் வயதிலுள்ள மாணவர்களுள் இதுவரையிலும் 5.70 இலட்சம் மாணவர்களே பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது 29.64 சதவீதம் ஆகும்.

### அறிவியல் கல்வி முன்னேற்றம்

உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்கள் அமைக்கப்படவேண்டும் என்னும் மாநிலத் திட்டத்தின் கீழ் 1988–89 ஆம் ஆண்டு முடிய 1,163 உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி கருவிகள் பொது அளவில் வாங்கப்பட்டு பயன்பெறும் பள்ளிகளுக்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் வழங்கப்படும். இவ்விதம் ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ.25,000 மதிப்புள்ள பொருட்கள் வழங்கப்படும். ஒவ்வொரு அரசுப் பள்ளிக்கும் ஆய்வகச் செலவு ரூ. 1 இலட்சம் ஆகும். நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வகக் கட்டடச் செலவில் 60 சதவீதம் அல்லது ரூ. 48,000 இதில் எது குறைவானதோ அத்தொகை வழங்கப்படும். 1994–95 ஆம் ஆண்டில் 20 பள்ளிகளுக்கு ஆய்வக வசதிகள் செய்து கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்

அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டடத்தின் தேவை மிகுந்துள்ளது. இதற்கென இவ்வரசு ஈட்டு மானிய அடிப்படையில் ரூ. 75 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. அதே நேரத்தில் பள்ளி வளர்ச்சி மாநாடுகள் மூலம் பொதுமக்களின் தீவிர ஆதரவைத் திரட்டும் திட்டமொன்றையும் கொண்டு வந்துள்ளது. இதன்மூலம் ஏற்கனவே மாநிலம் முழுமையும் பல்வேறு பள்ளிகளில் பள்ளி வகுப்பறை முதலான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அண்மையில் உயர்நிலை மேநிலை பள்ளிகளின் அடிப்படை வசதிகளை கண்டறியும் முகத்தான் ஒரு அளவீடும் நடத்தப்பட்டது.

### பாடத்திட்டம் புதுப்பித்தல்

ஒரு கல்வி முறையில் பாடத்திட்டமே முதுகெலும்பு ஆகும். நல்ல பாடத்திட்டமே சிறந்த கல்வியை மாணவர்களுக்கு அளிக்க முடியும். தற்போது பின்பற்றப்படும் பாடத்திட்டம் 6 ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பிக்கப்பட்டது. எனவே 1994–95 ஆம் ஆண்டில் பாடத்திட்டத்தைத்

புதுப்பிக்க அரசு உத்தேசித்துள்ளது. இவ்விதம் பாடத்திட்டம் தயாரிக்கும்போது மாணவர்களின் கல்விச் சுமையைக் குறைக்க யஷ்பால் குழு கூறியுள்ள பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

## பெண்கல்வி

விகிதாச்சார வளர்ச்சியும் சமூக நீதியும் பெற பெண் கல்வியும் சமத்துவமும் இன்றியமையாதது.

பள்ளியில் சேரத் தகுதியுடைய வயதிலுள்ள பெண்களின் எண்ணிக்கையும் பள்ளியில் சேர்ந்து பயிலும் பெண்களின் எண்ணிக்கையும் வருமாறு :

| | வயது நிலை | பள்ளி செல்லும் வயதுள்ள பெண்களின் எண்ணிக்கை | பள்ளியில் சேர்ந்துள்ள பெண்களின் எண்ணிக்கை | பள்ளியில் சேர்க்கை விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | 6–11 | 39.32 | 37.15 | 94.49 |
| 2. | 11–14 | 18.11 | 15.49 | 85.51 |
| 3. | 14–16 | 10.07 | 5.27 | 52.33 |
| 4. | 16–19 | 9.50 | 2.37 | 24.97 |

பள்ளியில் 1 முதல் 12 வகுப்புவரை சேர்ந்துள்ள 134.39 இலட்சம் மாணவர்களுள் 60.28 இலட்சம் பேர் மாணவியர். இது மொத்தத்தில் 45 சதவீதம் ஆகும். அனைத்துப் பள்ளிகளிலும் பணியாற்றும் 2,95,413 ஆசிரியர்களுள் 1,26,106 பேர் ஆசிரியைகள். இது மொத்தத்தில் 43 சதவீதம் ஆகும். உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 45.45 இலட்சம் மாணவர் சேர்க்கப்பட்டுள்ளதில் 19.33 இலட்சம் பேர் பெண்கள்; உயர்நிலை, மேனிலைப் பள்ளி ஆகியவற்றில் பணியாற்றும் 1.17 இலட்சம் ஆசிரியர்களுள் 0.48 இலட்சம் ஆசிரியர்கள் பெண்கள். இது மொத்தத்தில் 41 சதவீதம் ஆகும். பெண் கல்விக்கும் பெரும் ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. எனவேதான் நாட்டிலேயே நம் மாநிலத்தில்தான் கல்வியை இடையில் விட்டுச் செல்வோர் விகிதம் கேரளாவிற்கு அடுத்த படியாக குறைவாக உள்ளது. பெண்கள் கல்வியையும், சமத்துவத்தையும் நிலைநாட்ட நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள திட்டங்களாவன :

1. கல்வி அறிவு பெற்ற பெண்களுக்குச் சிறப்புத் திருமண மானியம் சிறு குடும்ப நெறியைப் பின்பற்றும் பெண்களுக்கு சிறப்பு ஊக்க நிதி.

2. 11 முதல் 14 வயது வரையும் 14 முதல் 16 வயது வரையும் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/மலைவாழ் மக்கள் ஆகிய இனத்தைச் சார்ந்த பெண் குழந்தைகளை அதிக அளவில் பள்ளியில் சேர்த்தும் அவர்கள் தொடர்ந்து கல்வி பயிலத்தூண்டும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு பணப்பரிசு வழங்குதல். இத்திட்டம் அதிக அளவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/ மலைவாழ் மக்கள் ஆகிய இனத்தைச் சார்ந்த பெண் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கத் தூண்டுகோலாக உள்ளது.

3. பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் 1 முதல் 5 வயது வரையிலான வகுப்புகளுக்கு ஆசிரியைகளையே நியமித்தல்.

## மேநிலைப் பள்ளிக் கல்வி நிலையில் தொழிற் கல்வி

மேநிலைப் பள்ளி நிலையில் தொழிற் கல்வியை அறிமுகப்படுத்துவதில் நம் தமிழகத்திற்கு அகில இந்திய அளவில் பெருமை கிடைத்துள்ளது.

விவசாயம், மனையியல், வணிகவியல், பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல், பொது சுகாதாரம் இதர பாடங்கள் என்கிற வகையில் 66 பாடங்கள் மேநிலைப் பள்ளி நிலையில் தொழிற் கல்வித் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேநிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | | 1993–94 |
|---|---|---|
| 1. | மேநிலைப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை | 1731 |
| 2. | தொழிற் கல்வி வழங்கப்படும் மேநிலைப்பள்ளிகள் | 1313 |
| 3. | 11 மற்றும் 12 வகுப்புகளில் மொத்த மாணவர் எண்ணிக்கை | 5,70,000 |
| 4. | தொழிற்கல்வி வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கை | 97,816 |
| 5. | மொத்த மாணவர் எண்ணிக்கையில் தொழிற்கல்வி மாணவர் எண்ணிக்கை | 17.17% |
| 6. | தொழிற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை | 3513 |

தொழிற் கல்வியை மேலும் சிறப்பாகச் செயல்படுத்த உரிய வழி முறைகளைக் கூற டாக்டர் எச்.எஸ்.எஸ்.லாரன்ஸ் தலைமையில்

வல்லுநர் குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழு அரசு நிலையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி பரிந்துரைகள் செய்து, அறிக்கைகள் வழங்கும்.

### மாவட்ட அளவில் சீர்மிகு உயர்பள்ளி

தமிழ்நாடு அரசு புதிதாகச் சீர்மிகு உயர்பள்ளியை அறிமுகப்படுத்தியுள்ளது. மிகவும் பின்தங்கிய பகுதியான தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரில் 1993–94 ஆம் ஆண்டில் புரட்சித் தலைவி சீர்மிகு உயர்பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. இதேபோன்று எஞ்சிய மாவட்டங்களிலும் கிராமப்புற மாணவர்களுக்கென சீர்மிகு பள்ளிகள் திறக்கப்படும்.

### பள்ளி ஒருங்கிணைப்பு

கல்வியில் சிறப்படையவும், பயிற்சி அளிக்கவும் எல்லாக் கல்வி மாவட்டங்களிலும் பள்ளித் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் நன்மைகளாவன :

மேநிலைப் பள்ளிகளிலுள்ள நூலகம், ஆய்வகம், விளையாட்டு மைதானம், ஒலி ஒளிக்கருவிகள், சிறப்பாசிரியர்களின் பணி ஆகியவை அருகிலுள்ள வசதிகளற்ற பள்ளிகளுக்கும் பயன்படும். மேநிலைப் பள்ளி ஆசிரியர்களால் உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### சிறப்பு மேற்பார்வைக் கல்வி

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் கல்வியை மேம்படுத்த 8,9,10 ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலம் கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களில் பள்ளி வேலை நாட்களில் மாலை வேளைகளில் பள்ளி முடிந்தபின் சிறப்பு மேற்பார்வைக் கல்வி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 625 உயர்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 375 மேநிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வீட்டில் போதிய வசதிகளற்ற பிற இனங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு போதிய வாய்ப்பளிக்க சிறப்பு மேற்பார்வைக் கல்வி அளிக்கப்படுகிறது.

### மாநிலக் கல்வி ஆலோசனைக்குழு

மாநிலத்தின் கல்வி வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும், கல்விக்கான 8 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வி சிறப்பாக வலியுறுத்தப்பட்டியிருப்பதாலும் தமிழ்நாடு அரசு மாநிலக் கல்வி

ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழு கல்வி வளர்ச்சி கல்வித் திட்டமிடல், கல்வி நிர்வாகம் ஆகியவற்றில் கொள்கை ஆலோசனை வழங்கும். இக்குழு கல்வித்தரத்தை உயர்த்தவும், 1994–95 இல் நூற்றுக்கு நூறு விழுக்காடு எழுத்தறிவுடைமையை எட்டவுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

### உடற்கல்வி

ஆறாம் வகுப்பிலிருந்து 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பிற பாடங்களைப் போல உடற்கல்வியும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் உயர் வகுப்புகளுக்குச் செல்ல உடற்கல்வியிலும் தேர்ச்சிப் பெறவேண்டும். 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பில் பயிலும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அவர்களின் மாநில அளவு/தேசிய அளவு/உலக அளவு விளையாட்டு வெற்றியைக் கருத்தில் கொண்டு கருணை மதிப்பெண்கள் வழங்கிட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### பரிசுப் பணத்திட்டம்

கால்பந்து, ஆக்கி, கூடைப்பந்து, கைப்பந்து, பெண்கள் ஆக்கி, ஆண்கள், பெண்களுக்கான தடகள விளையாட்டு ஆகியவற்றில் முறையே மாவட்ட அளவில் முதலிடம் பெறும் பள்ளிகளுக்கு ரூ.10,000 வழங்கப்படுகிறது.

### பாரத சாரண / சாரணியர் இயக்கம்

மாநிலப் பள்ளிகளில் தற்போது 82,000 சாரணர்களும், 49,000 சாரணியர்களும் உள்ளனர். 1993–94 இல் எல்லாப்பள்ளிகளிலும் இந்த இயக்கத்தை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1994–95 கல்வியாண்டு முடிவுக்குள் அனைத்துப் பள்ளிகளிலும் இந்த இயக்கம் செயல்படுத்தப்படும்.

எல்லாப் பள்ளிகளிலும் தேசிய மாணவர்படை மற்றும் இளஞ் செஞ்சிலுவைச் சங்கம்/சாலைப் பாதுகாப்புக் குழு ஆகியவற்றைத் தொடங்க தனி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### சுயநிதிப் பள்ளிகள்

தமிழ்நாட்டில் 440 உயர்நிலைப் பள்ளிகளும், 772 மேநிலைப் பள்ளிகளும் தனியார் மேலாண்மையின் கீழ் நடைபெற்று வருகின்றன.

மாணவர்களின் தேவைக்கேற்ப அரசுப் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. பள்ளி தொடங்குவதற்கான விதிகளை நிறைவு செய்தால் அரசு மானியம் இல்லாமல் தனியார் பள்ளிகளைத் தொடங்க அனுமதிக்கப்படுகின்றனர். இப்பள்ளிகள் ஒரு போதும் அரசிடம் மானியம் பெறமுடியாது.

**சுயநிதி அடிப்படையில் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் ஆங்கிலவழி கற்பித்தல் பிரிவுகள் தொடங்குதல்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள விதிகளின்படி தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கில வழிக் கற்பித்தல் பிரிவுகளை சுயநிதி அடிப்படையில் தொடங்க அரசு அனுமதியளித்துள்ளது.

ஆங்கில வழிக் கற்பித்தலுக்குப் போதிய அடிப்படை வசதிகள் இருக்கவேண்டும். தற்போதுள்ள தமிழ் வழிக் கற்பித்தல் பிரிவுகளை ஆங்கில வழிக் கற்பித்தல் பிரிவுகளாக மாற்றக்கூடாது. தகுதியுள்ள ஆசிரியர்களை மேலாண்மையினர் நியமனம் செய்யலாம். தேவையான நிதியை மாத அடிப்படையில் மாணவர்களிடம் வசூலித்துக் கொண்டு ஆங்கில வழிக் கற்பிக்கும் ஆசிரியர்களின் ஊதியத்தைக் கொடுக்கலாம். மேலும் இதற்கு தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து கொள்ளலாம். கிராமப்புறங்களிலுள்ளவர்களும் ஆங்கில வழிப் பாடங்கள் பயில இத்திட்டம் உதவும்.

**மையக் கழக இடைநிலைக் கல்விப் பள்ளிகளில் தமிழ்நாட்டு அரசு மேநிலைப் பள்ளிப் பாட வகுப்புகள் தொடங்குதல்**

தமிழ்நாட்டில் மையக்கழக இடைநிலைக்கல்விப் பள்ளிகள் (CBSE) 89 உள்ளன. நம் மாநிலக் கழகப் பாடத்திட்டம், நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதும், பிரபலமானதும் ஆகும். மையக்கழக இடைநிலைக் கல்விப் பாடத்திட்டத்தில் பயிற்றுவித்து வரும் பள்ளிகள் தமிழ்நாடு அரசுப் பாடத்திட்டத்தில் வகுப்புகள் தொடங்க அனுமதி கேட்டிருப்பதிலிருந்து இது தெளிவாகிறது.

தமிழ்நாடு அரசினால் மையக் கழக இடைநிலைப் பள்ளிகளில் பிளஸ்–1, பிளஸ்–2 வகுப்புகளை தமிழ்நாட்டுப் பாடத்திட்டத்தின்படி தொடங்க அனுமதித்துள்ளது. இதன்படி முன்பே 3 மையக்கழகக் கல்விப் பள்ளிகளில் இவ்விதம் வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

**பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்**

பள்ளிகளின் வளர்ச்சிகளில் பொதுமக்கள் பங்கேற்க 1994–95 ஆம் ஆண்டில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி ரூ.100 கோடி

மதிப்புள்ள பொருட்களை அவர்களிடமிருந்து பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1993–94 ஆம் கல்வியாண்டில் இதுபோல் ரூ.100 கோடி மதிப்புள்ள பொருட்களும் வசதிகளும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு உள்ளன.

## பெற்றோர் ஆசிரியர் கழகமும், அன்னை ஆசிரியர் கழகமும்

பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்திட பெற்றோர் ஆசிரியர் கழகமும், அன்னை ஆசிரியர் கழகமும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் அரசுடன் ஒத்துழைக்க ஒரு அமைப்பாக விளங்குகிறது. 1994–95 ஆம் ஆண்டிலிருந்து 1975 சங்க விதியின்படி பதிவு செய்யப்பெற்ற கழகமாக இயங்கிவருகிறது. அதன் நோக்கங்களாவன :

1) பள்ளி செல்லும் வயதிலுள்ள குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல்.

2) பள்ளியை இடையில் விட்டு விடும் மாணவர்களின் எண்ணிக்கையை இல்லாமல் செய்வது.

3) கற்பித்தல், கற்றல் ஆகியவற்றை சிறப்பாக்கி ஒரே வகுப்பில் மாணவர் தேக்கத்தை இல்லாமல் செய்வது.

4) நல்லொழுக்கம், பண்பாடு, சுகாதாரம் ஆகிய விதிகளைக் கல்வியோடு இணைத்து கற்பித்தல்.

5) மைய, மாநில அரசுகளின் கல்வி முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்த உதவுவது.

பெற்றோர் ஆசிரியர் கழகமும், அன்னை ஆசிரியர் கழகமும் பள்ளி நலனுக்காகப் பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் பெறலாம். கட்டடம் கட்டுதல், சுற்றுச்சுவர் கட்டுதல், மின் வசதி செய்து கொடுத்தல், குடிநீர் வசதி செய்தல், கழிவறை வசதி, ஆய்வகங்களுக்குக் கருவிகள் வழங்கல், நூலகங்களுக்குப் புத்தகங்கள் வழங்கல் ஆகியவற்றிற்கென பொதுமக்களிடமிருந்து அசையும், அசையாச் சொத்துக்கள் நன்கொடையாக வாங்கலாம்.

## மைய அரசின் திட்டங்கள்

கீழே குறிப்பிட்டுள்ள மைய அரசின் திட்டங்கள் பள்ளிக் கல்வித் துறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## அறிவியற் கல்வி வளர்ச்சி

அறிவியற் கல்வி வளர்ச்சி என்னும் திட்டத்தின் கீழ் 3302 உயர்நிலை, மேநிலைப்பள்ளிகளுக்கு அறிவியல் கருவிகளும், அறிவியல் நூல்களும் வழங்கப்படுகின்றன. 19 மாவட்டங்களில் மாவட்டக் கருத்து மையங்கள் தொடங்கப்பெற்றுள்ளன. மைய அரசு இதுவரையில் 1212.80 இலட்சம் ரூபாயை 1 முதல் 4 கட்டமாக இதற்கென வழங்கியுள்ளது.

## மேல்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொழில்மயமாக்குதல்

1986 தேசிய கல்விக் கொள்கையில் குறிப்பிட்டபடியும், தொழிற் கல்வியில் மாநிலத்திற்கு உதவவேண்டும் என்னும் நோக்கத்திலும் பிளஸ்–2 நிலையில் தொழிற்கல்வி மயமாக்கும் திட்டத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி தொழிற்கூடம் அமைக்கவும், தொழிற் கருவிகள் வாங்கவும் 100% பொருளுதவி மைய அரசு வழங்கும் இத்திட்டத்தின்படி மைய அரசு ரூ.1541.46 இலட்சங்களை 560 பள்ளிகளில் தொழிற்கூடம் கட்டுவதற்காகவும், தொழிற்கருவிகள் வாங்குவதற்காகவும் தமிழக அரசுக்கு அளித்துள்ளது. மேலும் ஊதியம் வழங்க இந்திய அரசு ரூ.152.96 இலட்சங்கள் வழங்கியுள்ளது.

## இயலாதோர் ஒருங்கிணைந்த கல்வித்திட்டம்

பள்ளிகளில் இயலாத குழந்தைகளையும் பிற நல்ல நிலையிலுள்ள மாணவர்களுடன் கலந்து கல்வி பயில வாய்ப்பளிக்க வேண்டும் என்று 1986 தேசிய கல்விக்கொள்கை கூறுகிறது. இதன்படி (1) பார்க்க இயலாத (2) கேட்க இயலாத (3) மன வளர்ச்சி குறைந்த (4) உடற்குறை உடைய குழந்தைகளைப் பிற குழந்தைகளுடன் இணைந்து கல்வி பயிலச் செய்ய வேண்டும். அவர்கள் வாழ்வைத் துணிவுடன் எதிர்கொள்ள உரிய வழியில் அவர்களை உருவாக்க வேண்டும்.

கீழே குறிப்பிட்டுள்ள ஆறு ஊராட்சி ஒன்றியங்களில் கல்வித்துறை இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அதில் சேர்க்கப் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை வருமாறு :

| *ஊராட்சி ஒன்றியம் (1)* | *பார்வை இல்லாத (2)* | *கேட்க இயலாத (3)* | *மன வளர்ச்சி குன்றிய (4)* | *ஊனம் உற்ற (5)* | *மொத்தம் (6)* |
|---|---|---|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 27 | 63 | – | 126 | 216 |
| 2. திருவள்ளூர் | 157 | 76 | – | 192 | 425 |
| 3. மதுரை மாநகராட்சி | 163 | 36 | 13 | 293 | 505 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 4. திருவெறும்பூர் | 15 | 32 | 27 | 135 | 209 |
| 5. கூடலூர் | 29 | 19 | 13 | 56 | 117 |
| 6. பல்லடம் | 31 | 9 | 7 | 34 | 81 |
| மொத்தம் | 422 | 235 | 60 | 836 | 1553 |

### கணினி வழி எழுத்தறிவு

**உயர்நிலை /மேநிலைப் பள்ளிகளில் கணினி வழி எழுத்தறிவு:**

1984–85 ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதிலும் தேர்ந்தெடுக்கப் பெற்ற உயர்நிலை/மேநிலைப் பள்ளிகளில் ஒரு முன்னோடித் திட்டமாக கணினி எழுத்தறிவு மற்றும் கல்வித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக தமிழ்நாட்டில் 147 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றுள் 137 பள்ளிகள் பள்ளிக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்திற்குள் வருகின்றன. மீதமுள்ள 10 பள்ளிகள் கேந்திரியா வித்யாலயா பள்ளிகள் ஆகும். மேலும் 50 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கணினி அறிவியல் பொதுக் கல்வியில் தொழிற் பிரிவாக 397 மேநிலைப் பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன.

### கல்வித் தொலைக்காட்சி

கல்வி நுட்பவியலை விரிவுபடுத்துதல் என்னும் திட்டத்தின்படி தமிழ்நாட்டில் கல்வித் தொலைக்காட்சி நிலையம் கட்ட இந்திய அரசு ரூ.85 இலட்சங்கள் அனுமதித்துள்ளது. மாநிலக் கல்வி நுட்பவியல் நிறுவனத்திற்கு வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கு ஒலி/ஒளி நாடாக்கள் தயாரிக்கும் பணி வழங்கப்பெற்றுள்ளது. இதனால் மக்கள் தொடர்புச் சாதனங்கள் ஒலி/ஒளி நாடாக்கள் தயாரிக்கும் பணியிலிருந்து விடுவிக்கப்படுகின்றன. மக்கள் தொடர்பு சாதனங்களுக்கு ஒலி/ஒளி பரப்பும் பணி மட்டுமே இருக்கும்.

1993–94–ஆம் ஆண்டில் கருவிகள் வாங்கிட ரூ.8.57 இலட்சங்கள் தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது.

### இடைநிலைக் கல்வியின் கீழ் வகுப்புகளில் முன்தொழிற் கல்வி

9,10 வகுப்புகளுக்குப்பின் பல்வேறு நிலைகளில் சோதனைக்காக தொழிற்கல்வித் திட்டம் தொடங்கப்படும் என்று 1986 ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கையும் அதன் செயல் நடவடிக்கையும் கூறுகிறது. இதன் தொடர்ச்சியாக 9,10 வகுப்புகளில் முன்தொழிற் கல்வியை 8வது திட்டத்தில் சோதனைக்காக செயல்படுத்த மைய அரசு உத்தேசித்துள்ளது.

9,10 வகுப்புகளில் முன் தொழிற் கல்வி தொடங்குவதன் நோக்கமாவன :

1. தொழில் ஆர்வத்தையும், இயல்பையும் ஊக்குவித்து உற்பத்தியைப் பெருக்குதல், தொழில்களைப்பற்றி ஆய்ந்தறிய வாய்ப்பளித்தல்.

2. மேநிலைப் பள்ளி நிலையில் தகுதிக்கேற்ப தொழிற் கல்வியைத் தேர்ந்தெடுக்க மாணவர்க்கு உதவுதல்.

3. ஏட்டுக் கல்வியுடன் தொழிலும் மாணவர்கள் பங்குகொள்ள வாய்ப்பளித்தல்.

4. தொழில் தொடர்பான நல்லொழுக்கங்களை மாணவப் பருவத்திலேயே வளர்க்க.

## நாட்டுநலப் பணித்திட்டம்

நாட்டுநலப் பணித்திட்டம் மைய அரசின் பொருளுதவி பெறும் திட்டமாகும் மைய, மாநில அரசு 7:5 என்னும் விகிதத்தில் செலவு செய்து வருகிறது. நம் தமிழ்நாட்டில் நாட்டுநலப் பணித்திட்ட மாணவர் எண்ணிக்கை ஒரு குழுவுக்கு 50 வீதம் 1000 குழுவில் 50000 மாணவர் ஆவர். நாட்டுநலப் பணித்திட்ட மாணவர்களின் சேவை மரம் நடுதல், பள்ளி வளாகங்களைச் சீரமைத்தல், விளையாட்டு மைதானங்களை உருவாக்குதல், எழுத்தறிவின்மையை போக்குதல், கிராமப்புறச் சாலைகளை உருவாக்குதல், போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல், மருத்துவப்பணி செய்தல் ஆகியவை ஆகும்.

## மொத்த நிதி ஒதுக்கீடு

| வ.எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது | திட்டம் | திட்டத்தில் சேராதது | திட்டம் |
| 1 | 1991–92 | 45194.47 | 374.67 | 43489.12 | 628.89 |
| 2 | 1992–93 | 44849.82 | 864.77 | 4844.22 | 854.63 |
| 3 | 1993–94 | 52130.14 | 1145.97 | 59366.41 | 1361.22 |
| 4 | 1994–95 | 61922.16 | 1638.73 | – | – |

# III ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

## ஆசிரியர் கல்வி

தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி வழங்குவதற்காக மாநிலக் கல்வி நிறுவனம் 1965 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1976 மே திங்களில் மாநிலக் கல்வி நிறுவனம், மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாக மேம்படுத்தப்பட்டது. மறுபடியும் வளர்ந்து வரும் ஆசிரியர் கல்வியின் தேவையை உணர்ந்து 1990 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளிலிருந்து "ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்" தனியே உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 85–ம், மாவட்டக் கல்வி பயிற்சி நிறுவனங்கள் (DIET) 21 –ம், ஆங்கில மொழி கற்பித்தல் மையங்கள் 8 –ம் இப்புதிய இயக்ககத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவைகளைத் தவிர இவ்வியக்ககம், மாநில அரசு, நடுவண் அரசு, யுனிசெப், தேசிய கல்வி ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் திட்டங்களையும் செயல்படுத்துகிறது. மேலும் யுனிபா (UNIFA), ஊனமுற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி (PIED), வட்டார தீவிர கல்வித் திட்டம் (AIEP), மழலையர் கல்வி (ECE), குறைந்தபட்ச கற்றல் இலக்குகள் (MLL), பர்கூரில் தொடங்கப்பட்டுள்ள புரட்சித்தலைவி சீர்மிகு உயர் பள்ளி (SCHOOL OF EXCELLENCE) தற்பொழுது கிருஷ்ணகிரியில் அமைக்கப்பட்டு, மாவட்ட ஆசிரியர் கல்வி நிறுவனத்தில் நடைபெறுகிறது. பள்ளிகளில் கணிப்பொறிக் கல்வி (CLASS PROJECT) மக்கள் தொகைக் கல்வித் திட்டம், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான நெறிப்படுத்தும் பயிற்சி (SOPT), திறந்தவெளிப் பள்ளித் திட்டம் (837 மாணவர் பயிற்சி பெறுகின்றனர்) ஆகிய இத்திட்டங்கள் 1993–94 ஆம் ஆண்டில் திறம்பட இவ்வியக்ககத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1993–94 ஆம் ஆண்டில் மழலையர் கல்வித்திட்டம் குழந்தைகளின் ஒருமித்த வளர்ச்சியை மையமாகக் கொண்டு இவ்வியக்ககம் பல பயிற்சிகளை நடத்தி வருகின்றது. மாநிலத்தில் உள்ள சமூகநலத் துறையைச் சார்ந்தவர்களும், மாவட்ட ஆசிரியர் கல்வி நிலைய ஆசிரியர்களும் பயனடையுமாறு, செங்கை எம்.ஜி.ஆர், வடாற்காடு அம்பேத்கார், சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்களில் 34 பயிற்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டது.

## ஆங்கில பயிற்சிமுறை மையங்கள்

தொடக்க/உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் முறை, இலக்கணம் பயன்படும் முறை, ஆங்கிலப் பேச்சுமுறை, ஆகியவற்றில் தீவிரப் பயிற்சி வழங்கும் நோக்கத்துடன் எட்டு ஆங்கில மொழிப் பயிற்சி மையங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. 1993–94 ஆம் ஆண்டில் இந்த மையங்கள் ரூ.17 இலட்சம் செலவில் 30 பயிற்சிகளை நடத்தி 1,217 ஆசிரியர்களுக்கு (டிசம்பர் 1993 வரை) பயிற்சி அளித்துள்ளது.

## மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

புதிய கல்விக் கொள்கையின்படி ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தரம், பள்ளி சாராக் கல்வி மற்றும் வயது வந்தோர் கல்வித் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் தரம் மற்றும் நம் கல்வித் திட்டத்தில் தொடக்க நிலையில் பணியாற்றும் இதர அலுவலர்களின் தரம் ஆகியவற்றை உயர்த்துவதற்காக மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இதன்படி இம்மாநிலத்தில் உள்ள 21 நிறுவனங்கள் முறையே ஏழு வீதம் மூன்று நிலைகளில் நடைபெற்று வருகின்றன. ரூ.1310.22 இலட்சத்தில் நடுவண் அரசு உதவியுடன் இந்நிறுவனங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இரண்டு நிறுவனங்கள் நாகை காயிதே மில்லத் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாச்சி மாவட்டங்களில் தொடங்கப்பட உள்ளன.

மேற்படி 14 நிறுவனங்களில் (முதல் மற்றும் இரண்டாம் நிலைகளில்) 1992–93 ஆம் ஆண்டில் ரூ.23.97 லட்சத்தில் 387 பயிற்சி வகுப்புகள் மூலம் 9568 ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. 1993–94 ஆம் ஆண்டில் ரூ.48.97 இலட்சத்திற்கு பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. இந்நிறுவனங்களுக்கு தேவையான தளவாடங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

## மொத்த நிதி ஒதுக்கீடு

| | | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | ஆண்டு | திட்டத்தில் சேராதது | திட்டம் | திட்டத்தில் சேராதது | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1991–92 | 262.23 | 28.54 | 281.99 | 365.87 |
| 2. | 1992–93 | 280.26 | 422.11 | 308.16 | 477.51 |
| 3. | 1993–94 | 312.65 | 451.64 | 247.26 | 565.78 |
| 4. | 1994–95 | 265.60 | 504.30 | – | – |

## IV அரசுத் தேர்வுகள்

இவ்வியக்கத்தால் நடத்தப்படும் 44 வகையான மொத்தத் தேர்வுகளில் இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத் தேர்வு மற்றும் மேநிலைத் தேர்வு ஆகியவை பெரிய அளவிலான தேர்வுகள் ஆகும்.

பெரிய அளவிலான தேர்வுகளின் மைய மதிப்பீட்டு முறை, இடைநிலைக் கல்வி சான்றிதழ் பொதுத் தேர்வுக்கு 1968 ஆம் ஆண்டிலிருந்தும், மேநிலைத் தேர்விற்கு 1980 ஆம் ஆண்டிலிருந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது இவ்வியக்ககத்தின் கட்டுப்பாட்டில் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சென்னை ஆகிய இடங்களில் 5 மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. கடலூர், சேலம் ஆகிய நகரங்களில் மேலும் இரண்டு மண்டல அலுவலகங்கள் திறப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

பெரிய அளவிலான தேர்வுகளன்றி ஆங்கிலோ இந்தியத் தேர்வு, மெட்ரிகுலேஷன் தேர்வு, ஆசிரியர் பயிற்சிப் பட்டயத் தேர்வு மற்றும் தொழில் நுட்பப்பிரிவில் கைத்தறி, நெசவு, இசை, மரவேலை, அச்சிடுதல், விவசாயம் போன்ற பாடத் தேர்வுகளும் இத்துறையினால் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்தோர், தேர்ச்சி பெற்றோர், தேர்ச்சி விழுக்காடு முதலான விவரங்கள் பின்வருமாறு :

| | | தேர்வர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| தேர்வுகள் (1) | ஆண்டு (2) | பதிவு செய்தவர்கள் (3) | தேறியவர்களின் எண்ணிக்கை (4) | பள்ளி மாணவர்களின் சதவீதம் (5) |
| இடைநிலைக் கல்வி | 1991 | 5,51,631 | 2,37,656 | 59.4 |
| | 1992 | 5,62,079 | 3,03,498 | 68.5 |
| | 1993 | 5,63,041 | 2,94,097 | 68.8 |
| மேநிலைக் கல்வி | 1991 | 2,94,955 | 1,32,536 | 64.0 |
| | 1992 | 3,15,998 | 1,72,449 | 73.0 |
| | 1993 | 3,44,633 | 1,93,840 | 75.0 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| மெட்ரிக் | | | | |
| | 1991 | 20,020 | 17,630 | 92.0 |
| | 1992 | 23,295 | 20,536 | 92.0 |
| | 1993 | 27,507 | 24,320 | 93.0 |
| ஆங்கிலோ– இந்தியன் | 1991 | 3,962 | 3,568 | 95.0 |
| | 1992 | 3,801 | 3,270 | 89.0 |
| | 1993 | 4,021 | 3,551 | 93.0 |

1992 ஆம் ஆண்டு முதல் மைய மதிப்பீட்டு முறை ஆசிரியர் பயிற்சிப் பட்டயத் தேர்வு முதலாமாண்டு மாணவர்களுக்கும், 1993 ஆம் ஆண்டு முதல் இப்பயிற்சியின் முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு தேர்வுகளுக்கு மாற்று எண்ணிட்டு மதிப்பீடு செய்யும் முறையும் தொடங்கப்பட்டுள்ளன.

இத்தேர்வுத் துறையினால் அகில இந்திய முறைப்படி தேசியத் திறனாய்வுத் தேர்வு (முதல் கட்டம்) 1993 ஆம் ஆண்டில் 8,284 மாணவ மாணவிகளுக்கு நடத்தப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தில் தேந்தெடுக்கப்பட்ட 243 மாணவ, மாணவிகள் புதுடில்லி, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இரண்டாம் கட்டத் தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள். அதில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மேற்படிப்பிற்கான உதவித் தொகையை இந்திய அரசு வழங்கும்.

தமிழக அரசு அறிவித்ததற்கேற்ப 8 ஆம் வகுப்பு அளவிலுள்ள அரசு மாணவர்களுக்கான திறனாய்வுத் திட்டம் 1991–92 இல் ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சிறப்புத் திட்டத்தின்படி, கிராமப்புற மாணவர்களின் திறனை தேர்வு மூலம் ஆராய்ந்து பின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.1,000 வீதம் ஆண்டுதோறும் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலிருந்தும் 50 மாணவர்கள் மற்றும் 50 மாணவிகள் உதவித் தொகை பெற்றுப் பலனடைந்து வருகின்றனர். 1991 ஆம் ஆண்டில் 14,597 மாணவ/ மாணவியரும், 1992 ஆம் ஆண்டில் 22,732 மாணவ,மாணவியரும், 1993 இல் 19,533 மாணவ/மாணவியரும் இத்தேர்வினை எழுதியுள்ளனர்.

பணியாளர் தேர்வாணைக்குழு (Staff Selection Commission) வினால் நடத்தப்படும் தேர்வுகள் மற்றும் மைய தேர்வாணைக்குழு (Union Public Service Commission) வினால் நடத்தப்படும் இந்திய ஆட்சிப் பணிக்கான ஆரம்ப மற்றும் இறுதித் தேர்வு மற்றும் பொறியாளர் தேர்வு போன்ற தேர்வுகளும் இத்துறையின் மூலம் நடத்தப்படுகின்றன. மற்ற மாநிலங்களில் மேற்காண் தேர்வுகள் அந்தந்த மாநிலப் பணியாளர் தேர்வாணையங்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழக அரசு போலிச் சான்றிதழ்களை ஒழிக்கக் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. போலிச் சான்றிதழ்கள் எனத் தெரிந்தவுடன், சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆய்வாளருக்கு புகார் கொடுக்கப்பட்டு, காவல் துறையினரால் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போலிச் சான்றிதழ்கள் வைத்திருப்பவர்கள் மீது காவல் துறை கடும் நடவடிக்கை எடுப்பதுபற்றி பொது மக்கள் அனைவரும் அறிய வழிவகை செய்யப்பட்டு வருகிறது வரும் கல்வி ஆண்டு முதல் அனைத்து கல்லூரி மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு வகுப்பில் சேரும் அனைத்து மாணவர்களின் சான்றிதழில் உண்மைத் தன்மை அறிய நடவடிக்கை அரசு எடுத்து வருகிறது.

**மொத்த நிதி ஒதுக்கீடு**

| வ. எண் | ஆண்டு | திட்ட மதிப்பீடு | | மறுமதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டமில்லாதது | திட்டம் | திட்டமில்லாதது | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1991–92 | 738.04 | 7.67 | 920.27 | 7.97 |
| 2. | 1992–93 | 765.04 | 8.09 | 970.86 | 8.15 |
| 3. | 1993–94 | 1039.92 | 12.81 | 1084.00 | 15.43 |
| 4. | 1994–95 | 1040.25 | 12.39 | – | – |

## அத்தியாயம் 3

# ஆசிரியர் தேர்வு வாரியம்

தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குட்பட்ட பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த ஆசிரியர் பணியிடங்களுக்கு தேர்வு செய்ய தனியாக ஆசிரியர் தேர்வு வாரியம் 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தோற்றுவிக்கப்பட்டது. அரசு உயர்நிலை, மேநிலைப் பள்ளிகளில் முறையான பணியிடங்களுக்கு ஆசிரியர்களைத் தேர்வு செய்ய, மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலரைத் தலைவராகவும், பள்ளிக் கல்வி இணை இயக்குநர் பணி நிலையில் ஒரு உறுப்பினர் மற்றும் ஒரு உறுப்பினர்–செயலர் ஆகியவர்களையும் தேவையான இதர அலுவலகப் பணியாளர்களையும் கொண்டு தேர்வு வாரியம் அமைக்கப்பட்டது. பள்ளிக் கல்வி இயக்குநரால் அளிக்கப்படும் ஆசிரியர் தேவைப் பட்டியலின் அடிப்படையில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் உள்ள தகுதி வாய்ந்த நாடுநர்களின் பட்டியல் பெற்று, நேர்முகத் தேர்வு நடத்தி, ஒதுக்கீட்டு விதிகளின்படி தகுதியான ஆசிரியர்களைத் தேர்வுக்குழு தேர்ந்தெடுக்கிறது. தேர்வு வாரியத்தின் தலைவர், உறுப்பினர். உறுப்பினர்–செயலர் சம்பந்தப்பட்ட பாட நிபுணர் ஒருவர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் சார்பாளர் ஆகியோரடங்கிய குழு ஆசிரியர்களைத் தேர்வு செய்கிறது.

கல்லூரிக் கல்வி, சட்டக் கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க முதுநிலை இந்திய ஆட்சிப் பணி அலுவலர் தலைவராகவும், இயக்குநர் நிலையில் உறுப்பினர்கள் இருவர் (ஒருவர் பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்தவராகவும், மற்றொருவர் கல்லூரிக் கல்வித் துறையைச் சார்ந்தவராகவும்) மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் நிலையில் உயர்த்தப்பட்ட ஒரு உறுப்பினர்–செயலர் ஆகியோரையும் கொண்டு வாரியம் தற்போது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

கல்லூரிக் கல்வி ஆணையரால் அளிக்கப்பட்ட பட்டியலின்படி அரசினர் கலைக் கல்லூரிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் 310 விரிவுரையாளர்களுக்கான நேர்காணல் நடத்தப்பட்டுள்ளது. அரசு தொழில் நுட்பப் பயிலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் போதகர்களாகப் பணியாற்றும் 82 ஆசிரியர்களின் பணியினை வரண்முறை செய்திட நேர்காணல் நடத்தப்பட்டுள்ளது. அரசினர் கலைக் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர்களைத் தேர்வு செய்ய

எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் ஆகிய தகுந்த நடவடிக்கையினை வாரியம் மேற்கொண்டு வருகின்றது. இதற்காக தேர்வுநிலை விரிவுரையாளர் நிலையில் ஒருவர் கட்டுப்பாட்டு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இத்தேர்வுக்கான எழுத்துத் தேர்வுக்கு பாடத்திட்டம் உருவாக்க இவ்வாரியம் பாட நிபுணர்களை நியமித்துள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதை நிறுத்தி, ஆசிரியர் தேர்வு வாரியமே மேற்படி விரிவுரையாளர்களை தேர்வு செய்ய முடிவெடுத்துள்ளதால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அதிகாரம், ஒழுங்கு நடவடிக்கை விதிகள் போன்றவற்றை, ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கும் வழங்கிட அரசு தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.

1988 இல் தொடங்கியதிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்காக இதுவரை 5309 ஆசிரியர்கள் இவ்வாரியத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். 1993–94 ஆம் ஆண்டில் (1993 நவம்பர் மாதம் வரை) 231 தேர்வர்கள் முதுகலை பட்டதாரி மற்றும் பட்டதாரியாசிரியர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஜூலை 1988 முதல் நவம்பர் 1993 வரையிலான தேர்வு விவரங்கள் கீழ்வருமாறு :

| வ. எண் | ஆண்டு | நேர்காணலில் கலந்து கொண்டவர் எண்ணிக்கை | தேர்வு செய்யப் பட்டவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 1988–89 | 5,332 | 1,996 |
| 2. | 1989–90 | 8,082 | 1,208 |
| 3. | 1990–91 | 2,928 | 677 |
| 4. | 1991–92 | 3,263 | 751 |
| 5. | 1992–93 | 1,817 | 446 |
| 6. | 1993–94 (நவம்பர் 1993 வரை) | 1,243 | 231 |
| | மொத்தம் | 22,665 | 5,309 |

மேலும், ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் பள்ளிகளில் பணியாற்றும் ஒப்பந்த அடிப்படையிலான பட்டதாரியாசிரியர்களின் பணியினை வரண்முறைப்படுத்த, சென்னை ஆதி திராவிட நல மற்றும் பழங்குடி இயக்குநரால் அளிக்கப்பட்ட 196 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டுள்ளது.

அரசினர்/மாநகராட்சி/நகரவை/ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இடைநிலை மற்றும் அதன் தொடர்பான ஊதிய நிலையில் உள்ள சிறப்பாசிரியர்கள் ஆகியோரது நியமனத்திற்காக, தகுதியுடைய ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் பணியும் இவ்வாரியத்திற்கு தற்போது அளிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான நடவடிக்கையினை இவ்வாரியம் மேற்கொண்டு வருகிறது.

---

அத்தியாயம் 4

# தமிழ்நாட்டுப்பாடநூல் கழகம்

புதிய கல்வி கொள்கைக்கிணங்க தயாரிக்கப்பட்ட 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான தரமான பாடநூல்களை நியாயமான விலையில் இக்கழகம் வெளியிடுகிறது. 1988–89–லிருந்து 1990–91 வரை இப்புதிய நூல்கள் வெளியிடப்பட்டன. மொத்தத்தில் தமிழ் மொழியில் 99 தலைப்புகளும்; தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது ஆகிய சிறுபான்மை மொழிகளில் 136 தலைப்புகளும், ஆங்கில மொழியில் 70 தலைப்புகளும், 67 தலைப்புகளில் ஆசிரியர் கையேடுகளும் தயாரித்து அரசு நிர்ணயிக்கும் விலையில் வழங்குகிறது.

1994–95 ஆம் கல்வியாண்டிற்காக இக்கழகம் 305 தலைப்புகளில் 496 இலட்சம் பாடநூல் படிகளை அச்சிடவுள்ளது. இவற்றால் பயனடையும் மாணவர்களின் எண்ணிக்கை தோராயமாக 122 இலட்சமாகும். இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் இக்கழகம் ரூ.26.42 கோடி பெருமானமுள்ள 402 இலட்சம் பாடநூல் படிகளை வழங்கவுள்ளது. இவற்றால் 1 முதல் 8 ஆம் வகுப்புவரை பயிலும் 63 லட்சம் மாணவர்கள் பயனடைவார்கள்.

59 வட்ட கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள் 2,099 கூட்டுறவு சில்லரை விற்பனை கடைகள், 1,422 தனியார் சில்லரை கடைகள் மூலம் பாடநூல்கள் விநியோகப்பணியினை மேற்கொள்கின்றன.

சலுகை விலைத்தாளில் குறிப்பேடுகள் தயாரித்து விநியோகிக்கும் பணி இக்கழகத்திடம் 1980 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. சலுகை விலையில் தாள் வழங்கும் திட்டம் தொடராததால் வெளிச்சந்தையில் தாள் கொள்முதல் செய்யப்பட்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மாணவர்களுக்கு குறிப்பேடு தயாரிக்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 300 குறிப்பேடு தயாரிப்பாளர்கள் இக்கழகத்தின் பணியை மேற்கொண்டுள்ளனர். ரூ.350 இலட்சம் மதிப்புள்ள குறிப்பேடுகள் தயாரிக்கப்பட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளி மாணவர்களுக்கும், பொதுப்பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. 1994–95 ஆம் கல்வியாண்டிலும் இத்திட்டம் தொடருகிறது. மேலும் 1994–95 ஆம் கல்வியாண்டிற்கு சுமார் 1500 டன் குறிப்பேடுகள் வெளிச்சந்தை விற்பனைக்காக தயாரிக்கப்படவுள்ளது.

## அத்தியாயம் 5

# பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

இந்திய அரசியல் அமைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அனைவருக்கும் தொடக்கக் கல்வி எனும் இலக்கை அடைய, வயது வந்தோர் கல்வித்திட்டம், பள்ளிசாராக் கல்வித் திட்டம் ஆகியவை முக்கியமான திட்டங்களாக உள்ளன. தமிழ்நாடு அரசு கி.பி. 2000 க்குள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி எனும் இலக்கை அடைந்திட செயல்திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. அத்தகைய பெருமைக்குரிய திட்டம், நூறு சத எழுத்தறிவு இலக்கை அடைதல் மூலமும், தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள் படிப்பை இடையில் விடும் போக்கைத் தடுப்பதன் மூலம்தான் வெற்றிபெற முடியும். மாநில அரசு பள்ளிக் கல்வித் திட்டத்துடன் வயதுவந்தோருக்கான எழுத்தறிவு திட்டத்தையும், முழுமையான எழுத்தறிவு திட்டத்தையும் முழுமையான எழுத்தறிவு இயக்கத்தின் மூலம் ஒருங்கிணைந்து, அத்துடன் சிறார்களுக்கான பள்ளிசாராக் கல்வித் திட்டத்தையும் செயல்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளது.

### முழு எழுத்தறிவு இயக்கம்

நூறு சத எழுத்தறிவு இலக்கினை 1995 இறுதிக்குள் எய்திடத் தமிழ்நாடு அரசு தொண்டு மனப்பான்மை உள்ளவர்களால் செயல்படுத்தப்படக்கூடிய முழு எழுத்தறிவு இயக்கத்தைச் செயல்படுத்திடத் திட்டமிட்டு 1991–92 இல் நமது மாநிலத்தில் தொடங்கியது. தமிழகத்தில் 15–35 வயதினரிடையேயுள்ள எழுத்தறியாமையை நீக்குவதற்காக சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் ஆதரவினையும் ஒருங்கு திரட்டி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

முழு எழுத்தறிவு இயக்கம் மூன்று கட்டங்களாகச் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டது. முதல் கட்டத்தில் 1991–92 இல் (1) புதுக்கோட்டை, (2) பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், (3) காமராசர், (4) கன்னியாகுமரி, (5) மதுரை (6) வட ஆற்காடு அம்பேத்கார், (7) திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய 7 மாவட்டங்களில் முழு எழுத்தறிவு இயக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எழுத்தறிவு இல்லாத 18.94 இலட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர். இரண்டாம் கட்டத்தில் (1) இராமநாதபுரம், (2) கோவை, (3) நாகப்பட்டினம் காயிதே மில்லத், (4) திண்டுக்கல் அண்ணா, (5) பெரியார் (6) சேலம், (7) தென்னாற்காடு வள்ளலார், (8) திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில்

முழு எழுத்தறிவு இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் வயதுவந்தோர் 36.85 இலட்சம் பேர் பயன் பெறுகின்றனர். அதாவது 1993–94 மற்றும் 1994–95 இல் மூன்றாம் கட்டத்தில், எஞ்சியுள்ள 8 மாவட்டங்களில் இந்த முழு எழுத்தறிவு இயக்கம் செயல்படும். 30.66 இலட்சம் கல்லாத வயதுவந்தோர் பயன்பெறுவர். தம்முடைய குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்பவேண்டியதன் முக்கியத்துவத்தையும் தேவைகளையும் பெற்றோர்கள் உணருமாறு செய்யவேண்டியது எல்லா மாவட்டங்களிலும் உள்ள தொடர் கல்வி நிலையங்களின் முக்கிய பணியாகும். இந்தக் குறிக்கோளை 1995 க்குள் அடைவதற்குரிய பொறுப்பு கிராம அளவிலான வயதுவந்தோர் கல்விக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒரு கற்போருக்கு ரூ. 60 வீதம் திட்டத்தின் மொத்த செலவினம் கணக்கிடப்படுகிறது. மாநில அரசின் ஒப்புதலுக்குப் பிறகு, மத்திய அரசு, தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் மூலம் மேற்கண்ட முன்மொழிவுக்கு அனுமதி வழங்குகிறது. மாநில அரசு பரிந்துரைத்து மைய அரசு தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் வழியே ஒப்புதலளித்து ஒரு கற்போருக்கு அளிக்கும் தொகை ரூ. 60 ஆகும். இத்திட்டத்திற்கான செலவில் 1/3 பகுதியை மாநில அரசும் மீதத்தை மைய அரசும் அளிக்கின்றன.

## தொடர் எழுத்தறிவு இயக்கம்

வயதுவந்தோர் கல்வியின் அடிப்படைக் குறிக்கோள் கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவைத் தருவது மட்டுமல்ல, அடிப்படை எழுத்தறிவு நிலையில் பெற்ற எழுத்தறிவை மறந்துவிடாமல் இருப்பதற்காகவும், நிலைநிறுத்திக் கொள்ளவும் உதவக்கூடிய தொடர் கல்வி வாய்ப்பினையும் அளிக்கிறது. கற்போருக்குத் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பு தொடர் எழுத்தறிவு இயக்ககத்தில் வழங்கப்படுகிறது. இது, அறிவொளி இயக்கம் நிறைவு பெற்றபின் இரண்டு ஆண்டுகள் செயல்படும். தொடர் எழுத்தறிவு இயக்கம் முதல் கட்டத்தில் அறிவொளி இயக்கங்கள் நிறைவு பெற்ற 7 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக எழுத்தறிவு பெற்றோர் தாங்கள் பெற்ற எழுத்தறிவுத் திறனைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், ஒன்றியங்களின் அளவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. தொடர் எழுத்தறிவு மையங்கள், உள்ளூர்த் தொண்டர்களின் உதவியால் நிர்வகிக்கப்படுகின்றன.

## தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம்

தமிழ்நாட்டில் எழுத்தறிவு திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதற்காகத் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையம் 1992 ஆகஸ்டில் நிறுவப்பட்டுள்ளது. இது எழுத்தறிவுத் திட்டங்கள் பற்றிய கொள்கைகளிலும், திட்டமிடுதலிலும் கவனம் செலுத்துகிறது. மேலும் திட்ட செயலாக்கத்திற்குத் தேவைப்படும் ஆதாரங்களைப் பெருக்குவதிலும், திறம்படச் செயல்படுத்துவதிலும் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பிட்டறிவதிலும் நன்கு கவனம் செலுத்துகிறது. மாவட்டங்களில், முழு எழுத்தறிவு இயக்கம் மாவட்ட எழுத்தறிவு குழுவினால் செயல்படுத்தப்படுகிறது மாவட்ட ஆட்சியரே இக்குழுவின் தலைவர். வளர்ச்சித் திட்டங்களான தேசிய ஒருமைப்பாடு, வறுமையை அகற்றுதல், பெண்கள் சமத்துவம் மேம்பாடு முதலியவைகள் முழுஎழுத்தறிவு இயக்கச் செயலாக்கத்துடன் ஒருக்கிணைக்கப் பட்டுள்ளன. சென்னை, செங்கை எம்.ஜி.ஆர்., திருச்சி ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மைய அரசின் உதவி பெற்றுச் சில தொண்டு நிறுவனங்கள் இந்த முழு எழுத்தறிவு இயக்கத்தை நடத்தி வருகின்றன . இதுவரை அறிவொளி இயக்கங்கள் செயல்படுத்தப்படாத மாவட்டங்களில், முழு எழுத்தறிவு இயக்கத்தைச் செயல்படுத்தும்போது, அதனுடன் தற்போது தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் திட்டங்கள் இணைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முழு எழுத்தறிவு இயக்கம்,தொடர் எழுத்தறிவு இயக்கம் ஆகியவைகளுக்குரிய நிதியளிப்புகள் விவரம் :

| திட்டம் | நடுவண் அரசு ஒப்புதல் வழங்கியுள்ள மொத்த செலவினம் | நடுவண் அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | இதுவரை அனுமதிக்கப்பட்ட நிதி | |
|---|---|---|---|---|---|
| | | | | நடுவண் அரசு | மாநில அரசு |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. முழு எழுத்தறிவு இயக்கம் | 3963.13 | 2642.06 | 1263.39 | 2163.19 | 740.70 |
| 2. தொடர் எழுத்தறிவு இயக்கம் | 1002.36 | 668.20 | 334.10 | 346.00 | 115.12 |

## தொடர் கல்வி நிலையங்கள்

நடுவண் அரசின் உதவியுடன் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் தமிழகம் முழுவதிலும் 1363 தொடர் கல்வி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த

நிலையங்கள் தொடர்பாளர்களால் (பிரேரக்) நிர்வகிக்கப்படுகின்றன. புதிதாக எழுத்தறிவு பெற்றோர் பெற்ற எழுத்தறிவை நிலைநிறுத்திக் கொள்ள உதவும் வகையில், இந்த நிலையங்களில் அவர்களுக்கு புத்தகங்கள், வார, மாத இதழ்கள், செய்தித் தாள்கள், விளையாட்டுக் கருவிகள், தொழில் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பு ஆகியன அளிக்கப்படுகின்றன.

## தொழில்திறன் மேம்படுத்தும் திட்டம்

தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களிடையே தொழில் நுட்பத்திறன்களை மேம்படுத்தும் நோக்கில், உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம் என்னும் தொழிலாளர் கல்வி நிறுவனங்கள் நடுவண் அரசின் நிதியுதவியுடன் சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குழந்தைகளின் தொழில் திறன்களை மேம்படுத்தும் வகையில் குறுகிய மற்றும் நீண்ட காலப் பயிற்சி வகுப்புகள் பலவற்றிற்கு ஏற்பாடு செய்கின்றன.

### நீண்ட காலப் பயிற்சிகள்

வீட்டு மின் இணைப்புகள், பம்புசெட் பழுதுபார்த்தல், தட்டச்சுப் பயிற்சி, ஸ்கிரீன் பிரிண்டிங், சுவரொட்டி தயாரிப்பு, தொலைக்காட்சி, வானொலிப்பெட்டிகள் பழுதுபார்த்தல், புகைப்படம் எடுத்தல், தையல் ஆகிய நீண்ட காலப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும் கம்ப்யூட்டர் பயிற்சி, ஆட்டோமொபைல் மெக்கானிசம் ஆகியவைகளில் புகழ்பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### குறுகிய காலப் பயிற்சிகள்

சோப்பு, சோப்புத்தூள், ஷாம்பு, வாசனைப்பத்தி முதலியன தயாரிப்பதில் குறுகிய காலப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதுவரை, பல்வேறு பயிற்சிகளில் **2,28,524** பேர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

## மலைவாழ் மக்களுக்கான சிறப்புத் திட்டம்

சேலம் மாவட்டம் ஏற்காடு, கொல்லிமலை, தென் ஆற்காடு கல்வராயன் மலை, வட ஆற்காடு அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஜவ்வாதுமலை, திருச்சி பச்சைமலை ஆகிய

ஐந்து மலைவாழ் மக்கள் துணைத் திட்டப் பகுதிகளில் ஒரு சிறப்புத் திட்டமாகப் பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மலைப்பகுதியிலும் 20 வயதுவந்தோர் கல்வி மையங்களும், 20 பள்ளிசாராக் கல்வி மையங்களும் நடைபெறுகின்றன. மலைவாழ் இனத்தைச் சார்ந்த கல்லாத வயது வந்தோர் 2000 பேரும், 6–14 வயதுடைய குழந்தைகள் 2000 பேரும் இத்திட்ட மையங்களால் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்திற்குரிய ஆண்டுச்செலவு ரூ.11 இலட்சமாகும். தமிழ்நாடு அரசு இச்செலவினை ஏற்கிறது. மையங்களின் தற்போதைய கட்டப்பணி 1–9–1993 முதல் நடைபெற்று வருகிறது.

## கடலோர மீனவர்களுக்கான வயது வந்தோர் கல்வி

கடலோர கிராமங்களில் வாழும் 15–35 வயதுடைய கல்லாத மீனவர்களுக்கும் பங்கேற்பு முறையில் வயது வந்தோர் கல்வியை அளிப்பதற்காக இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. டென்மார்க் அரசின் நிதி உதவியுடன், மாநில அரசின் நிதியுதவியையும் இணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இரண்டு முன்னோடித் திட்டங்கள் கேளம்பாக்கம், திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் 1991–93 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றன. 6,000 கல்லாத வயது வந்தோர் (ஆண் 2,820; பெண் 3,180) பயன்பெற்றனர், 1993–94 இல் கடலோர மாவட்டங்களான செங்கை எம்.ஜி.ஆர், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், தென்னாற்காடு வள்ளலார், நாகை காயிதே மில்லத், தஞ்சாவூர், இராமநாதபுரம், வ.உ.சிதம்பரனார் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 10 திட்டங்கள் தொடங்கப்பட்டன. இவற்றில் மொத்தம் 30,016 பேர் (ஆண்கள் 9,669; பெண்கள் 20,347) பயன்பெற்றனர். இதுவரை பயன்பெற்ற கற்போர்கள் எண்ணிக்கை 36,016 ஆகும். இத்திட்டங்கள் எழுத்தறிவு அளித்ததுடன் கடலோர கிராமங்களில் பெண்களுக்கான கூட்டுறவு சங்கங்கள் அதிகம் ஏற்பட உதவின. கற்போரால் அஞ்சல் நிலையங்களில் சேமிப்புக் கணக்குகள் பெருகியமை, மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டமை, வளர்ச்சித் துறைகளின் உதவிகளைக் கற்போர் பயன்படுத்திக் கொண்டமை, தன் சுத்தம், சுற்றுப்புறச் சுத்தம் ஆகியவைகளில் மேம்பாடு ஏற்பட்டமை, குடும்ப நலம் பற்றிய விழிப்புணர்வு பெருகியமை முதலியன இத்திட்டங்களால் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பயன்களாகும். இதுவரை ரூ.88 இலட்சம் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது. இதில் ரூ.28 இலட்சம் டேனிடா நிதியிலிருந்து பெறப்பட்டுள்ளது. 1994–95 இல் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

2A

## படித்த இளைஞர்களுக்கான விருப்பப் பணித் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 1993 பிப்ரவரியில் அறிவிக்கப்பட்ட இப்பள்ளி சாராக் கல்வித் திட்டம் மது ஒழிப்பு விளம்பர இயக்கத்துடன் இணைக்கப்பட்டதாகும். மாநில அரசின் நிதி உதவியில் 6–14 வயதுடைய படிப்பை இடையில்விட்ட மற்றும் படிப்பைத் தொடங்காத 35.57 இலட்சம் (மாணவர் 14.92 இலட்சம், மாணவியர் 20.65 இலட்சம்) குழந்தைகள் அனைவருக்கும் படிப்படியாகக் கல்வி கற்பிப்பதற்குரிய திட்டமாகும்.

படிப்பை இடையில் விடும், தொடராதவர்களில் பெண் குழந்தைகள் அதிகம் இருப்பதால் பெண்களில் பலருக்கு விருப்பப் பணியாளராகவும், மேற்பார்வையாளராகவும் வேலை வாய்ப்பினை வழங்கும்விதத்தில் பெண்கள் மையங்கள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்படும்.

1993–94 இல் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டம் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து செயல்படும். 6–14 வயதுடைய படிப்பை இடையில் விட்ட படிப்பைத் தொடங்காத குழந்தைகளில் 15 இலட்சம்பேர் பயன்பெறுவர். இத்திட்டம் 1993–94 ஆம் ஆண்டில் ரூ.20 கோடி செலவு மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் வேலை வாய்ப்பற்று இளைஞர்களுக்கான உதவித் தொகை பெற்று வரும் 1.50 இலட்சம் பேர் வேலைவாய்ப்பைப் பெறுவர்.

### இப்புதிய திட்டத்தின் நோக்கங்கள்

1. அனைவர்க்குமான தொடக்கக் கல்வி இலக்கினை விரைந்து அடைய வழி வகுத்தல்.
2. குடிப்பழக்கத்தினால் விளையும் தீமைகளைத் தொடர்ந்து விளம்பரம் செய்தல்.
3. மிகுந்த எண்ணிக்கையில் உள்ள படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களை சமுதாயத்திற்குப் பயன்படும் பணிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களுக்கு தற்காலிக நிவாரணம் அளித்தல்.

இத்திட்டம், அறிவொளி இயக்கத்தைத் தமிழகத்தில் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தினால் செயல்படுத்தப்படும். மாநில அளவில் இத்திட்டம், தலைமைச் செயலாளர் தலைமையில் உள்ள தமிழ்நாடு எழுத்தறிவு முனைப்பு

ஆணையத்தின் நிர்வாகக் குழுவினால் அவ்வப்போது ஆய்வு செய்யப்படும். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட எழுத்தறிவுக் குழுவினால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். கள அளவில், இத்திட்டத்தை மேற்பார்வை செய்தல், செயல்படுத்துதல் ஆகியவைகள் வட்டார வளர்ச்சி அலுவலரின் பொறுப்பாகும். கிராம அளவில் கிராம கல்விக் குழு அமைக்கப்படும். இக்குழு மையங்களை ஆங்காங்கே நடத்திடத் தேவையான வசதிகளுக்கு ஏற்பாடு செய்யும்.

எஸ்.எஸ்.எல்.சி வரை படித்த கற்பிப்பாளர்கள் (வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள்) பத்து மாணவர்களுக்குக் கற்பிக்க ரூ. 150 பிளஸ் 2 வரை படித்த கற்பிப்பாளர்கள் 15 மாணவர்களுக்குக் கற்பிக்க ரூ. 225 பட்டதாரி இளைஞர்கள் 20 மாணவர்களுக்குக் கற்பிக்க ரூ. 300 பெறுவர். (இரண்டு மாதங்களுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 15 வீதம் கணக்கிட்டு மேற்கண்டவாறு தொகை வழங்கப்படும்). களப்பணியாளர்களுக்கும் விருப்பக் கற்பிப்பாளருக்கும் (கண்டறியப்பட்ட வேலை வாய்ப்பற்ற 26,214 இளைஞர்கள்) உரிய பயிற்சிகள் மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் மாவட்ட வாய்ப்பு வளப்பிரிவு மூலமும், மாநில கருவூல மைய உதவியுடனும் முதல்கட்டமாக வழங்கப்பட்டுள்ளன. விருப்பக் கற்பிப்பாளர்களுக்கு மது விலக்கு மற்றும் ஆயத்துறை அலுவலர்களால் மதுவிலக்குப் பிரச்சாரம் குறித்தும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு உள்ளன. பெரும்பாலானவர்கள் கற்பிப்புப் பணியைத் தொடங்கிவிட்டனர். இரண்டாம் கட்டமாக மேலும் 74,000 விருப்பக் கற்பிப்பாளர் இத்திட்டத்தில் பணிபுரிய கண்டறியப்பட்டுள்ளனர். விரைவில் 1.5 இலட்சம் விருப்பக் கற்பிப்பாளர்களை சேர்க்கும் குறிக்கோள் நிறைவேறும். இத்திட்டத்திற்குத் தேவையான பாடநூல்கள் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தினால் அச்சிடப்பட்டுள்ளன. சிலேட்டு, குறிப்பேடு, பென்சில், பலப்பம் சுருள், கரும்பலகை முதலியன திட்டப் பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுக்கும்பணி நடைபெற்றுள்ளது. மையங்கள் அமைக்கப்படும் இடங்கள், படிப்பை விட்ட, தொடங்காத குழந்தைகளைக் கண்டறியும் பணிகள் விருப்பக் கற்பிப்பாளர்களால் கிராமக் கல்வி குழுவினர் உதவியுடன் செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் சேர்ந்து கற்றுத் தேர்ச்சிப் பெற்றுவரும் மாணவர்கள் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவர். இத்திட்டத்தின் முதலாண்டு கல்வியை முடிப்பவர்கள் தொடக்கக் கல்வியில் மூன்றாம் வகுப்பில் சேர்வதற்குத் தகுதி பெறுவர். இரண்டாமாண்டு கல்வியைப் பெறுபவர்கள் தொடக்கக் கல்வியில் நான்காம் வகுப்பில் சேர்வதற்குத் தகுதி பெறுவர். மூன்றாம் ஆண்டு கல்வியைப் பெறுபவர்கள் பள்ளிக்

2B

கல்வியில் 6 ஆம் வகுப்பில் சேர்வதற்குத் தகுதி பெறுவர். பள்ளிப் படிப்பைத் தொடங்காத குழந்தைகளுக்கும் படிப்பை இடையில் விட்ட குழந்தைகளுக்கும் கல்வி அளிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள மாநில அரசின் முழு நிதி உதவியினால் செயல்படும் இந்த சிறப்பு வாய்ந்த பள்ளிச் சாராக் கல்வித் திட்டம், எழுத்தறியாதவர்களாய் வளரும் குழுவினரைத் தடுத்து நிறுத்தும் என்பது உறுதி.

## மொத்த நிதி ஒதுக்கீடு

| வ. எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்தப்பட்ட மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டம் இல்லாதது | திட்டம் | திட்டம் இல்லாதது | திட்டம் |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | 1991–92 | 185.17 | 533.24 | 134.53 | 492.64 |
| 2. | 1992–93 | 140.43 | 494.68 | 149.33 | 525.00 |
| 3. | 1993–94 | 639.00 | 375.52 | 20.55 | 455.23 |
| 4. | 1994–95 | 17.23 | 1771.16 | – | – |

அத்தியாயம் 6

# கல்லூரிக் கல்வி

தமிழகத்தில் கடந்த ஆண்டுகளில் கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. தற்போது கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தின் கீழ் 242 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் (அரசு கல்லூரிகள் 56 நிதியுதவி கல்லூரிகள் 132; நிதியுதவி பெறாத கல்லூரிகள் 54) 21 கல்வியியல் கல்லூரிகள் (அரசு 7; நிதி உதவி பெறுபவை 14) 15 கீழ் திசை கல்லூரிகளும் (நிதியுதவி பெறுபவை 9, நிதியுதவி பெறாதவை 6) 4 உடற்கல்வி கல்லூரிகளும் (நிதியுதவி பெறுபவை 3, நிதியுதவி பெறாதவை 1) 2 சமுதாயப் பணி பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 15 பல்கலைக் கழகங்களில் 11 பல்கலைக் கழகங்கள் கல்வித் துறையின் கீழ் வருவனவாகும். அவற்றில் கீழ்க்காணும் 5 பல்கலைக்கழகங்கள் கல்லூரிகளை உள்ளடக்கியுள்ளன:

| வரிசை எண்ணும், பெயரும் | இணைவு பெற்ற கலைக் கல்லூரிகள் எண்ணிக்கை |
|---|---|
| 1. சென்னை பல்கலைக்கழகம், சென்னை | 105 |
| 2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை | 53 |
| 3. பாரதியார் பல்கலைக்கழகம், கோவை | 39 |
| 4. பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி | 43 |
| 5. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 44 |
| மொத்தம் | 284 |

இதர ஆறு பல்கலைக் கழகங்களான அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ அவினாசிலிங்கம் மகளிர் மனை அறிவியல் மற்றும் உயர்கல்வி நிறுவனம் (பல்கலைக் கழகமாக கருதப்படுவது) ஆகியன தன்னடங்கிய பல்கலைக் (கல்லூரிகளை இணைக்காத) கழகங்களாகும். கல்லூரிகளின் நிர்வாகம் நிதிக் கட்டுப்பாடு கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் அதிகாரத்தின் கீழும், கல்வி பற்றிய செயல்முறை சாராக் கட்டுப்பாடு அவை இணையப் பெற்ற பல்கலைக்கழகங்களிடமும் உள்ளன.

கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள ஆசிரியர்களின் நலத்திற்கு அரசு அதிக முன்னுரிமை அளிக்கிறது. 1988 ஆம் ஆண்டில் 1–1–1986 முதல் முன்மேவு பலனுடன் அமுல்படுத்தப்பட்ட பல்கலைக் கழக மானியக்குழு திருத்திய ஊதிய விகிதங்களை தென் மாநிலங்களுக்குள் தமிழக அரசே முதலாவதாக நடைமுறைப்படுத்தியது.

## மகளிர் கல்வி

மொத்தமுள்ள 242 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 16 அரசு, 38 உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் 22 சுயநிதிக் கல்லூரிகளைச் சேர்த்து 76 கல்லூரிகள் மகளிர் கல்லூரிகளாகும். மகளிருக்கென தனியாகக் கல்லூரிகள் இல்லாத இடங்களில் அங்குள்ள ஆடவர் கல்லூரிகளில் மொத்த இடங்களில் 30 விழுக்காட்டிற்குக் குறையாமல் மாணவிகள் 1990–91 லிருந்து சேர்க்கப்படுகின்றனர்.

கடுமையான நிதி நெருக்கடிகளுக்கிடையேயும் மிகவும் பின்தங்கிய தருமபுரி மாவட்டம் பர்கூரில் ஒரு புதிய மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரூ. 54.28 இலட்சம் மொத்த செலவில் துவங்கப்பட்டு, 1993–94 ஆம் ஆண்டு முதல் பர்கூர், அரசு உயர்நிலைப்பள்ளி வகுப்பறையில் தற்காலிகமாக கீழ்க்கண்ட வேலை வாய்ப்பு முன்னுரிமையுடைய பாடப்பிரிவுகளுடன் செயல்படத் துவங்கியுள்ளது :

1. பி.எஸ்சி கணினி அறிவியல்
2. பி.எஸ்சி மின்னணுவியல்
3. பி.எஸ்சி மனையியல் (ஊட்டச்சத்தும் சரிவிகித உணவும்)
4. பி.ஏ வணிக மேலாண்மை

மேற்படி கல்லூரிக்கென நிரந்தரமாக கட்டடம் கட்ட அரசால் ரூ. 40.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளதால், விரைவில் கட்டடப்பணி துவங்கப்படும்.

மேலும் ரூ. 35.57 இலட்சம் மொத்த செலவில், கீழ்கண்ட வேலைவாய்ப்பு முன்னுரிமையுடைய பாடப்பிரிவுகளுடன், இராமநாதபுரத்தில் மகளிர் கல்லூரி ஒன்றினைத் துவக்க அரசு திட்டமிட்டுள்ளது :

1. பி.எஸ்ஸி – கணினி அறிவியல்
2. பி.எஸ்ஸி – மின்னணுவியல்

3. பி.எஸ்ஸி – ஊட்டச்சத்தும், சரிவிகித உணவும்

4. பி.ஏ – வணிக மேலாண்மை

5. பி.ஏ. – பத்திரிக்கைவியல்

உயர் கல்வியினை ஊக்குவித்தல் மற்றும் அதிக எண்ணிக்கையில் (குறிப்பாக மாணவிகள்) மாணவர்களுக்கு கல்லூரிகளில் பயில வாய்ப்பளிக்கும் பொருட்டு அரசு முதல் முறையாக, தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் மகளிர் கலைக்கல்லூரியில் அரசு மானியமின்றி 1993–94 ஆம் ஆண்டு முதல் மாலை நேர கல்லூரியாக துவக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போதுள்ள ஆசிரியர்கள் மற்றும் அடிப்படை வசதிகளைக் கொண்டு 10 அரசு கல்லூரிகளில் முதுநிலை பாட வகுப்புகளை துவக்க அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நிதி இடர்பாட்டைக் கருத்திற்கொண்டு, நிதி உதவி பெறும் கல்லூரிகளில் வளர்ச்சியடைந்து வரும் புதிய இனங்களில் வேலை வாய்ப்புக்கு உதவும் பாடப்பிரிவுகளான கணினி அறிவியல், மின்னணுவியல், மக்கள் தொடர்பு மற்றும் வணிக மேலாண்மை ஆகிய பாடங்களை அரசு நிதியுதவி இல்லாத வகையில் தொடங்குவது என அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து தொடர்ந்து அமுல்படுத்தி வருகிறது.

**சுயநிதிக் கல்லூரிகள்**

1993–94 இல் அரசு 8 அரசு உதவி பெறாத கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும் ஒரு உதவி பெறாத உடற்கல்வி கல்லூரியினையும் துவக்கியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மேநிலைப் பள்ளிகளிலிருந்து தேர்ச்சி பெறும் ஏறத்தாழ 3 இலட்சம் மாணவர்களில் சுமார் 80,000 பேர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மேல்படிப்பு தொடர வாய்ப்புள்ளது.

பிற மாநிலங்களைவிட அதிகமான தன்னாட்சி பெற்ற கல்லூரிகளை தமிழ்நாடு கொண்டுள்ளது. 1986 ஆம் ஆண்டு புதிய கல்விக் கொள்கையின்படி அப்போதிருந்த கல்லூரிகளில் 10 விழுக்காட்டினைத் தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாக்கும் நோக்கம் கொண்டிருந்தது. ஆனால் தமிழ்நாட்டில் இந்தக் குறியீட்டை மிஞ்சிடும் வகையில் மொத்தமுள்ள 242 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 37 கல்லூரிகளுக்கு தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இச்சோதனை முறை 1977–78 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் உள்ளதால் இந்த தன்னாட்சிக் கல்லூரிகளின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வது நலம் என தமிழ்நாடு அரசு கருதியது. எனவே தன்னாட்சி பெற்ற கல்லூரிகளின் செயல்பாட்டினை மதிப்பீடு செய்யவும், பிரச்சனைகள் உள்ள சூழல்களை இனம் கண்டு இக்கல்லூரிகளில் கல்வியின் தரத்தை வளர்ப்பதற்கும் மாநில அளவிலான ஒரு குழுவை தமிழக அரசு அமைத்தது. இக்குழுவின் அறிக்கையை அரசு ஏற்று அதனை சம்பந்தப்பட்ட பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் ஒப்புதல் பெற்று, தொடர் நடவடிக்கை மேற்கொள்ள பல்கலைக் கழகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு பல்கலைக்கழகங்களின் அஞ்சல் வழிக்கல்வி செயல்பாட்டினை ஒழுங்குபடுத்துதல்

அஞ்சல் வழிக்கல்வியில் குறைவான தரம் மற்றும் பாடப் புத்தகங்கள் அனுப்புவதில் தாமதம், தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் போன்ற நிர்வாகத் திறமையின்மை உள்ளதாக பொதுவான எண்ணம் நிலவுகின்றது.

வெவ்வேறு பல்கலைக் கழகங்களின் அஞ்சல் வழிக்கல்விப் பிரிவுகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்த மாணவர் சேர்க்கையினைத் தர நிர்ணயம் செய்யாது கட்டுப்படுத்தி ஒழுங்கான நடைமுறையினைப் பின்பற்ற திரு கு. ஆளுடையப்பிள்ளை தலைமையில் ஒரு குழு ஜனவரி 1992 இல் நியமிக்கப்பட்டது. இந்தக் குழு அஞ்சல் வழிக்கல்வியின் தரத்தை மேம்பாடு செய்தல், அஞ்சல் வழிக் கல்வியில் பொதுவான பாடத் திட்டங்களை வகுத்துச் செயல்படுதல் போன்ற இனங்களை ஆய்ந்து தனது அறிக்கையினை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. அதன் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

### கல்லூரிக் கல்வித்துறை பல்வேறு படிப்பு உதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை வருமாறு

#### 1. இந்திய அரசு வழங்கும் தேசிய படிப்புதவித் தொகைத் திட்டம்

10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக பட்ச மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட மாணவர்கள் பயிலும் பாடத்திட்டத்தைப் பொறுத்து இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் படிப்புதவித் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 720 லிருந்து

ரூ.3,600 வரையாக இருக்கும். 1993–94 ஆம் ஆண்டில் இதுநாள்வரை இத்திட்டத்தின் கீழ் 3,530 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1994–95 ஆம் ஆண்டிற்காக நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 42 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 4,000 மாணவர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 2. பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு மாநில அரசு வழங்கும் படிப்பு உதவித் தொகைத் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் ரூ.12,000 க்கு மிகாத பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகள் பயன்பெறத் தகுதியுடையவர்கள். மாணவர்கள் பயிலும் பாடப் பிரிவுகளின் அடிப்படையில் உதவித் தொகை ரூ. 720 லிருந்து ரூ. 1,840 வரை வழங்கப்படுகிறது. (1993–94ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 16 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1994–95 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3. முதன்மையாக வரும் மாணவர்களுக்கான மாநில அரசின் படிப்பு உதவித் தொகைத் திட்டம்

வருமான வரம்பின்றி பள்ளியிறுதி வகுப்பு, மெட்ரிகுலேஷன் மற்றும் பொதுத் தேர்வுகளில் அதிக படிநிலை பெறும் மாணவர்களுக்கு மாநில அரசால் இத்திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. மாணவர்கள் பயிலும் பாடப்பிரிவின் அடிப்படையில் இவ்வுதவித் தொகை ரூ. 500 லிருந்து ரூ. 1,200 வரை வழங்கப்படும். 1993–94 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 4 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர். 1994–95 ஆம் ஆண்டிற்காக வரவு–செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்கென ரூ. 20,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு மதிப்பு உதவி மானியம்

உயர் மதிப்பெண்கள் பெற்ற ஆதி திராவிடர்/பழங்குடி இன மாணவர்களை உயர்கல்வி தொடர ஊக்குவிக்கும் வகையில் கூடுதல் மானிய உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேநிலைப் பள்ளித் தேர்வில் 60 விழுக்காட்டிற்கு குறையாத மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் சிறப்பு மானியமாக ரூபாய் 300 வீதம் அரசு வழங்குகிறது. இவ்வுதவித் தொகை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் வழக்கமாக பெறும் உதவித் தொகை நீங்கலாக அளிக்கப்படுகிறது. 1993–94 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3,886 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

1994–95 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென 2,200 மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 5. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஊக்க உதவித் தொகைத் திட்டம்

அரசின் கொள்கை அடிப்படையில் கல்லூரிகளில் தமிழ் வாயிலாகப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு தலா ரூ. 180 ஊக்கத் தொகையாக அரசால் வழங்கப்படுகிறது. 1993–94 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 30,139 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 1994–95 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் இத்திட்டத்திற்கென ஏறத்தாழ 28,000 மாணவர்கள் பயனடையும் பொருட்டு ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6. மாணவிகளுக்கான உதவித் தொகை

சாதி இன மத வேறுபாடின்றி அனைத்து வகுப்பைச் சார்ந்த மாணவிகளும் பயன்பெறும் வகையில் பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை இலவசக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 12,000 க்கு மிகாத பி.ஏ./பி.எஸ்ஸி./பிகாம்./பி.லிட். பயிலும் மாணவிகளுக்கு படிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிப்படுகிறது. இத்திட்டத்தின் ஆறாவது ஆண்டான 1994–95 இல் கல்லூரிகளில் இளங்கலை வகுப்புகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் பயிலும் அனைத்து மாணவிகளும் பயன்பெறுவர். 1994–95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் வெளியீடுகளை வெளியிடுவதற்கென 1–4–1962 இல் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் பதிப்பகக்குழு புதிய தமிழ் வெளியீடுகளையும் தமிழில் மொழி பெயர்த்த நூல்களையும் வெளியிட்டு வருகிறது. கல்லூரி மட்டத்திலான தமிழ்ப் பாடநூல்களை வெளியிடுவதற்கென ரூபாய் 1 கோடி இந்நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் தொடர்ந்து தனது பணியினை மேற்கொள்ள ஏதுவாக விற்பனை மூலம் வரும் தொகையினை சுழல் நிதியாகப் பயன்படுத்திக்கொள்ள அதனிடம் நிறுத்தி வைக்கப்பட்டது. தமிழ் பதிப்பகக்குழு பின்னர் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு இத்திட்டத்தின்கீழ் கல்லூரி மட்டத்திலான 910 பாடப் புத்தகங்களை வெளியிட்டது. இதற்கென பல்கலைக் கழகங்களுக்கு ரூபாய் 50 இலட்சம் அளிக்கப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினைப் பெற்றுள்ளன.

மொத்த நிதி ஒதுக்கீடு

| வ. எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது | திட்டம் | திட்டத்தில் சேராதது | திட்டம் |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | 1991–92 | 12939.76 | 302.84 | 13451.55 | 262.95 |
| 2. | 1992–93 | 14131.05 | 288.50 | 15955.39 | 309.28 |
| 3. | 1993–94 | 16089.42 | 240.16 | 15439.71 | 177.15 |
| 4. | 1994–95 | 16380.58 | 84.41 | | |

## II தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

மாநில அளவிலும் தேசிய அளவிலும் உயர்கல்வி ஒருங்கிணைப்புக்காக தக்க அமைப்புகள் உருவாக்குவதை தேசிய கல்விக் கொள்கை (1986) வலியுறுத்துகிறது. இதற்கேற்பவும், பல்கலைக்கழக மானியக் குழுவின் வழிகாட்டி நெறிமுறைகளையொட்டியும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டத்தை (சட்ட எண் 40 – 1992) தமிழக அரசு இயற்றியது. இம்மன்றம் 9–11–92 அன்று முதல் இயங்கி வருகிறது.

உயர்கல்வி நிறுவனங்களிடையே ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்துதல்; பாடத்திட்டத்தில் புதியன புகுத்துதலை ஊக்குவித்தல்; பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் செயல்திட்டங்களை ஒருங்கிணைத்தல்; பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் பயிற்சிக்கு வகைசெய்தல்; விளையாட்டு, உடற்கல்வி மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்; பல்கலைக்கழகங்களில் செயல்படும் ஏற்றமிகு மையங்களைக் கண்டறிந்து அவை மேலும் வளர உதவுதல்; மற்றும் உயர்கல்வியின் தரத்தை அளந்தறிந்து காத்து உயர்த்துவதில் பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு உதவுவதோடு, தேவை ஏற்படும்போது சீரமைப்பு நடவடிக்கைகளை அக்குழுவிற்குப் பரிந்துரை செய்தல் ஆகியன இம்மன்றத்தின் தலையாயப் பணிகளாகும்.

மார்ச் 11, 1993 அன்று முறைப்படி தொடங்கப்பெற்ற தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் தன் பணிகளைச் சீரான முறையில் உறுதிப்பாட்டுடன் ஆற்றிவருகிறது. இம்மன்றத்திற்கு அறிவுரை மற்றும் ஆலோசனை வழங்கிட துணை வேந்தர்களின் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள், ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளைக் கருத்தில் கொண்டு மன்றத்தில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

டிசம்பர் 1993 வரை நடந்துள்ள பத்து கூட்டங்களில் (5 மன்றக்கூட்டங்கள் மற்றும் 5 ஆலோசனைக் குழுக் கூட்டங்கள்) பின்வரும் பொருள்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டு உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன :

அ) மன்றத்தின் குறிக்கோள்களான இயைபு (Relevance) மற்றும் சால்பு (Excellence) என்பனவற்றைக் கருத்தில் கொண்டு பாடத் திட்டங்களை மாற்றியமைத்து சீராக்குதல்.

ஆ) பல்கலைக் கழகங்களில் நிதி நிர்வாக செயற்பாட்டிற்கான கணக்கு வைப்பு முறைகளை நெறிப்படுத்துதல்.

இ) மாநிலத்தில் உயர்கல்வியின் இன்றைய நிலை மற்றும் அடுத்த பத்தாண்டுகளுக்கான தொலைநோக்கு குறித்து திட்டம் தயாரித்தல்.

ஈ) கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் அனைத்துப் பட்டப் படிப்புகளிலும் தொடர் அகமதிப்பீட்டுடன் கூடிய பருவமுறையை அறிமுகப்படுத்துதல்.

உ) பல்கலைக் கழகங்களனைத்தும் பின்பற்ற கல்வியாண்டு கால அட்டவணை தயாரித்தல்.

ஊ) கல்லூரி ஆசிரியர் பயிற்சி மையங்கள் மற்றும் உயர்கல்வி திட்ட மற்றும் நிர்வாக தேசிய நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து கல்லூரி முதல்வர்களுக்கான கருத்தரங்குகள் நடத்துதல்.

எ) 'அனைத்திந்திய குடிமை பணியாளர் தேர்வுகளைச் சிறப்பாக சந்தித்தல்' பற்றிய கருத்தரங்கு ஒன்றை நடத்துதல்.

ஏ) அனைத்து தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களையும் ஒரு பல்கலைக் கழகத்தின் கீழ் இணைக்க வேண்டியதன் இன்றியமையாமை யைக் கருத்தில் கொண்டு இது குறித்துப் பரிந்துரை வழங்க ஒரு குழு அமைத்தல்.

ஐ) இசை, பரதம், சிற்பக்கலை, ஓவியக்கலை மற்றும் இதர கலைகள் பயிற்றுவிக்கும் கல்வி நிறுவனங்களை ஒரு குடைக்கீழ் கொண்டு வரவேண்டி, அரங்கு மற்றும் நுண்கலைகளுக்கென ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதைப் பற்றி ஆலோசனை வழங்க ஒரு குழுவை நியமித்தல்.

ஓ) ஆங்கிலம் கற்பித்தலையும் கற்றலையும் நெறிப்படுத்துவதற்காக மாநிலத்தில் ஆங்கிலமொழி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைக்க ஒரு குழுவை நியமித்தல்.

ஓ) பட்டப் படிப்புகளுக்கு அங்கீகாரம் அளித்தல். கல்வித் திட்டங்களுக்கு நிதியுதவி செய்தல் போன்றவற்றில் அரசுக்குக் கருத்துரை வழங்கல்.

ஔ) பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவி பெறும் திட்டங்களுக்கு மாநில அரசின் பங்கு நிதியை விடுவித்தல்.

அஅ) தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடங்க அனுமதி வழங்குவதில் அனைத்திந்திய தொழிற் கல்வி மன்றத்திற்கு (All India Council for Technical Education) உதவி புரிதல்.

அஆ) மாணவர்கள் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்பு பயிலும்போதே, வேறு டிப்ளமா படிப்பை மேற்கொள்ள வசதி செய்யும் வகையில் தற்போது இதற்குத் தடையாக இருக்கும் விதிகளை விலக்க ஆவன செய்தல்.

அஇ) கல்லூரி நிர்வாகத்தை மேலும் திறம்படச் செய்யும் நோக்குடன் கல்லூரி முதல்வர்களுக்கு நிதி, நிர்வாகம் ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்.

மேலே குறிப்பிட்டவை மன்றத்தின் முதல் ஆண்டுச் செயல்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான பணிகளில் சில ஆகும். மாநிலம் மற்றும் அனைத்திந்திய அளவில் உள்ள சம்பந்தப்பட்ட அரசுத்துறைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளின் ஒத்துழைப்புடன் இம்மன்றம் அதனிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளைச் செம்மையாக நிறைவேற்ற முடியும். தனக்களிக்கப்பட்டுள்ள பெரும் பொறுப்புகளின் பரிமாணத்தை உணர்ந்துள்ள மன்றம், தான் ஆற்ற வேண்டிய பணிகளின் முன்னுரிமையை நிர்ணயித்தும் முறைப்படி அவைகளை செயல்படுத்தியும் மாநிலத்தில் உயர்கல்வியின் அனைத்து செயல்பாடுகளையும் சரியான பாதையில் நடத்திச் செல்ல உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

---

## அத்தியாயம் 7

# தொழில் நுட்பக் கல்வி

மனித வள மேம்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் ஒரு பகுதியான தொழில் நுட்பக் கல்வியானது மாணவர்களின் திறமையை அதிகரிப்பதிலும் நாட்டின் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதிலும், நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதிலும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இந்நிலையினை நன்குணர்ந்த தமிழக அரசு தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சியை ஊக்குவித்து வருகின்றது. 1957 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட மாநில தொழில் நுட்பக் கல்வித் துறை பட்டயப் படிப்பு, பட்டய மேற்படிப்பு, சிறப்புத் துறைகளில் பட்டயப் படிப்பு, பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சித் துறை போன்ற பல்வேறு நிலைகளில் பெரும் வளர்ச்சியடைந்துள்ளது. சுயநிதி அமைப்பிலான தனியார் பயிலகங்கள் அதிக அளவில் துவக்கப்பட்டதன் காரணமாக கடந்த 10 ஆண்டுகளில் தொழில் நுட்பப் பயிலகங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது.

**தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும் தொழில் நுட்பப் பயிலகங்களின் விவரம்**

**1.பொறியியல் கல்லூரிகள்**

| | | |
|---|---|---|
| (அ) | திருச்சி, மண்டல பொறியியல் கல்லூரி உள்ளிட்ட அரசு பொறியியல் கல்லூரிகள் | 6 |
| (ஆ) | அரசு மானியம் பெறும் பொறியியல் கல்லூரிகள் | 3 |
| (இ) | சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | 34 |
| | மொத்தம் | 43 |

**2. பல்தொழில் நுட்பம் மற்றும் சிறப்புப் பயிலகங்கள்**

| | | |
|---|---|---|
| (அ) | அரசு பல்தொழில் நுட்ப மற்றும் சிறப்புப் பயிலகங்க;ள | 21 |
| (ஆ) | அரசு மானியம் பெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் | 35 |
| (இ) | சுயநிதி பல்தொழில் நுட்பப்பயிலகங்கள் | 76 |
| | மொத்தம் | 132 |

**மொத்தம் 43 + 132 = 175**

**3. வேலூரில் நடைபெற்று வரும் தந்தை பெரியார் அரசு பொறியியற் கல்லூரியை வேலூரிலேயே நிரந்தரமாக நிறுவுதல் மற்றும் பர்கூரில் புதிய அரசு பொறியியற் கல்லூரி நிறுவுதல்**

1990–91 ஆம் கல்வி ஆண்டில் அம்பேத்கார் வடஆற்காடு மாவட்டம் வேலூரில் தந்தை பெரியார் அரசினர் பொறியியற் கல்லூரி நிறுவ அரசால் அனுமதி வழங்கப்பட்டது. கல்லூரிக்கென நிரந்தர இடம் குறித்து முடிவெடுக்கும் வரையில் வேலூரில் உள்ள தந்தை பெரியார் ஈ.வே.ரா.அரசினர் பாலிடெக்னிக் வளாகத்தில் தற்காலிகமாக கல்லூரி நடைபெற அனுமதிக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அரசினர் பொறியியற் கல்லூரியை தர்மபுரி மாவட்டத்திற்கு மாற்றுவது எனவும், கல்லூரியை கிருஷ்ணகிரி மற்றும் பர்கூருக்கு இடையில் நிறுவப்பட வேண்டுமெனவும் அரசு முடிவெடுத்தது. இந்த முடிவினைத் தொடர்ந்து வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள பொது மக்களிடமிருந்தும், மக்கள் மன்றங்களிருந்தும் கல்லூரியை வேலூரிலேயே நிரந்தரமாக நிறுவ வேண்டும் என அரசுக்கு கோரிக்கைகள் பெறப்பட்டன. எனவே கல்லூரியை பர்கூருக்கு மாற்றுவது தொடர்பாக பல்வேறு காரணங்களைக் கருத்தில் கொண்டும், பொது மக்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையிலும், வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் நோக்குடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேலூரில் உள்ள அரசுப் பொறியியற் கல்லூரி பர்கூருக்கு மாற்றப்படமாட்டாது எனவும், அதற்கு பதிலாக பர்கூரில் புதியதொரு அரசினர் பொறியியற் கல்லூரி நிறுவப்படும் எனவும் அறிவித்துள்ளார்கள். 1995–96–ஆம் கல்வி ஆண்டிலிருந்து புதிய அரசினர் பொறியியற் கல்லூரி பர்கூரில் ஆரம்பிக்கப்படும்.

4. வளர்ச்சிப் பணிகளின் கீழ் ஏற்கனவே உள்ள படிப்புகளுடன் புதிய பட்டயப் படிப்புகள், பட்டப் படிப்புகள் கூடுதல் மாணவர் சேர்க்கையுடன் 1994–95 ஆம் ஆண்டிலிருந்து துவங்குவதற்கு அனைத்திந்திய தொழில் நுட்பக் குழுவின் ஒப்புதலுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**தொழில் நுட்பப் பயிலகங்களில் மாணவர் சேர்க்கை விவரம்**

| வ. எண் | பயிலகங்கள் | எண் ணிக்கை | படிப்பு | முழு நேரம் | பகுதி நேரம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருச்சி மண்டலப் பொறியியற் கல்லூரிகள் உள்ளிட்ட பொறியியற் கல்லூரிகள் | 43 | பட்டப்படிப்பு | 10155 | 1160 | 11315 |
| | | | பட்ட மேற்படிப்பு | 276 | 56 | 332 |
| | | | பட்டமேற்படிப்பு பட்டயம் | 21 | 5 | 26 |
| 2. | பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் | 132 | பட்டயப்படிப்பு | 23360 | 1675 | 25035 |
| | | | பட்டய மேற்படிப்பு | 203 | 90 | 293 |
| | | | சான்றிதழ் படிப்பு | 10 | 210 | 220 |
| | மொத்தம் | 175 | | 34025 | 3196 | 37221 |

## உலக வங்கித் திட்டம்

தமிழக அரசு, மாநிலத்தில் அமைத்துள்ள 55 தொழில் நுட்பப் பயிலகங்கள், அரசு மற்றும் அரசு மானியம் பெறும் தொழில் நுட்பப் பயிலகங்கள் பயன்பெறும் வகையில் ரூ.76 கோடி உலக வங்கியிலிருந்து கடன் பெற ஏற்பளித்து நிதி உதவி பெற்றுள்ளது. இத்திட்டம் கீழ்க்கண்ட மூன்று பெரும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

1. தகுதித் தன்மை விரிவுபடுத்துதல்
2. தர முன்னேற்றம்
3. திறன் முன்னேற்றம்

தொழில் நுட்பப் பயிலகங்களில் கூடுதல் வகுப்புகள் செயல்படுத்துதல் மற்றும் மகளிர் விடுதிகள் மற்றும் ஆசிரியர்கட்குரிய குடியிருப்புகள் ஆகியவற்றைக் கட்டும் பணியும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பயிலக மாணவ மாணவியர்களின் பயிற்சித் திறனை மேம்படுத்தும் வகையில் புதிய இயந்திரங்கள்/தளவாடங்கள் வாங்குவதற்கான கணிசமான தொகை நடுவண் அரசிடம் (DGSD) வைப்புத் தொகையாக வைக்கப்பட்டுள்ளது. மேலும் பயிலக தொழிற் கல்வி தரத்தை மேம்படுத்தும் வகையில் நூல்கள்/வெளியீடுகள்/ நிறப்பு ஏடுகள் முதலானவைகளும், தொழில் நுட்ப பயிற்சியினை வளப்படுத்தும் வகையில் பயிற்சிக்கான துணைக் கருவி/இயந்திரங்களும் வாங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 40 புதிய பட்டயப் படிப்பு மற்றும் 12 பட்டய மேற்படிப்பு வகுப்புகள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டன. மற்றும் அதற்கான பாடத் திட்டங்களை உருவாக்கும் பணி முடிவடைந்துள்ளது. பல்தொழில் நுட்ப பயிலகங்களிலும் தொழில் நுட்ப இயக்ககத்திலும் கணினி வசதிகள் படிப்படியாக செய்து தரப்படுகிறது. தொடர் கல்வி மையங்கள் மேற்கண்ட 55 பல்தொழில் நுட்ப பயிலகங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்திற்கு மாநில அரசு 1993–94 ஆம் ஆண்டு 15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஜுன் 1999–இல் முடிவடையும்.

**1994–95 ஆம் ஆண்டில் புதிய வசதிகளை ஏற்படுத்துதல்**

பகுதி 2 திட்டத்தின் கீழ் 1994–95 ஆம் ஆண்டில் கோவை, அரசினர் பொறியியற் கல்லூரியில் கல்வி வளர்ச்சிக்காக ஆய்வக கட்டடங்கள் கட்ட ரூ.6 இலட்சம் தற்காலிகமாக ஒதுக்க முடிவு செய்துள்ளது.

**மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியம், தமிழ்நாடு**

மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியம், தற்போது தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்காக தமிழக அரசுக்கு சில முக்கிய பரிந்துரைகளை செய்துள்ளது. அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்வி குழு சட்டத்தில், தொழில் நுட்பக் கல்வியின் தரத்தினை பாதுகாக்கவும், தொழில் நுட்பப் பயிலகங்களின் மீது கட்டுப்பாடு கொள்ளவும் மாநில அரசு உரிமை பெறும் வகையில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்ற முடிவும், மாநிலத்தில் உள்ள அனைத்து பொறியியற் கல்லூரிகளையும் ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற முடிவும் வாரியத்தின் முக்கிய பரிந்துரைகளாகும். தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்காக வாரியத்தின் முடிவுகளை செயலாக்க அரசு முயற்சி மேற்கொள்ளும்.

**மொத்த நிதி ஒதுக்கீடு**

| *வ. எண்* | *ஆண்டு* | *வரவு செலவு மதிப்பீடு* | | *திருத்திய மதிப்பீடு* | |
|---|---|---|---|---|---|
| | | *திட்டமில்லாதது* | *திட்டம்* | *திட்டமில்லாதது* | *திட்டம்* |
| | | *(ரூபாய் இலட்சத்தில்)* | | | |
| 1. | 1991–92 | 3271.56 | 409.47 | 3784.17 | 270.72 |
| 2. | 1992–93 | 3726.72 | 247.96 | 4193.86 | 232.91 |
| 3. | 1993–94 | 4234.08 | 221.52 | 4547.24 | 843.74 |
| 4. | 1994–95 | 4786.21 | 833.87 | 4545.52 | 867.57 |

## II அண்ணா பல்கலைக் கழகம்

நாட்டின் மிகப் பெரிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகமாகத் தோற்றுவிக்கப்பட்டது அண்ணா பல்கலைக் கழகம் ஆகும். இப்பல்கலைக் கழகத்தில் நடப்புக் கல்வியாண்டில் 5,200 மாணாக்கர்கள் பயிலுகின்றனர். அவர்களுள், 750 பேர் மகளிர். பொறியியல் தொழில் நுட்பக் கல்வி பயிலும் மகளிர் அதிகமாக இடம் பெற்றிருப்பது இப்பல்கலைக் கழகத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அண்ணா பல்கலைக் கழகத்தில் பயிற்றுவிக்கப்படும் 21 இளநிலைப் பட்டப் படிப்புப் பிரிவுகளிலும், 37 முதுநிலைப் பட்டப் படிப்புப் பிரிவுகளிலும், 4 முதுநிலைப் பட்டயப் படிப்புப் பிரிவுகளிலும் பயிற்றுவிக்கப்படும் பாடங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உறுதுணை புரிவனவாகும்.

உயிர்சார் நுட்பவியல், படிக வளர்ச்சி, தொலையுணர்வுத் தொழில் நுட்பம், சுற்றுச்சூழல் நீர்வளமும் மேலாண்மையும், மின்னணுவியல் போன்ற துறைகளில் இப்பல்கலைக்கழகம் சிறப்பான பணிகளைச் செய்கிறது. நீர்ப்பாசனம், நீர் மேலாண்மை, பொறி அறிவியல் மற்றும் பொறியியல் போன்ற துறைகளில் நாட்டுக்குத் தேவையான மனித ஆற்றலை வெளிப்படுத்தக் கூடிய கல்வியறிவைப் பயிற்றுவிப்பதோடு, அவை தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளது.

புதிய துறைகளில் பட்டப் படிப்புகளை அறிமுகப்படுத்தவும், புலத் துறையை மேம்படுத்தவும், பிற ஏந்துகளின் வளர்ச்சி நிதியாதாரங்க களைப் பெறுவதற்கான முயற்சி முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டுமின்றி அயல்நாடுகளிலுள்ள நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுரங்கப் பொறியியல், இரப்பர் தொழில்நுட்பம், பீங்கான் தொழில்நுட்பம், காலனி அறிவியலும் பொறியியலும், கட்டுமான பொறியியல் மற்றும் உயிர்சார் நுட்பவியல், வானூர்தி மின்னியல், சர்க்கரைத் தொழில்நுட்பம், பெட்ரோலிய சுத்திகரிப்பும் பெட்ரோவேதிப் பொறியியலும் ஆகிய துறைகளில் பயிற்றுவிக்கப்படும் பாடங்கள் நாட்டு முன்னேற்றத்திற்திற்குத் தேவையான தொழில் நுட்பத்தையும், பட்டறிவையும் சார்ந்ததாக அமைந்துள்ள பாங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பல்கலைக் கழகத்தில் பின்வரும் புதிய படிப்புகளைத் தொடங்குவதற்கான கருத்துரு அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

முதுநிலைப் பட்டப் படிப்புகள்

1. மருத்துவ மின்னணுவியல்
2. ஒளியியல் தகவற் பொறியியல்
3. பெட்ரோலிய சுத்திகரிப்பு பெட்ரோ வேதியியல்
4. ஆற்றல் பொறியியல் மேலாண்மை
5. பன்னடுக்க அறிவியல் பொறியியல்
6. பீங்கான் தொழில்நுட்பம்
7. வானூர்தி மின்னணுவியல்
8. சர்க்கரை தொழில் நுட்பம்(பட்ட மேற்படிப்பு பட்டயம்)

இளநிலைப் பட்டப்படிப்புகள்

1. தொழில் துறை உயிர்வாழ்க்கை சார் தொழில் நுட்பம்
2. புவித் தொடர்பியல்

எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இப்பல்கலைக்கழக வளர்ச்சிப் பணிகளுக்காக அறிவியல் மற்றும் மானிடவியல், பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பில் நிதியுதவி வழங்குமாறு பல்கலைக்கழக மானியக்குழுவிடம் கேட்கப்பட்டது. அவற்றுள் ரூ. 480 இலட்சம் நிதியுதவி வழங்க பல்கலைக் கழக மானியக் குழு ஒப்புதலளித்துள்ளது.

1992–97 வரையுள்ள எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்நுட்பக் கல்விக்கு ரூ. 1,425 இலட்சமும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கு ரூ.480 இலட்சமும் வழங்குமாறு மாநிலத் திட்டக் குழுவிற்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரியிலுள்ள பல ஆய்வுக் கூடங்களை நவீனப்படுத்த 12 கோடி ரூபாய் நிதியுதவி வழங்குமாறு ஜப்பான் நாட்டினரை வேண்டிக் கொள்ளும் கருத்துரு மாநில அரசின் வாயிலாக மைய அரசுக்கு அனுப்பப்பட்டு ஆய்விலுள்ளது.

பிற தொழில் நுட்ப நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கு முதுநிலைப் பொறியியல் மற்றும் டாக்டர் பட்டப் படிப்புக்குக் கீழ்க்கண்ட நான்கு துறைகள் தரமேம்பாட்டுத் திட்ட மையங்களாக இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன :

1. பொதுநிலைப் பொறியியல் துறை

2. மின்னியல், பொறியியல் துறை

3. மின்னணுவியல் மற்றும் தகவற் பொறியியல் துறை

4. வேதிப் பொறியியல் துறை

5. தோல் தொழில் நுட்பவியல் துறை

வேதி பொறியியல் துறை மற்றும், நீர்வள ஆய்வு மையம் போன்ற துறைகள் இத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானியக் குழுவின் நிதியுதவி பெறுகின்றன.

படிக வளர்ச்சி மையத்தின் உயரியப் பணிகளைப் பாராட்டி, இம்மையத்தை அனைத்துப் பல்கலைக் கழகங்களின் ஆய்வு மையமாக உயர்த்தி நாட்டிலுள்ள அனைவரும் ஆய்வு செய்ய பல்கலைக் கழக மானியக் குழுவால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் முப்பது இலட்சம் பேருக்கு வீடு வழங்கும் திட்டத்தைச் செப்பமான முறையில் நிறைவேற்றுவதற்காக இப்பல்கலைக் கழகத்தின் நகரிய, ஊரகத் திட்டமிடல் துறையும், நகரிய, ஊரக வீட்டு வசதித்துறையும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கிச் செயற்பட்டு வருகிறது.

அண்ணா பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ள பணிகளுள் பின்வரும் பணிகளைச் சிறப்புடையனவாகக் குறிப்பிடலாம் :

1. ஏரிகளைப் புனரமைத்தல்

2. நகரிய திட்டமிடுதலுக்காக செயற்கைக் கோள் தரவுகளைப் பயன்படுத்தும் மனித ஆற்றலைப் பெருக்குதல்

3. நிலத்தடி நீர்ப் பொறியியல்

4. புவியமைப்பியல்

5. வேளாண்மை

6. வனவளமும் மீன்வளமும்

மேற்குத் தொடர்ச்சி மலையில் கிடைக்கும் வளங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநில அரசின் நிதியுதவியுடன் தமிழகத்தின் ஏழு மாவட்டங்களிலுள்ள தரிசு நிலங்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பல்கலைக் கழகத்தில் கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சிக் களப்புணரமைப்பை மேம்படுத்த ரூ.60 இலட்சம் டாலர் நிதியுதவி வழங்குவதற்கு ஜெர்மானியக் குடியரசு இசைந்துள்ளது :

1. தொலையுணர்வுத் துறை

2. பயிற்சி அளித்து நவீனப்படுத்த மேற்கொள்ளும் துறைகள்

(i) பிராசஸ் கண்ட்ரோல்

(ii) தொழிலகப் பொறியியல்

(iii) மின்னணுவியல் மற்றும் தகவற் பொறியியல்

இப்பல்கலைக் கழகத்தின் நீர்வள ஆய்வு மையம் ஐக்கிய நாட்டரசின் ரூ. 180 இலட்சம் நிதியுதவியுடன் ஏழாண்டுத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. 1993–94 இல் பல்கலைக்கழக–தொழிலக இணைவுக்கு ஓர் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

---

## அத்தியாயம் 8

# பொது நூலகத்துறை

தமிழ்நாடு பொது நூலக சட்டம் 1948 இன்படி பொது நூலகத்துறை கிராமப் பகுதிகள் உள்ளிட்டு மாநிலம் முழுவதும் நூலகப் பணியினைச் சீரிய முறையில் செய்து வருகிறது.

### 1. கன்னிமரா பொது நூலகம்.

மேற்கண்ட நூலகச் சட்டத்தின்படி சென்னையிலுள்ள கன்னிமரா பொது நூலகம் மாநிலத்தின் மைய (தலைமை) நூலகமாகும். நூல் விநியோகச் சட்டம், 1954 இன்படி இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ ஏடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு நகலை இலவசமாகப் பெறும் நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் இந்நூலகமும் ஒன்றாகும். 1956 முதல் இது யுனஸ்கோ நிறுவன தகவல் மையமாகவும் செயல்பட்டு வருகிறது.

### 2. நூலக ஆணைக் குழுக்கள்

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 பிரிவு 5–ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் ஒரு நூலக ஆணைக்குழு ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, தற்போது மாநில அளவில் 21 நூலக ஆணைக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சி மாவட்டங்களில் நூலக ஆணைக்குழுக்கள் தோற்றுவிக்க வேண்டியுள்ளது. தற்சமயம் இந்நூலக ஆணைக்குழுக்களின் கீழ் 18 மாவட்ட மைய நூலகங்கள், 9 இயங்கு நூலகங்கள் உட்பட 1542 கிளை நூலகங்கள் மற்றும் 1091 பகுதி நேர நூலகங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. 1.1.1994 நிலவரப்படி அலுவலர்கள் உட்பட 3549 பணியாளர்கள் நூலகப் பணியினைச் செம்மையாக செய்து வருகின்றனர்.

### 3. நூலக வரி

1992–93ம் நிதியாண்டில் நூலக ஆணைக்குழுக்கள் நூலக வரியாக வசூலித்துள்ள தொகை ரூ.510.00 இலட்சம். கடந்த 10 ஆண்டுக் காலத்தில் உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட நூலக வரி வசூல் படிப்படியாக உயர்ந்துள்ளது.

### 4. நலிந்த நூலக ஆணைக்குழுக்களுக்கு சிறப்பு மானியம்

புதுக்கோட்டை, தருமபுரி போன்ற நூலக ஆணைக்குழுக்களின் வருவாய் போதுமானதாக இல்லை. இத்தகைய நலிந்த நூலக ஆணைக்குழுக்களுக்கு உதவும் வகையில் நூல்கள் வாங்க 1993–94 நிதியாண்டில் அரசு சிறப்பு மானியமாக ரூ.5 இலட்சத்தை வழங்கியது. இத்தகைய உதவி 1994–95 நிதியாண்டிலும் தொடருகிறது.

### 5. பொது நூலகத் துறையின் எட்டுத் திட்டங்கள்

தமிழகத்திலுள்ள மொத்தம் 1560 நூலகங்களில் தற்போது 311 நூலகங்களுக்கு மட்டுமே சொந்த நிலம் உள்ளது. நூலக வளர்ச்சிக்கு ஒவ்வொரு நூலகத்திற்கும் சொந்த மனை மிகவும் அவசியமாகும். ஆனால் நிதிப்பற்றாக்குறை காரணமாக அங்காடி விலைக்கு மனைகள் வாங்குவதென்பது இயலாததாகும். எனவே, பொது மக்களிடம் இலவச மனைகள் கோரிப் பெற வேண்டியது அவசியமாகிறது. இந்த வகையில் இலவசமாக பெறப்பட்ட மொத்த மனைகளின் அங்காடி விலை ரூ.1100 இலட்சம்.

**ii) பொது நூலகங்கள் செயல்படும் ஊர்களில் படித்த ஒவ்வொருவரையும் நூலக உறுப்பினராகச் சேர்த்தல்**

இதன்படி கடந்த ஐந்தாண்டுகளில் 9.66 இலட்சம் பேர், தமிழ்நாட்டில் நூலகத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களையும் சேர்த்து 1.4.93 நிலவரப்படி மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 26.42 இலட்சம் ஆகும்.

**iii) தமிழகத்தின் ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகப் போதிய தளவாடங்கள் பெறுதல்**

பொது நூலகங்களில் நூலடுக்குகள், மனைத் துணைப் பொருட்கள், மின் சாதனங்கள் முதலியன போதுமானதாக இல்லை. இத்தகைய அடிப்படைக் குறைகளை நீக்க, பொது மக்கள், கொடையுள்ளம் கொண்டவர்கள் ஆகியோர்களிடமிருந்து ரூ.122 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் நன்கொடையாக பெறப்பட்டுள்ளன. இதன் விளைவாக பெரும்பாலான நூலகங்கள் தளவாடப் பொருட்களைப் பொறுத்தவரை தன்னிறைவும் பெற்றுள்ளன.

**iv) பொது நூலகம் ஒவ்வொன்றிலும் இரு பகுதி நேர நூலகங்களைத் திறந்து செயல்படுத்துதல்**

1993–94–ஆம் ஆண்டில் நவம்பர் திங்கள் வரை 92 பகுதி நேர நூலகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் மொத்தம் இதுவரை 1091 பகுதி நேர நூலகங்கள் கிராமப் பகுதிகளில் திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

**v) பொது மக்களிடமிருந்து நூலகங்களுக்கு நன்கொடையாக நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறுதல்**

நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ ஏடுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவற்றின் விலையும் பல மடங்கு உயர்ந்து வருகிறது. எனவே, நூலக வரியைக் கொண்டு இவற்றை வாங்க நிதி போதுமானதாக இல்லை. இதனை நிவர்த்தி செய்ய ஒவ்வொரு நூலகத்திற்கும் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறத் திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.10.20 இலட்சம் மதிப்புள்ள நாளிதழ்களும், பருவ ஏடுகளும் நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன.

**vi) நூலகந்தோறும் புரவலர் சேர்த்து நூலக இயக்கத்தை வளர்த்தல்**

நூலக அலுவலர்களிடமிருந்து ரூ.1000,–நன்கொடையாகப் பெற்று புரவலர் சேர்க்கும் திட்டத்தை அரசு வகுத்துத் தந்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் புரவலர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைத் தொகையைநீண்ட கால வைப்பு நிதியில் சேர்த்து அதிலிருந்து பெறப்படும் வட்டியைக்கொண்டு நல்ல நூல்கள் மற்றும் பருவ ஏடுகளை வாங்குவதாகும். இத்திட்டம் பெருவாரியான பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்று இதுவரை 5,611 புரவலர்கள் சேர்க்கப்பட்டு இதன் மூலம் ரூ.56.11 இலட்சம் நிதி நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது.

**vii) இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஒவ்வொரு நூலகத்தையும் சொந்த கட்டடத்தில் செயல்படச் செய்தல்**

மொத்தம் உள்ள 1560 நூலகங்களில் 326 நூலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 482 நூலகங்கள் இலவசக் கட்டடங்களிலும், 752 நூலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. வாடகை மற்றும் இலவசக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் பெரும்பாலான நூலகங்களுக்கு கட்டடங்கள் போதுமானதாக இல்லை.

இக்குறையினை நிவர்த்திக்க அரசு "குறைந்தபட்ச கட்டடத் திட்டம்" ஒன்றை வகுத்துத் தந்துள்ளது. இதுவரை ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கட்டப்படவுள்ள கட்டடங்கள் 515 க்கும், ரூ.2, இலட்சம் செலவில் கட்டப்படவுள்ள கட்டடங்கள் 90க்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### viii) நூலகங்களை வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்கள் தத்து எடுக்க ஆவன செய்தல்

நூலகத் தேவைகள் முழுமையாக நிறைவு பெறவும் குறிக்கோள் நிறைவேறவும் நூலகங்களை வங்கிகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தத்தெடுத்து பங்கு கொள்ளுதல் அவசியம்.

இத்திட்டத்தின் கீழ் செங்கை–எம்.ஜி.ஆர்., சேலம் மற்றும் கோவை மாவட்டங்களில் ஏற்கனவே 8 நூலகங்கள் வங்கிகளால் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அரசுக்கு நூலகம் சம்பந்தமாக ஆலோசனைகளை அளிப்பதற்காக மாநில நூலகக்குழு (1993 முதல் 1996 வரை) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### 6. நூலகவியல் பயிற்சி நிலையம்

பயிற்சி பெறா மூன்றாம் நிலை நூலகர்களுக்கு பயிற்சித் தர, பொது நூலக இயக்ககத்தில் ஒரு நூலகவியல் பயிற்சி நிலையம் நடத்தப்படுகிறது. இந்நிறுவனம், முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நூலகர்களுக்கு ஆண்டு தோறும் புத்துணர்வு மற்றும் மறுபயிற்சியும் அளித்து வருகிறது.

### 7. மைய அரசுப் பணிக்கான போட்டித் தேர்வுக்கு உதவும் தனிப்பிரிவு.

அகில இந்திய அளவிலான மைய அரசுப் பணித் தேர்வுகளில் தென் மாநிலங்களில் தேர்வு எழுதுபவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதையும், இத்தேர்வில் தேர்ச்சிப் பெறுபவர்கள் எண்ணிக்கை குறைந்து வருவதையும் கருத்திற்கொண்டு, தமிழகத்தில் சென்னை, கோவை, மதுரை, திருச்சி மற்றும் நெல்லை மாவட்ட மைய நூலகங்களில் "போட்டித் தேர்வுக்கான மையம்" ஒன்று துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கான பாட நூல்களை வெளி மாநிலங்களிலிருந்து தருவித்து வைக்கவும், அமைதியான சூழ்நிலை கூடிய குளிர்சாதன வசதி கொண்ட அறைகளை நிர்மாணிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.5 முதல் 10 இலட்சம் வரை, நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து செலவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், INSDOC-ன் கீழ் (இந்திய தேசிய விஞ்ஞான ஆவண மையம்) நடத்தி வரும் MALIBNET என்கிற சங்கத்தில் சென்னை மாவட்ட மைய நூலகம் உறுப்பினராக சேர்ந்து, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப தகவல்களை பரிமாறிக் கொள்ளத் தக்க வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பல கல்லூரி மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் பயன் அடைவார்கள். இதற்காக ரூ.3 இலட்சம் வரை செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்த நிதி ஒதுக்கீடு

| ஆண்டு | வரவு; செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|
| | திட்டத்தில் சேராதது | திட்டம் | திட்டத்தில் சேராதது | திட்டம் |
| 1991–92 | 887.70 | 17.85 | 1062.22 | 16.62 |
| 1992–93 | 1116.83 | 17.07 | 1218.14 | 18.62 |
| 1993–94 | 1158.55 | 19.51 | 1146.94 | 20.52 |
| 1994–95 | 1264.08 | 21.49 | – | – |

அத்தியாயம் 9

# தமிழ்நாடு ஆவணக்காப்பகம்

இந்தியாவிலேயே முதன்மையானதும், சிறப்பானதும், தனிப்பெறும் பெருமையுடையதுமான தமிழ்நாடு ஆவணக்காப்பகம், 1909 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். 1670 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரையிலான அசல் ஆவணங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இக்காப்பகத்தில் பாதுகாக்கப்படும் ஆவணங்கள் தலைமைச் செயலகத்துறைகள், வருவாய்த் துறை வாரியங்கள் மற்றும் சில துறைத் தலைமை அலுவலகங்களைச் சார்ந்தவையாகும். சிப்பாய் கலகத்திற்கு முந்தைய காலத்தைச் சார்ந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நீதிமன்ற அலுவலக ஆவணங்களும், மற்றும் தற்போது செயல்படாத துறைகளின் ஆவணங்களும் மையப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்படுகின்றன. இங்குள்ள ஆவணங்களில் முதன்மையான ஆவணம், கி.பி.1670ஆம் ஆண்டைச் சார்ந்ததாகும். தற்சமயம் இக்காப்பகத்தில், 50,82,464 கோப்புகளும் 7,70,431 தொகுப்புகளும் மற்றும் 2674 ஆவணக்கட்டுகளும் உள்ளன. நில அடமான வங்கி மற்றும் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த கடன் பத்திரம் மற்றும் ஒப்பந்த பத்திரங்கள் ஆகியவை இவ்வலுவலகத்தின் “பாதுகாப்பு நிலைப்பேழையில்” பாதுகாக்கப்பட்டு வருகிறது. இவை தவிர, 1962 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்களும் இங்கு பராமரிக்கப்படுகிறது. இவை தவிர டச்சு, டேனிஷ் மற்றும் மராத்தி மொழி ஆவணங்களும் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

2. இக்காப்பகத்தின் முக்கியப் பணிகள் வருமாறு

1. அரசு நிர்வாக இயந்திரத்திற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்களை வழங்குதல்;
2. ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருதல்;
3. சான்றொப்பமிடப்பட்ட அரசிதழ் நகல்களை உரிய கட்டணத்தின் பேரில் பொது மக்களுக்கு வழங்குதல்;
4. அறிவியல் முறையில் ஆவணங்களைப் பாதுகாத்தல்;
5. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆவணத் தொகுப்பு மற்றும் ‘ஆவண அமுதம்’ என்னும் காலாண்டு இதழ் ஆகியவற்றைப் பிரசுரித்தல்;
6. ஆவணப்பராமரிப்பு குறித்த பயிற்சியளித்தல்.

### 3. ஆவணப்பாதுகாப்பு

முதன்மை வாய்ந்த அறிவியல் வழியிலான முறைகளைப் பின்பற்றுவதால், தமிழ்நாடு ஆவணக்காப்பகத்தில் பின்பற்றப்படும் ஆவணப் பாதுகாப்பு முறை குறிப்பிடத்தக்கதாகும். பழமை வாய்ந்த, சேதமடைந்த ஆவணங்கள் முறையாக செப்பனிடப்பட்டு, உறை கட்டப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள இரசாயன புகையூட்டும் இயந்திரம் மற்றும் Vaccum Fumigation Chamber தொழில்நுட்ப இயந்திரங்களின் துணை கொண்டு ஆவணங்கள் பாதுகாப்புப்பணி சிறப்புடன் செயலாற்றப்படுகிறது.

### 4. நுண்நிழற்படப் பிரிவு (Micro film unit)

நுண்நிழற்படப் பிரிவு 1982 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். பழைய மூல ஆவணங்களை, ஆராய்ச்சியாளர்கள் கையாள்வதிலுள்ள சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் இவ்வாவணங்களை நுண்நிழற்படம் (Micro filming) எடுத்துப் பின்னர் ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. 1993 ஆம் ஆண்டில் 1,51,668 ஆவண நகல்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. இப்பிரிவு நிறுவப்பட்டதிலிருந்து இதுவரை 13,26,638 நகல்கள் எடுக்கப்பட்டுள்ளன.

#### தேசிய சிறப்பு வாய்ந்த நுண்நிழற்பட ஆவணங்கள்

இத்திட்டத்தின் கீழ் 1993–94–இல் மைய அரசு உதவிப் பங்குத் தொகையாக ரூ.2.5 இலட்சமும், மாநில அரசு அளித்த ரூ.83,333–ம் (மைய அரசு பங்கு 75 சதவீதம், மாநில அரசு பங்கு 25 சதவீதம்) செலவிடப்பட்டுள்ளது.

### 5. நூலகம்

முறையாக பகுக்கப்பட்டுப் பராமரிக்கப்படும் 2,48,329 புத்தகங்கள் தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இந்நூலகத்தில் உள்ள புத்தகங்களை வெளியில் எடுத்துச் செல்ல அனுமதிப்பது இல்லை. ஆராய்ச்சியாளர்கள் பார்வையிடவும், குறிப்பெடுத்துக்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.

### 6. பயிற்சிப் பிரிவு

அரசு அலுவலகங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் ஆவண அறைப் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கு "ஆவணப் பராமரிப்பு" குறித்த 30 நாட்கள் குறுகிய காலப்பயிற்சி ஒன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள பயிற்சிப் பிரிவில்

அளிக்கப்படுகிறது. இதுவரை 2,091 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அரசுத் துறை அல்லாத பொதுத் துறை நிறுவனங்களுக்கும் இப்பயிற்சியை அரசு விரிவாக்கம் செய்துள்ளது. இந்நிறுவனங்களின் மூலம் அனுப்பப்படும் பயிற்சியாளர்களிடமிருந்து ரூ. 500 பயிற்சிக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படும். 1994–95 ஆம் நிதியாண்டில் சுமார் 170 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

## 7. விவரச்சுவடிப் பிரிவு

மாவட்ட விவரச்சுவடிகளை வெளியிடும் பணியில் இப்பிரிவு ஈடுபட்டுள்ளது. இதுவரை தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், தென்னாற்காடு, சேலம், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட விவரச்சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்ட விவரச்சுவடிகள் விரைவில் வெளியிடப்படும். செங்கை எம்.ஜி.ஆர். மாவட்ட விவரச்சுவடி தயாரிக்கப்பட்டு இறுதியாக்கப்படும் நிலையில் உள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்ட விவரச்சுவடி தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

## 8. வெளியீட்டுப் பிரிவு

வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் அரசு நிருவாகம் சார்ந்த தெரிந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளை இக்காப்பகத்தின் வெளியீட்டுப் பிரிவு வெளிக்கொணர்கிறது. தேர்ந்தெடுத்த 12 ஆவணத் தொகுப்புகளில், 10 தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர விலை நிர்ணயம் செய்யப்பட்ட "ஆவண அமுதம்" எனும் காலாண்டு இதழ் 1986 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படுகிறது. ஜூலை–செப்டம்பர் 1986 முதல் ஜூலை–செப்டம்பர் 1993 வரை 26 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## 9. தமிழ்நாடு வரலாற்றுச் சான்றேடுக் குழு

வரலாற்று ஆய்வினை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சிக் குழு ஆண்டுதோறும் தகுதி வாய்ந்த நபர்களுக்கு நான்கு மாணவப் பணியிடங்கள் (Fellowship) வழங்கி வருகிறது. கல்வி அமைச்சர் இக்குழுவின் தலைவராவார். இதுவரை இக்குழுவில் 20 ஆராய்ச்சி மாணவர்கள் சேர்ந்து அனைவரும் ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். இவற்றில் இரண்டு அறிக்கைகள் ஆய்வுக் குழுவினால் ஏற்கப்பட்டு ஆராய்ச்சியாளர்களால் வெளியிடப்பட தேர்வு செய்யப்பட்டது. மாநிலத்தில் உள்ள தனியார் ஆவணங்களின் விவரங்கள் அறிந்து அதனைச் சேகரிப்பது வரலாற்று ஆவண ஆய்வுக் குழுவின் தலையாய பணியாகும்.

## 10. ஆவண வழிகாட்டிப் பிரிவு

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள ஆவணங்களுக்கான வழிகாட்டி மைய அரசு நிதி உதவியுடன் 1989 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பக ஆவணங்களுக்கு தொகுக்கப்பட்ட வழிகாட்டி தயாரிக்கும் பணி கீழ்க்கண்டபடலங்கள் (Chapters) வாரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சர்ஜன் ஜெனரல் ஆவணங்கள், கரோனர்ஸ் ஆவணங்கள், கர்னாடிக் சொத்தினைப் பெற்றவர் ஆவணங்கள், பொது எல்லை அரசியல் பதிவேடு, புனித ஜார்ஜ் கோட்டை வெளியீடுகள், பாரசீக ஆவணங்கள், சென்னைப் படை ஆவணங்கள், படை ரெசிப்ட் ஆவணங்கள், நீதி முதலான டச்சு மற்றும் டேனிஷ் துறை ஆவணங்கள். இதற்கான செலவினத்தில் மைய அரசும், மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் பங்கு கொள்கின்றன.

## 11. மாவட்ட ஆவணக் காப்பகங்கள்

மாவட்ட அரசு அலுவலகங்களில் சிதறுண்டு கிடக்கும் வரலாற்று மற்றும் நிருவாகச் சிறப்புமிக்க ஆவணங்களைத் தொகுத்துப் பாதுகாக்கும் பொருட்டு, இதுநாள் வரை மதுரை, கோவை, கடலூர், திருச்சி மற்றும் சேலம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆவணக்காப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஐந்து மாவட்ட ஆவணக்காப்பகங்களில் 4,13,323 ஆவணங்களும், 9,904 புத்தகங்களும், 98,448 மோடி ஆவணங்களும் மற்றும் 257 பனை ஓலைச்சுவடிகளும் தொகுக்கப்பட்டுள்ளன.

## 12. மொத்த நிதி ஒதுக்கீடு

| ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|
| | திட்டத்தில் சேராதது | திட்டம் | திட்டத்தில் சேராதது | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1991–92 | 59.12 | 27.59 | 66.94 | 33.49 |
| 1992–93 | 68.52 | 47.38 | 94.63 | 58.05 |
| 1993–94 | 95.83 | 46.17 | – | – |

## அத்தியாயம் 10

# விளையாட்டு மற்றும் இளைஞர் பணி

### 1. விளையாட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்கள் :

(அ) மாநிலத்தில் விளையாட்டுக்கான அரங்க வசதிகளை ஏற்படுத்துதல்;

(ஆ) திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு வீரர்களாக உருவாகப் பயிற்சி அளித்தல்;

(இ) விளையாட்டுக் கழகங்கள் திறம்பட செயல்படுவதற்கு நிதியுதவி அளித்தல்;

(ஈ) இளைஞர் நலப் பணிகளையும் தேசியநலத் திட்டங்களையும் மேம்படுத்துதல்.

### 2. விளையாட்டுக் கள வசதிகள்

ஒவ்வொரு மாவட்ட தலைமையிடத்திலும் ஒரு விளையாட்டு அரங்கமும், ஒரு நீச்சல் குளமும், ஓர் உள் விளையாட்டரங்கமும் அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்பொழுது 13 திறந்த விளையாட்டரங்கங்களும், 4 உள் விளையாட்டரங்கங்களும், 4 நீச்சல் குளங்களும் இந்த மாநிலத்தில் உள்ளன. தூத்துக்குடி மற்றும் விருதுநகரில் விளையாட்டரங்கக் கட்டுமானப்பணி நடந்து கொண்டிருக்கிறது. மேலும், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் விளையாட்டரங்கக் கட்டுமானப் பணிகளை மைய அரசின் நிதியுதவியுடன் இவ்வாண்டு தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் நீச்சல் குளம் கட்டுவதற்கான கருத்துரு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

நவீன விளையாட்டுக்களுக்கு தடகள செயற்கை ஓடுபாதை (ரப்பர் மண் ஓடுபாதை) ஹாக்கி செயற்கைப்புல்தரை முதலான காலத்தோடு ஒட்டிய அறிவியல் வசதிகள் தேவை.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆற்றல் வாய்ந்த தலைமையில் 7 1/2 மாதங்களில் பிரமிக்கத்தக்க வகையில் கட்டப்பட்ட ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில், சர்வதேச அளவுக்கு இணையாக, தடகள விளையாட்டிற்கென செயற்கை ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டரங்கில் புதிதாக அமைக்கப்பட்ட செயற்கை ஓடுபாதை 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் திறந்து வைக்கப்பட்டு தேசியப் போட்டியுடன் கூடிய பன்னாட்டுத் தடகளப் போட்டிகள் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டன.

**மகளிருக்கான பன்னாட்டழைப்பு டாக்டர் ஜெ.ஜெயலலிதா பொற்கோப்பை உதைப்பந்து போட்டி**

மகளிருக்கான பன்னாட்டழைப்பு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா பொற்கோப்பை உதைப்பந்து போட்டி ஒன்றினை 1994 மே திங்கள் 1 முதல் 16 வரை சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தெற்காசிய கூட்டமைப்புப் போட்டிகள் 1995**

1995 இல் சென்னையில் 7 வது தெற்காசிய கூட்டமைப்புப் போட்டிகளை நடத்தும் ஒரு சிறப்பான நல்வாய்ப்பு தமிழகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (1) பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், (2) மிதிவண்டி விளையாட்டரங்கம் (3) நவீன ஹாக்கி செயற்கை புல்பாதை (4) சென்னை நுங்கம்பாக்கத்தில் பன்னாட்டரங்க அளவில் ஒரு டென்னிஸ் விளையாட்டரங்கம் ஆகியவை கட்டப்படவிருக்கின்றன. மேலும் சென்னை மெரினாவில் உள்ள அண்ணா நீச்சல் குளத்தினை நவீனப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 1995 தெற்காசிய கூட்டமைப்பு போட்டிகளுக்குத் தேவைப்படும் கூடுதல் வசதிகளையும், சென்னையில் உள்ள பிற விளையாட்டு வசதிகளையும் மேம்படுத்தவும் அரசு கருதியுள்ளது.

**3. விளையாட்டுப் பள்ளி மற்றும் விடுதிகள்**

(அ) விளையாட்டுத் திறன் உள்ள பள்ளி மாணவ,மாணவிகளுக்கு பயிற்சி தருவதற்காக நான்கு விளையாட்டுப் பள்ளிகளையும், நான்கு விளையாட்டு விடுதிகளையும் அரசு நடத்தி வருகிறது. இதில் ஒரு விளையாட்டுப் பள்ளி மற்றும் ஒரு விளையாட்டு விடுதி சிறுமியர்களுக்கென்று தனியே அரசு நடத்தி வருகிறது. எட்டாவது வகுப்பு படிக்கும் மாணவ/மாணவிகளை இவ்விளையாட்டுப் பள்ளி/விடுதிக்கு தேர்வு செய்து அவர்கள் மூன்று ஆண்டும் மற்றும் பதினோராம் வகுப்பு படிக்கும் மாணவ/மாணவிகளை இப்பள்ளி/

விடுதிக்கு தேர்வு செய்து அவர்கள் இரண்டு ஆண்டும் அவற்றின் விடுதிகளில் தங்கி, விளையாட்டிலும், படிப்பிலும் தேர்ச்சி பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தற்போது 700 மாணவ/மாணவிகள் இப்பள்ளி மற்றும் விடுதிகளில் தங்கி, பயின்று வருகின்றனர்.

(ஆ) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இந்திய விளையாட்டு ஆணையத்துடன் சேர்ந்து இந்திய விளையாட்டு ஆணைய விளையாட்டு விடுதி ஒன்றைச் சென்னையிலும், சிறப்புத் திட்ட வளர்ச்சிப் பகுதி மையம் (எஸ்.பி.டி.ஏ) ஒன்றை மாணவர்களுக்காக சேலத்திலும், மற்றொன்றை மாணவிகளுக்காக நாகர்கோவிலிலும் தொடங்கியுள்ளது. இதில் மாணவ, மாணவிகள் தங்கிப் படித்து விளையாட்டிலும் தேர்ச்சி பெற்றுச் சிறந்து விளங்குகிறார்கள்.

**மாணவ/மாணவியர் விளையாட்டுப் பள்ளி/விடுதிகளின் சாதனைகள்**

ஐதராபாத்தில் பிப்ரவரி இரண்டாம் வாரத்தில் தேசீய விளையாட்டு விழா நடந்தது. அங்கு நடந்த 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் 24.2 நொடிகளில் ஓடி புதியதொரு சாதனையை மதுரை ஓ.சி.பி.எம். பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த மேற்கண்ட விளையாட்டுப் பள்ளி மாணவி செல்வி கே.சோலைமதி ஏற்படுத்தியுள்ளார்.

ஆகஸ்டு 1993 இல் பீஜப்பூரில் நடந்த இளநிலை தேசீய கைப்பந்துப் போட்டியில் திருச்சிராப்பள்ளி விளையாட்டு விடுதியினைச் சேர்ந்த 3 மாணவர்கள் தமிழகத்தின் சார்பாக கலந்து கொண்டு இரண்டாம் இடம் பெற்றனர்.

**(இ) விளையாட்டுச் சிறப்பு விடுதி**

சென்னையில் விளையாட்டுச் சிறப்பு விடுதி ஒன்றை, 16 முதல் 20 வயது வரை உள்ள பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கு விளையாட்டில் நல்வாய்ப்பை உண்டாக்குவதற்காகத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அவர்கள் திறமை பெற்றுள்ள விளையாட்டுகளுக்காக தெரிந்தெடுக்கப்பட்டு விளையாட்டு விடுதிகளால் தத்தெடுக்கப்பட்டு சிறப்புப் பயிற்சி தரப்படுவார்கள். சத்துணவு, விளையாட்டுச் சீருடைகள் மற்றும் கல்விப் பயிலகக் கட்டணங்கள் முதலானவை அவர்களுக்கு வழங்கப்படும். திறமையுள்ள விளையாட்டு வீரர்கள் கல்வியைத் தொடர்வதோடு விளையாட்டுப் பயிற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தேசீய அளவிலும், பன்னாட்டு அளவிலும் மேம்பட்டு விளங்க இது வாய்ப்பினைத் தரும்.

### 4. பள்ளிகளில் விளையாட்டுக்கள்

இளைஞர்களிடையே காணப்படும் விளையாட்டுத் திறனை வெளிக்கொணரவும், திறமைமிக்க இளைஞர்களுக்காகவும் அரசு பலவிதமான விளையாட்டுத் திட்டங்களைத் தோற்றுவித்துள்ளது.

பள்ளிச் சிறுவர்களுக்குக் கீழ்க்காணும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன :

1. இளமையில் தெரிந்தெடுத்தல்
2. சிறார்களைக் கண்டு பயிற்சியளித்தல்
3. குடியரசு நாள் போட்டிகள்
4. பாரதியார் நாள் போட்டிகள்
5. இந்தியப் பள்ளி விளையாட்டு இணையப் போட்டிகள்

ஒருங்கிணைந்த தமிழ்நாட்டுப் பள்ளி அணி, இந்தியப் பள்ளி விளையாட்டுப் இணையப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று தமிழகத்துக்குப் புகழையும், பெயரையும் தேடித் தருகின்றது.

### 5. ஊரக இளைஞர் விளையாட்டுகள்

ஊரக இளைஞர்களிடையே காணப்படும் விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்த, ஊரக இளைஞர்களுக்கு வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாநில ஊரக விளையாட்டு அணி ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் அனைத்திந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்கிறது.

### 6. ஊரக விளையாட்டு மையங்கள்

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களை விளையாட்டில் ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றிய தலைமையகங்களிலும் ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையம் 4 ஏக்கர் நிலப் பரப்புடன் கண்டறிந்து, அதனை 400 மீ. ஓடுகளப் பாதையுடன் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய தலைமையகங்களில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குர்/உடற்கல்வி ஆசிரியர்களைக் கொண்டு அந்தந்தக் கிராமப்புற இளைஞர்களுக்கு விளையாட்டில் பயிற்சி அளித்து, குறிப்பாக தடகள

விளையாட்டுகளில் பயிற்சி அளித்து அவர்களை விளையாட்டு வீரர்களாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் அமைக்கப்படவுள்ள ஒரு குழு தேவைப்படும் நிலத்தினைக் கண்டறிந்து அந்த ஊரக விளையாட்டு மையத்தின் செயல்பாட்டினைக் கண்காணிக்க உள்ளது. கிராமப்புற இளைஞர்களிடையே போட்டி விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த ஊரக விளையாட்டு மையங்களுக்கு இடையே விளையாட்டுப்போட்டிகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையத்திற்கும் ரூ.10,000 செலவில் விளையாட்டு ஆடுபொருட்களும், விளையாட்டு களப் பொருட்களும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7. மகளிர் விளையாட்டுப் போட்டிகள்

விளையாட்டுப் போட்டிகளில் மகளிருக்குச் சரிசமமான வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தேசிய அளவிலான போட்டிகளிலும் அவர்கள் பங்கேற்று வருகின்றனர்.

### 8. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை, பண விருது வழங்கல்

சர்வதேசப் போட்டிகளில் வெற்றி பெற்ற 21 தமிழக விளையாட்டு வீரர்களுக்கு 17–7–93 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அர்சுனா மற்றும் துரோணாச்சாரியா விருதுகளை பணப்பரிசுடன் வழங்கிச் சிறப்பித்தார்.

#### ஊக்குவிப்புத் திட்டங்கள்

இனிவரும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெறவுள்ள தமிழக விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக அவ்விளையாட்டு வீரர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட உயர் வருவாய் பிரிவினருக்கான அடுக்கு மாடி வீடோ (Flat) அல்லது வீட்டு மனையோ (Plot) இலவசமாக வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் மேற்படி போட்டிகளில் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் பெறும் விளையாட்டு வீரர்களுக்கு முறையே வீட்டு வசதி வாரிய மத்திய வருவாய் மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கான அடுக்கு மாடிவீடு இலவசமாக வழங்கப்படும். மேற்கூறிய மனை அல்லது வீடுகளுக்கான செலவினத்தை கல்வித்துறை ஏற்றுக்கொள்ளும் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

1993 ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஆசிய டிரையாத்லான் விளையாட்டுப் போட்டியில் ஜுனியர் பெண்கள் பிரிவில் தமிழகத்தைச் சார்ந்த செல்வி சி. அமுதா தங்கப்பதக்கம் பெற்றதைப் பாராட்டி, அவருக்கு உயர் வருவாய் பிரிவினருக்கான வீடும், ரூபாய் ஒரு லட்சம் ரொக்கப் பரிசும் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு ரேஸ் சைக்கிள் மற்றும் சீருடை ஆகியவையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தைச் சார்ந்த பயிற்றுனர்கள், தேசிய மற்றும் உலக அளவிலான விளையாட்டு போட்டிகளில் அதிக எண்ணிக்கையில் விளையாட்டு வீரர்களை உருவாக்கிடத் தூண்டுகோலாக அமைய அவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு அளிக்கப்படுகிறது.

### சிறப்புத் தொகை வழங்கல்

மாணவர்களை விளையாட்டில் ஊக்கப்படுத்துவதற்காக, மாநில பொங்கல் விளையாட்டுப் போட்டிகள், குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள், பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கும், வெற்றி வழியோடியவர்களுக்கும் (runners up) முறையே ரூ.600, ரூ.400, என்ற விளையாட்டுச் சிறப்புத் தொகை வழங்கப்படுகிறது. 1992–93 இல் அரசு இந்த வகையில் 384 மாணவ/மாணவிகளுக்கு ரூ. 2.02 இலட்சம் வழங்கி ஊக்கம் தந்துள்ளது.

### சிறந்த விளையாட்டு வீரர்களைத் தத்து எடுக்கும் திட்டம்

சிறந்த விளையாட்டு வீரர்களைத் தத்தெடுத்தல் என்ற திட்டத்தில் 1993–94 ஆம் ஆண்டில் விளையாட்டில் தேர்ச்சி பெற்ற சிறந்த 3 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் மாதம் ரூ. 500 வீதம் பத்து மாதங்களுக்கு ஊட்டச்சத்து உணவுத் தொகையாகவும், ஆண்டொன்றுக்கு ரூ. 1,500 விளையாட்டுச் சீருடையாகவும் வழங்கப்படும்.

மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செல்வன் விஸ்வநாதன் மற்றும் செல்வன் வி. குற்றாலிஸ்வரன் ஆகியோரை அவர்களின் வீரதீர செயல்களுக்காகத் தத்தெடுத்துள்ளது.

மதுரையிலுள்ள ஒய்.எம்.சி.ஏ. ஆரம்பப் பள்ளி இரண்டாம் வகுப்பு மாணவன் செல்வன் ஆர். விஸ்வநாதன் கால் சுழற் சக்கர சறுக்கல் மூலம் மதுரையிலிருந்து சென்னைக்கு (480 கி.மீ.) பயணம் செய்தபோது துயர்துடைப்பு நிதிக்காக நிதி வசூலும் செய்து அளித்தான். அந்த

மாணவனின் திறமையைப் பாராட்டிய முதலமைச்சர் சென்னையிலிருந்து பம்பாய் வரை மேற்கண்ட கால் சுழற் சக்கர சறுக்கல் பயணத்தைத் தொடர உதவும்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு உத்தரவிட்டுள்ளார். மகாராட்டிர மாநில பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிதியுதவி செய்வதே இந்த மாணவனின் குறிக்கோள். இதற்காக தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இந்த மாணவன் சென்னையிலிருந்து பம்பாய் வரை பயணம் தொடர ரூ. 1.40 இலட்சம் நிதியுதவி செய்துள்ளதுடன் அந்தப் பயணத்தை 2–3–94 இல் ஆரம்பித்து வைக்க உதவி செய்துள்ளது. சென்னை டி.ஏ.வி. மேல்நிலைப் பள்ளி மாணவன் செல்வன் வி. குற்றாலீஸ்வரன் ஒரு நீண்டதூர கடல்வழி நீச்சல் வீரன். நீண்ட தூர கடல்வழிப் பயணப் போட்டிகள் பலவற்றில் பங்கேற்றுள்ளான். அவனுடைய குறிக்கோள் பெருமை பெற்ற ஆங்கிலக் கால்வாயை 1994 ஜூலை–ஆகஸ்டில் கடக்க வேண்டுமென்பதாகும். அவன் திறமையைப் பாராட்டிய தமிழக முதல்வர் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் முன் பாக் ஜலசந்தியைக் கடந்து வரும் நீச்சல் பயணத்தை தொடரப் பணித்துள்ளார். முதலமைச்சரின் ஆணைக்கிணங்க தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 1994 ஏப்ரல் மாதம் பாக் ஜலசந்தியைக் கடக்கும் பயணத்திற்கான ஆரம்பக் கட்ட ஏற்பாடுகளை செய்து வருகிறது.

**ஓய்வூதியம்**

வறுமை நிலையில் வாடும் சிறந்த விளையாட்டு வீரர்கள் 50 பேருக்கு மாதம் ரூ. 75 வீதம் விளையாட்டு ஓய்வூதியம் தரப்படுகின்றது. தற்போது வழங்கி வரும் இத்தொகை ரூ. 75 ஐ ரூ.500 ஆக 1994 முதல் உயர்த்திக் கொடுக்க அரசு உத்திரவிட்டுள்ளது.

## 9. விளையாட்டுக் கழகங்களுக்கு நிதியுதவி அளித்தல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 36 மாநில விளையாட்டுக் கழகங்களைப் பதிவு செய்து, அக்கழக அணி தேசிய/தென்மண்டல மாநிலங்களுக்கிடையேயான போட்டிகளில் பங்கு கொள்வற்கும் விளையாட்டில் சிறந்த வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பன்னாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளவும் மானியம் வழங்கி வருகிறது. மேலும் மாநிலம்/தேசிய/பன்னாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கும் மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

3c

1993 பிப்ரவரி மாதம், தமிழ்நாடு கைப்பந்துக் கழகம் "ஆசிய பீச் கைப்பந்து போட்டிகளை" சென்னையில் நடத்தியது.

செல்வி சாமுண்டீஸ்வரி மற்றும் திரு. மோகனகிருட்டிணன் ஆகிய பளு தூக்குநர்கள், ஸ்வீடனில் 30–11–1993 முதல் 5–12–1993 வரை நடைபெற்ற முதியர் உலக பளுதூக்கும் போட்டியில் கலந்து கொண்டனர்.

மேற்கூறிய இருவருக்கும் இவ்விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இவ்விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிதியுதவி வழங்கப்பட்டது. செல்வி சாமுண்டீஸ்வரி நான்காமிடத்தையும் திரு. மோகனகிருட்டிணன் ஏழாமிடத்தையும் அந்த உலகப் போட்டியில் பெற்றுள்ளனர்.

**இளைஞர் தொண்டு**

வானில் மிதந்து பறத்தல், காடு மற்றும் பாறை முகடுகளில் ஏறுதல், மலை ஏறுதல், மிதி வண்டிப் பயணம், காற்றுச் சறுக்குப் படகு முதலான தீரச் செயல்கள் புரியும் இளைஞர்களை இத்துறை ஊக்குவித்து வருகிறது. சிற்றூர் மக்களை மேம்படுத்துகிற, நாட்டுப்புற மற்றும் இளைஞர் நலத் திட்டங்கள் ஆண்டு முழுவதும் செயல்படுத்தப்படுகின்றன, நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர் 'திட்ட அலுவலர்கள்' மற்றும் 'ஒருங்கிணைப்பாளர்கள்' ஆகியோருக்கு மாநில அளவிலான இளைஞர் விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. நாட்டு நலப்பணித் திட்ட படைக் குழுக்களுக்கு சுழற்கேடயம் உருவாக்கி வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் இளைஞர் விழாக்கள் சுழல் முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

**இளைஞர் விடுதிகள்**

சுற்றுப்பயணம் செய்யும் இளைஞர்கள் குறைந்த வாடகையில் தங்குவதற்கான இட வசதிகள் இளைஞர் விடுதிகளில் செய்யப்பட்டுள்ளன. சென்னை மற்றும் மதுரை மாவட்டத்தில் இரண்டு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஓர் இளைஞர் விடுதி கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவிற்காகத் தயார் நிலையிள்ளது. திருச்சி மாவட்டத்தில் ஓர் இளைஞர் விடுதிக்கான கட்டுமானப் பணி நடந்து கொண்டிருக்கிறது.

## I நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், மற்றும் மேநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் ஆளுமைத் தகுதியையும், தனித் திறமைகளையும் இளைஞர் முன்னேற்றப் பணிகளில் ஈடுபடுத்திடும் மிகப் பெரிய திட்டமே நாட்டு நலப்பணித் திட்டமாகும். இத்திட்டமானது மைய மற்றும் மாநில அரசுகளால் 7:5 என்ற நிதிவிகித அளவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1969 இல் 3,000 மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம், தற்போது 1,40,000 என்ற எண்ணிக்கையை எட்டியுள்ளது.

1983–84 முதல் தொழில் நுட்பப் பயிலகங்களிலும் நாட்டு நலப் பணித்திட்டத்தை தொடங்கிய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். இந்தியாவிலேயே மிக அதிக அளவில் மேநிலைப் பள்ளிகளில் 50,000 மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு இத்திட்டம் இயங்கி வருகிறது. மேலும் மாநிலத்தில் பல்வேறு பல்கலைக் கழகங்கள், ஐ.டி.ஐக்கள் சுய வேலை வாய்ப்பைப் பெற்றிடும் வகையில் தொழில்நுட்பப் பயிற்சி சம்பந்தப்பட்ட பலவிதமான திட்டங்களை மேற்கண்ட நாட்டுநலப் பணித் திட்டம் மூலம் நிறைவேற்றுகின்றன.

மாணவர்களிடையே தொழில்துறை உரிமை மற்றும் தலைமையேற்கும் மனத்திண்மை ஆகியவற்றை வளர்ப்பதற்கான திட்டங்களை நகரங்களில் இயங்கிவரும் கல்லூரிகள் நிறைவேற்றுவதுடன், போதை மருந்து, குடிப்பழக்கம் ஆகியவற்றின் தீமைககளை வலியுறுத்தும் திட்டங்கள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றையும் நிறைவேற்றி வருகின்றன.

தேசிய ஒருமைப்பாட்டு முகாம், வீரதீரச் செயல்கள் மற்றும் இளைஞர் கண்காட்சி போன்ற இளைஞர்களுக்கிடையே விழுப்புணர்வை ஏற்படுத்தும் நூறு சதவீதம் மைய அரசால் நிதியுதவி அளிக்கப்படும் திட்டங்களையும் பல பல்கலைக்கழகங்கள் நிறைவேற்றுகின்றன.

முறையான திட்டம் மற்றும் சிறப்பு முகாம் திட்டம் என்ற இருவேறு திட்டங்களை நாட்டு நலப்பணித் திட்டம் கொண்டுள்ளது. முறையான திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நாட்டுநலப் பணித் திட்டத் தொண்டரும் தொடர்ச்சியாக 2 ஆண்டுகளில் 240 மணி நேரமும், சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொடர்ந்து 10 நாட்களுக்கு நடத்தப்படும் முகாமிலும் தவறாது பங்கேற்க வேண்டும்.

முறையான திட்டத்தின் கீழ் நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள் மருத்துவ உதவி, சுகாதார விழிப்புணர்ச்சி, போக்குவரத்துக் கட்டுப்பாடு, சிறுகுடும்ப நன்மைகள், இரத்ததானம், சுற்றுப்புறச்சூழல் அபிவிருத்தித் திட்டங்கள் முதியோர் கல்வி போன்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ளூர் அரசு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் முன்னுரிமை அடிப்படையில் ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்களை தொண்டர்கள் நிறைவேற்றுகிறார்கள்.

மூன்றாம் பிரிவில் நாட்டு நலப்பணித் திட்டம் தனிப்பாடமாக அமைக்கப்பட்டுள்ளது. தனியாக மதிப்பெண்களும் வழங்கப்பட்டு வருகின்றன. சில பல்கலைக் கழகங்களில் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு கல்லூரி மாணவர்களுக்கு நாட்டு நலப்பணித் திட்டம் கட்டாயப் பாடத் திட்டமாக்கப்பட்டுள்ளது. மேலும், நாட்டிலேயே முதன் முறையாக நகர மக்களைக் கொண்டு அறக்கொடை ஒன்று நிறுவப்பட்டு, நாட்டு நலப்பணித் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வரும் கல்லூரிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் நாட்டு நலப்பணித் திட்டப் பணிகளில் சிறப்பாகச் செயல்படும் தொண்டர்கள், திட்ட அலுவலர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர்க்கு விருதுகள் வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியுள்ளது. 1988–89 முதல் 1990–91 முடிய இவ்விருதுகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டன.

நாட்டு நலப்பணித்திட்ட வெள்ளிவிழா ஆண்டினை (1969–1994) முன்னிட்டு, தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணித் திட்ட மையம் கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கருதியுள்ளது :

(அ) நாட்டு நலப்பணித் திட்டத்திற்காக 200 தொண்டர்களை 10 நாட்களுக்கு ஈடுபடுத்தி மாநில அளவிலான சிறப்பு முகாம்களை நடத்துதல்.

(ஆ) 5 பெரிய பல்கலைக் கழகங்களில் 3 நாட்கள் வீதம் ஆளுமை வளர்ச்சி, தலைமையேற்கும் பண்புக்கான பயிற்சி பற்றிய சிறப்புத் திட்டங்களை நடத்துதல்.

(இ) 5 நாட்களுக்கு மாநில அளவிலான பண்பாட்டு மாநாடுகளை நடத்துதல். மேற்கண்ட மாநாடு, மரக்கன்று நடுதல், தேசீய ஒருமைப்பாடு, இரத்ததான முகாம்கள், எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு, கல்வி விழிப்புணர்வு இயக்கம் போன்றவைகளை உள்ளடக்கியது. இவைகளை தமிழ்நாடு மாநில நாட்டுப்பணித்திட்ட மையம் 21.12.93–இல் ஆரம்பித்து வைத்துள்ளது.

**மொத்த நிதி ஒதுக்கீடு**

| வ. எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டமில்லாதது | திட்டம் | திட்டமில்லாதது | திட்டம் |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | 1991–92 | 74.00 | 105.00 | 219.00 | 199.00 |
| 2. | 1992–93 | 181.00 | 181.00 | 206.00 | 180.00 |
| 3. | 1993–94 | 276.00 | 125.00 | 297.72 | 191.63 |
| 4. | 1994–95 | 312.98 | 192.09 | – | – |

## II தேசிய மாணவர் படை

தேசிய மாணவர் படை இயக்கத் தலைமையிடம் சென்னையில் உள்ளது. இதன் கீழ் 5 தேசிய மாணவர் படைத் தொகுதித் தலைமையிடங்கள் உள்ளன. இவற்றில் சென்னை மாநகரில் இரண்டும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் உள்ளன. இம்மாநிலத்தில் 50 முதுநிலை/பெண்கள் மாணவர் படைப்பிரிவும், 671 இளநிலை மாணவர் படைப்பிரிவும் உள்ளன.

**எண்ணிக்கை**

தேசிய மாணவர் படையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை விவரம் வருமாறு :

| பிரிவு | அனுமதிக்கப்பட்ட அலுவலர்கள் | அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் |
|---|---|---|
| (அ) முதுநிலைப் பிரிவு (சிறுவர்) | 224 | 18300 |
| (ஆ) இளநிலைப் பிரிவு (சிறுவர்) | 656 | 61900 |
| (இ) பெண்கள் பிரிவு | | |
| முதுநிலைப் பிரிவு | 41 | 3300 |
| இளநிலைப் பிரிவு | 58 | 5300 |
| மொத்தம் | 979 | 88800 |

இம்மாநிலத்திலுள்ள தேசிய மாணவர் படைப்பிரிவு பல்வேறு வகையானது. அவ்விவரம் வருமாறு :

| | *முதுநிலைப் பிரிவு* |
|---|---|
| காலாட்படை | 20 பிரிவுகள் |
| தொழில்நுட்பப் படை | 13 பிரிவுகள் |
| கடற்படை | 5 பிரிவுகள் |
| விமானப்படை | 4 பிரிவுகள் |
| பெண்கள் படை | 5 பிரிவுகள் |
| மருத்துவப்படை | 3 பிரிவுகள் |

இம்மாநிலத்தில் பல்வேறு வகையான இளநிலை தேசிய மாணவர் படைப் பிரிவுகள் உள்ளன.

| | |
|---|---|
| இராணுவப் பிரிவு | 520 படைகள் |
| கடற்பிரிவு | 52 படைகள் |
| விமானப் பிரிவு | 47 படைகள் |
| பெண்கள் பிரிவு | 52 படைகள் |

(சைனிக் பள்ளியில் உள்ள தேசிய மாணவர் படைப் பிரிவைச் சேர்ந்த 11 படைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன).

மேலே குறிப்பிடப்பட்ட இளநிலை படைப் பிரிவுகள் அனைத்தும் நிருவாகம், பயிற்சி ஆகியவற்றுக்காக முதுநிலைப் படைப்பிரிவுகளின் கட்டுப்பாட்டில் உள்ளன.

## நிருவாகம்

தேசிய மாணவர் படையின் நிருவாகக் கட்டுப்பாட்டு அதிகாரம் மைய அரசிடமும் மாநில அரசிடமும் உள்ளது.

### பணியாளர்

சென்னையிலுள்ள தேசிய மாணவர் படை இயக்கக அலுவலகத்திலும், பல்வேறு மாவட்டங்களிலுள்ள தேசிய மாணவர் படைத் தலைமையிடங்களிலும் அவற்றின் கட்டுப்பாட்டிலுள்ள பிரிவுகளிலும், அரசு அனுமதி பெற்ற பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் மாநில அரசு பணியாளர்கள். இந்த இயக்ககத்தில் ஒரு 'ஏ' பிரிவு அலுவலரும் ஒரு 'பி' பிரிவு அலுவலரும் உள்ளனர். பிற அலுவலர்கள் பாதுகாப்புத்துறை/தேசிய மாணவர் படைப் பணியிலிருந்து பெறப்படுகின்றனர்.

## நிதி

தேசிய மாணவர் படைப் பிரிவிற்காகும் செலவை, மைய அரசும் மாநில அரசும் ஏற்கின்றன. பல்வேறுபட்ட முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதற்காகும் செலவை தொடக்கத்தில் மாநில அரசு ஏற்கிறது. பின்னர் இச்செலவில் 50 சதவீதத்தை மைய அரசு திருப்பித் தருகிறது.

தேசிய மாணவர் படையின் துணைத் தலைமை இயக்குநர் துறைத் தலைவராவார். மேலும் இவர் இந்த இயக்ககத்தின் வரவு–செலவுத் திட்டக் கட்டுப்பாட்டு அலுவலரும் ஆவார். இவருக்கு மாநில அரசு நிதி அதிகாரங்களை வழங்கியுள்ளது.

## பணிகள்

தேசிய மாணவர் படையில் பின்வரும் நோக்கங்களை ஈடேற்றும் பொருட்டு, கல்வி நிலையங்களிலிருந்து (பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்) வருகின்ற தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சியளிக்கப்படுகிறது.

(அ) நற்பண்பு, நட்புடைமைப் பண்பு, ஒழுக்கம், தலைமையேற்று நடத்தும் ஆற்றல், தீரச்செயல், விளையாட்டு ஆகியவற்றில் உற்சாகம், மதச்சார்பற்ற பார்வை, சாதனை புரியும் ஆர்வம், போட்டி, நேர்மைப் பண்பு மற்றும் தன்னலமற்ற சேவை ஆகியவைகளை இளைஞர்களுக்குள் உண்டாக்கி உபயோகமுள்ள குடிமகனாக்குதல்.

(ஆ) நாட்டின் எல்லாத் துறையிலும் (பாதுகாப்புத் துறை உள்பட) தலைமையேற்று பணியாற்றும் வகையில் இளைஞர்களுக்கு ஒரு கட்டுப்பாடான பயிற்சி அளித்து அப்படிப்பட்ட இளைஞர்கள் நாட்டிற்கு கிடைக்க வகை செய்தல்.

இவை தவிர, மாணவர்களுக்கு விமானப் பயிற்சி, கப்பல் பயிற்சி, கிளைடர் பயிற்சி, படகுப்பயிற்சி, முத்துக்குளிக்கும் பயிற்சி, படகுப் போட்டிப்பயிற்சி, பலகையில் மிதக்கும் பயிற்சி, தொங்கும் கிளைடர்பயிற்சி, சைக்கிள் பயணம் ஆகியவை நடத்தப்படுகின்றன. (இந்த முகாம்களில், இம்மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களும் பங்கேற்கின்றனர்) தேசிய மாணவர்படை இயக்ககங்கள் கீழ்க்கண்ட முகாம்களை நடத்துகின்றன.

(அ) தலைமைப் பொறுப்பேற்பதற்கான அடிப்படைப் பண்புகளை வளர்க்கும் முகாம்கள்

(ஆ) தலைமைப் பொறுப்பேற்பதற்கான உயர்தரப் பண்புகளை வளர்க்கும் முகாம்கள்

(இ) இந்திய விமானப்படை முகாம்

(ஈ) இந்திய கடற்படை முகாம்

(உ) கடற்படைப் பிரிவிற்குத் தலைமைப் பொறுப்பேற்பதற்கான உயர்தரப் பண்புகளை வளர்க்கும் முகாம்கள்

(ஊ) தேசிய ஒருமைப்பாட்டு முகாம்கள்

(எ) மலையேற்றப் பயிற்சி முகாம்கள்

இந்த இயக்கங்களுக்கிடையே பல்வேறுபட்ட போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு, ஆண்டுதோறும் டெல்லியில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பில் பாராட்டுக் 'கொடி' வழங்கப்படுகிறது. 1994 ஜனவரியில் புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பிலும், பிரதம மந்திரி அணிவகுப்பிலும் கலந்துக்கொள்ளும் பொருட்டு, தமிழ்நாட்டிலுள்ள முதுநிலை/இளநிலை/பெண்கள் படைப்பிரிவுகளிலிருந்து மொத்தம் 106 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களுக்கு வான்குடை மிதவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும், கனடா, இங்கிலாந்து, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறும் இளைஞர் கருத்துப் பரிமாற்ற வகுப்புகளில் கலந்து கொள்வதற்காக அவர்கள் அனுப்பட்டுள்ளனர். இளைஞர் கலாச்சார பரிவர்த்தனை திட்டத்தின் கீழ் இந்திய மற்றும் கனடா நாட்டைச் சேர்ந்த தேசிய மாணவர் படை மாணவ/மாணவியர்கள் 21 பேர் 1993 செப்டம்பர் முதல் டிசம்பர் வரை திருச்சி மாவட்டத்தில் தங்கியிருந்தனர்.

பாதுகாப்பு பணியில் அமர்த்தப்படுவதற்கான நுழைவுத் தேர்வு எழுதும் தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு தீவிரப் பயிற்சி அளிப்பதற்காகப் பாதுகாப்புப் பணி புதுமுகப் பயிற்சிப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றது.

மேற்கண்ட நோக்கங்களுக்கென 1994–95 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 7,26,31,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 11

# அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்

நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியலின் முக்கியத்துவத்தை உணர்ந்து அண்மைக் காலமாக பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பான பல உயர் மட்ட மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் அரசின் அறிவியல் கொள்கையை உருவாக்கவும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியலை பரப்பவும் அவற்றின் மூலம் இளைஞரிடையே அறிவியல் உணர்வை வளர்ப்பதற்கென தனி நிறுவனங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. இப்படி அமைக்கப்பட்ட ஆய்வு நிறுவனங்களை ஒருங்கிணைக்கவும் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொடர்புடைய செயல்திட்டங்கள் பற்றி மைய அரசுடன் தொடர்பு கொள்ளவும் உதவும் வகையில் தலைமைச் செயலக கல்வித்துறையில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலின் தனிப்பகுதி ஒன்று உருவாக்கப்பட்டு இயங்கிவருகிறது. இம்முக்கியத்துவத்தை உணர்ந்து செயலகத் துறையின் பெயர் 'கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை' என மாற்றப்பட்டுள்ளது. இத்துணைத் துறையின் கவனத்தின் கீழ், அடியிற் கண்ட நிறுவனங்களும், திட்டங்களும் வருகின்றன :

1. தமிழ்நாடு மாநில அறிவியல்—தொழில் நுட்பவியல் மன்றம்
2. தமிழ்நாடு அறிவியல்—தொழில்நுட்ப மையங்கள்
3. அண்ணா பல்கலைக் கழக உயர்மட்ட மையங்களுடன் அறிவியல் தொழில்நுட்பப் பிணைப்பு
4. தொலை உணர்வு மையம், அண்ணா பல்கலைக்கழகம்
5. அறிவியல் மற்றும் தொழில் முனைவோர்கள் மேம்பாட்டுத் திட்டம்
6. தென் சென்னையில் ஓர் அறிவியல் நகரம்

## தமிழ்நாடு மாநில அறிவியல்–தொழில் நுட்பவியல் மன்றம்

1. தமிழ்நாடு அரசு, இத்தமிழ்நாடு மாநில அறிவியல்–தொழில் நுட்பவியல் மன்றத்தை 1984 இல் அமைத்துள்ளது. தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன் விவசாயம், சுகாதாரம், கல்வி, சக்தி, மனித குடியேற்றம் போன்ற துறைகளில் அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பினை இம்மன்றம் ஏற்றுள்ளது. இந்த மன்றம் மைய, மாநில அரசுகளின் இணைப்புப் பாலமாக திகழ்கிறது. மற்றும் மாநில அரசின் ஆண்டு மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களில் வளர்ச்சித் துறைகளில் அறிவியல் தொழில்நுட்ப பகுதிகளை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் வழங்கவும் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மன்றத்தின் தலைவர் ஆவார். முதலமைச்சர் அவர்கள், தனக்குப் பதிலாக மாண்புமிகு கல்வி அமைச்சர் க. பொன்னுசாமி அவர்களை இம்மன்றத்தின் தலைவராக நியமித்துள்ளார்கள்; குறிப்பிடத்தக்க கல்வியாளரும் புகழ்பெற்ற பொருளாதார மேதையுமான டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா அவர்கள் துணைத் தலைவர் மற்றும் செயற்குழு தலைவராகவும் பொறுப்பேற்று மன்றத்தை நடத்தி வருகின்றனர்.

2. தமிழக அரசு 1984–94 ஆண்டுகளில் ரூ. 179.10 இலட்சங்கள் கீழ்வரும் அறிவியல் மேம்பாட்டு திட்டங்களுக்கான மானியமாக வழங்கியுள்ளது :

(அ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் குறித்த திட்டங்கள்

(ஆ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் செய்தி அமைப்பு முறை

(இ) அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலை பிரபலப்படுத்துதல்

(ஈ) தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்கள்

(உ) இளம் விஞ்ஞானிகளுக்கு பயண மானியம் மூலம் ஊக்கத்தொகை உதவி மற்றும் ஆய்வுப் பயிற்சி

(ஊ) கருத்தரங்குகளும், ஆய்வுக்கூட அரங்குகளும்

(எ) குழு விவாதங்கள்

(ஏ) ஆராய்ச்சியாளர்–தொழில் நிறுவனம் – கருத்து ஒப்புரவு

(ஐ) குழந்தைகளிடையே அறிவியல்–தொழில் நுட்பவியல் திறன் கூட்டும் திட்டங்களுக்கு உதவி

(ஒ) அறிவியல் தொழில்நுட்ப நூல்களுக்கும், அறிவியல் தமிழ் ஏடுகளுக்கும் நிதி உதவி

3. 1994–95 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் இம்மன்றப் பணிகளுக்காக ரூ. 39.55 இலட்சங்கள் செலவு செய்வதற்கு வகை செய்கிறது.

4. இதுவரை 24 அறிவியல்–தொழில் நுட்பவியல் திட்டங்களை இம்மன்றம் நிறைவேற்றியுள்ளது. மேலும், பல்வேறு ஆய்வுத் துறைகளில் 37 திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டங்கள், விவசாயம்–மீன்வளம், நீர்நிலைகள், சுகாதாரம் சுற்றுப்புற மாசு கட்டுப்பாடு ஆகிய துறைகளுடன் சம்பந்தப்பட்டவை. நுட்ப ஆய்வுகளில் கண்ட தெரிவுகள், சிபாரிசுகள் ஆகியவற்றின் தொடர்பான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. அறிவியல்–தொழில்நுட்பவியல் பிரபலப்படுத்துதல் திட்டத்தின் கீழ் இம்மன்றம் குழந்தைகளிடையேயும் எளிய மக்கள் மத்தியிலும் அறிவியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக அறிவியல்–தொழில் நுட்பவியல் சம்பந்தப்பட்ட பொருட்காட்சிகள், ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளித்தல் போன்ற செயல் திட்டங்களை நிறைவேற்றிவருகிறது. இச்செயல் திட்டங்கள் மக்கள் மத்தியில் குறிப்பாக கிராமப்புற மக்களிடையே அறிவியல் கண்ணோட்டத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவை. மேலும், இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்குவிப்பு என்ற திட்டத்தின் கீழ் கருத்தரங்குகளில் பங்குகொண்டு தங்கள் அறிவியல் கண்டுபிடிப்புகளை அங்கே அரங்கேற்றம் செய்ய உதவியாக பயணச் செலவில் பாதி வழங்கியும், நிறுவனங்கள் தாங்களே கருத்தரங்குகள் நடத்தவும் அறிவியல் தொழில்நுட்ப பயன்களை மேற்கொள்ளவும் இம்மன்றம் ஆவன செய்கின்றது. இம்மன்றத்தின் ஆதரவில் இயங்கும் 'தொழில்நுட்ப தகவல் மையம்'களநிலை நிர்வாகிகள், ஆராய்ச்சி நிலையங்கள், நிதி நிறுவனங்கள் ஆகியோரிடம் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்தி ஆராய்ச்சியின் விளைவுகளை களத்தில் பயன்படுத்த உதவுகிறது. வளர்ச்சித்துறைகள் சார்பான முக்கியத் தலைப்புகள் பற்றி தொழில் நுட்பங்களைக் கண்டுபிடிப்போருக்கும் அதை உபயோகிப்போருக்கும் இடையே கலந்தாலோசனை நடைபெற குழு விவாதங்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

5. வளர்ச்சித் துறைகளில் அறிவியல் தொழில் நுட்பவியலின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டும் நோக்கோடு, 1994–95 ஆம் ஆண்டில் இம்மன்றம் மேற்கண்ட செயல் திட்டங்களைத் தொடர உள்ளது. வளர்ச்சித் துறைகளில் சில குறிப்பிட்ட இடங்களுக்குத் தேவையான அறிவியல் தொழில் நுட்பங்கள் பற்றி தமிழ்நாட்டில் கருத்தரங்குகள் நடத்தப்பட உள்ளன. கொள்கை முடிவுகள் எடுக்கும் அரசுக்குத் தேவையான, அறிவியல் தொழில் நுட்பவியல் அடிப்படையுடன் தொடர்புடைய நுண்ணாற்றல், முக்கிய அமைப்புகள், செய் நேர்த்தி ஆகியவை பற்றிய தகவல் முறைகளும் உருவாக்கப்பட உள்ளன. தமிழ்நாட்டில் சமூக, பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையில், வளர்ச்சித் துறைகளில் காணப்படும் உடனடி பிரச்சனைகள் எவை என்று கண்டு, அவைகளுக்கு முன்னுரிமம் வழங்கப்பட உள்ளன. பயனுடைய சுயவேலைக்கு வாய்ப்பு அளிக்கும் தொழில் முனைவோர்கள் மேம்பாட்டு செயல்திட்டங்கள் உருவாக்கப்பட உள்ளன.

சமுதாயத்தில் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நன்மை பயக்கும் முகத்தான் சத்தில்லா உணவின் கெடுதல் பற்றியும், சுகாதார முறைகள் பற்றியும் பயிற்சிமுறை செயல்திட்டங்கள் உருவாக்கப்பட உள்ளன. இம்மன்றத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்ட கையிலெடுத்துச் செல்லும் குறைந்த விலை வேதியியல் கருவியுறையின் துணைக்கொண்டு பள்ளியில் செய்ய வேண்டிய அனைத்துப் பரிசோதனைகளையும் வகுப்பிலேயே செய்து காட்டலாம். இதை தொழில் முனைவோர்கள் மூலம் மக்களிடையே பிரபலப்படுத்த இம்மன்றம் முனைகிறது.

6. 1994–95 ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள் : மேற்காணும் திட்டங்களைத் தொடர்வதுடன் இம்மன்றம் திறன் மிக்க மாணவர்களை ஊக்குவிப்பதற்காக "மாணவர் ஆய்வுத் திட்டம்" ஒன்றை புதிதாக உருவாக்கிவருகிற 1994–95 ஆம் ஆண்டில் ரூ. 1.25 லட்சம் செலவில் செயல்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் கீழ் பி.ஈ./பி.ஈ.(வேளாண்)/ எம்.எஸ்சி.(வேளாண்)/எம்.வி.எஸ்சி./எம்.எப்.எஸ்சி./எம்.பி.பி.எஸ்./எம் எஸ் போன்ற பட்டப் படிப்புகளில் இறுதி ஆண்டு மாணவர்கள் தயாரித்த சமுதாயத்துக்குப் பயன்படும் திட்டங்கள் என்று தெரிந்தெடுக்கப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ.5,000 வரை மானியம் வழங்கப்படவிருக்கிறது. மேலும் தகுதியுள்ள விஞ்ஞானிகளை ஊக்குவிக்க ரூ. 1.30 இலட்சம் செலவில் ஒரு புதிய திட்டம் வரும் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மருத்துவம், பொறியியல், விவசாயம். மீன்வளம் போன்ற துறைகளில் புதிய கண்டுபிடிப்புகள், புதிய மாடல்கள் முறைகள் போன்றவற்றால்

விஞ்ஞான அறிவுக்கு சிறப்பு ஆக்கம் தேடிய விஞ்ஞானிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000 கொண்ட பொற்கிழி கொடுக்கப்பட உள்ளது. வரும் ஆண்டில் (1994–95) 10 விஞ்ஞானிகள் தெரிந்தெடுக்கப்பட்டு பரிசு வழங்கப்படவுள்ளனர். இவற்றுடன் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையில் ரூ. 7.50 இலட்சம் செலவில் புதிய ஆய்வுத் திட்டங்கள் உருவாக்கப்பட உள்ளன.

## அண்ணா பல்கலைக் கழக உயர்மட்ட மையங்களுடன் அறிவியல் தொழில் நுட்பப் பிணைப்பு

அறிவியல் தொழில் நுட்பவியல் துறையின் சில குறிப்பிட்ட பகுதிகளில் ஆய்வு மற்றும் மேம்பாடு இவற்றை வளர்க்கும் நோக்கோடு தமிழக அரசு அண்ணா பல்கலைக்கழகத்தில் மேல் வளர்மையங்கள் சிலவற்றை அமைத்து அவை, ஆய்வு மற்றும் பயிற்சிப் பணிகளில் ஈடுபடும்முகத்தான் அண்ணா பல்கலைக் கழகத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன. அம்மையங்கள் முறையே :

(அ) புதிய மற்றும் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் மையம்

(ஆ) படிக வளர்ச்சி மையம் – அழகப்பா தொழில் நுட்பக் கல்லூரி வளாகம்

(இ) உயிர்சார் நுட்பவியல் மையம்

(ஈ) ஒருங்கிணைந்த பெருங்கடல் மேலாண்மை மையம், பொறியியல் கல்லூரி வளாகம்

## தொலை உணர்வு மையம்

தொலை உணர்வு மையம் 1982 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டது. இம்மையம் அமைக்க ஆன செலவு ரூ. 7.50 கோடியாகும். இச்செலவில் தமிழக அரசின் பங்கு ரூ. 2.73 கோடியாகும். மீதமுள்ள தொகையை ஜெர்மன் நாட்டு அரசும் இந்திய அரசும் பகிர்ந்து கொண்டன. இம்மையத்தை இந்திய அரசு ஒரு தேசிய தொலை உணர்வு கிளை மையமாக அங்கீகரித்துள்ளது. இம்மையம் ஏப்ரல் 87 லிருந்து அண்ணா பல்கலைக் கழகத்தின் நிரந்தர மையமாக்கப்பட்டுள்ளது.

அரசுத் துறைகளின் தேவைக்கான தொலை உணர்வு திட்டங்களை மேற்கொள்வதும், இத்துறைக்கான பயிற்சி கொடுப்பதும், புள்ளி விவரங்கள் சேகரிப்பதும், கல்வித் துறைக்கான உதவிகள் செய்வதும் இம்மையத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

1993–94 இல் கீழ்க்காணும் திட்டங்களையும் சேர்த்து 9 திட்டங்களை எடுத்து முடித்துள்ளது :

(அ) மதுரை உசிலம்பட்டி பிளாக்கில் இயற்கை வளத்தை மேலாண்மை செய்வது பற்றியும், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாடு பற்றியும் விரிவான விளக்கங்கள் சேகரிப்பது;

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள பிளாக்குகளில் பழத்தோட்டங்கள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய உதவும்படியான தரைப்படங்கள் தயாரித்தல்;

மேலும் பல நிலைகளில் உள்ள 15 திட்டங்கள் இப்போதைக்கு செயல்பட்டு வருகின்றன.

காமன் வெல்த் கவுன்சில், COSTED நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொண்ட 3 வார உலகளாவிய பயிற்சி திட்டத்துடன் சேர்த்து மூன்று பயிற்சி முகாம்களை இம்மையம் நடத்தியுள்ளது.

இம்மையம் வருகின்ற 1994–95 ஆம் ஆண்டில் பல திட்டங்களை செயல்படுத்த உள்ளது. அவற்றில் கீழ் வரும் இரு முக்கிய திட்டங்களும் அடங்கும்.

1. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் குந்தா அணைத்திட்டத்தின் கீழ் வரும் சுமார் 700 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள பகுதிகளுக்கான வான வெளியினின்று எடுக்கப்பட்ட விரிவான தரைப்படங்கள் தயாரித்தல்.

2. கோவை மாவட்டத்தில் அமைந்த மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் ஏற்புடை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஒருங்கிணைந்த ஆய்வு நடத்தல்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முனைவோர்கள் மேம்பாட்டுத் திட்டம்

இந்திய அரசின் முழு உதவியுடன் தொழில் முனைவோர்களின் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக நான்கு பெரும் திட்டங்கள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவை முறையே :

(அ) தொழில் வாய்ப்பு பற்றிய தகவல் குறிப்பு ஒன்று தயாரித்தல்

(ஆ) தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகள் உருவாக்கல் திட்டம்

(இ) தொழில் முனைப்பு எண்ணத்தை ஊக்குவிக்கும் பயிற்சி முகாம்கள்

(ஈ) அறிவியல் தொழில்நுட்ப முனைவோர் பூங்கா உருவாக்கம்

மேற்காண் திட்டங்களின் விளக்கம் பின்வருமாறு:

**(அ) தருமபுரி மற்றும் பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டங்களுக்கான 'தொழில் வள வாய்ப்பு விவர நூல்':**

இந்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பவியல் துறையைச் சேர்ந்த தேசீய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர் மேம்பாட்டு வாரியத்தோடு (NSTEDB) இணைந்து, தருமபுரி மாவட்டத்திற்கென 'தொழில் வள வாய்ப்பு விவர நூல்' ஒன்று தயாரிக்கும் திட்டத்திற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தருமபுரி மாவட்டம் வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தின் முழு செயலாட்சி முகமையாகும். இத்திட்டம் அனைத்து நிலை அறிவியல் தொழில் நுட்பவியல் பணியாளர்களுக்கும் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதில் அதிக கவனம் செலுத்துகிறது.

இத்துறையில் பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டத்திற்கு மேற்காண் மைய நிறுவனத்துடன் இணைந்து உதவி செய்வது காரைக்குடியில் அமைந்துள்ள மைய மின் அணு ரசாயன ஆய்வு நிறுவனமாகும்.

**(ஆ) தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள்**

மைய அரசின் அறிவியல் தொழில் நுட்பவியல் துறையைச் சார்ந்த வேதிய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர் மேம்பாட்டு வாரியத்தோடு இணைந்து கீழ்க்காணும் நிறுவனங்கள் மூலம் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன :

1. தமிழ்நாட்டிலுள்ள தொழில் நுட்பவியல் அறிவுரை கூறும் நிறுவனங்கள்
2. தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில் நுட்பவியல் மன்றம்
3. அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர் பூங்கா, திருச்சி
4. திருச்சி வைரம் பட்டை தீட்டும் பூங்கா
5. பி.எஸ்.ஜி. தொழில் நுட்பவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

மேற்கண்ட நிறுவனங்கள் 1994–95 ஆம் ஆண்டில், அறிவியல் தொழில் நுட்பவியல் மூலம் பெரிய அளவில் வேலைவாய்ப்பு உருவாக்கல் திட் டத்தின் கீழ் சுமார் 2000 புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க உள்ளன.

**(இ) தொழில் முனைப்பு எண்ணத்தை ஊக்குவிக்கும் பயிற்சி முகாம்கள்**

பல்தொழில் பயிலகங்களிலும் (POLYTECHNICS) பொறியியல் கல்லூரிகளிலும், இளைஞர்களை புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடச் செய்யுமாறு, தொழில் முனைப்பை ஊக்குவிக்கும் முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்த முகாம்கள் இளைஞர்களுக்கு ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைபற்றியும் நிதி ஆதாரங்கள் பற்றியும் தெளிவு பெற உதவுகின்றன.

**(ஈ) அறிவியல் தொழில் நுட்ப முனைவோர் பூங்கா**

திருச்சியில் உள்ள வட்டார பொறியியல் கல்லூரியில், இந்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பவியல் துறையைச் சேர்ந்த தேசீய அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர் மேம்பாட்டு வாரியத்துடன் இணைந்து செயல்பட்டு தமிழக அரசு, அறிவியல் தொழில் நுட்பவியல் தொழில் முனைவோர் பூங்கா ஒன்றை நிறுவியுள்ளது. இப்பூங்கா, பொறியியல் பட்டதாரிகளுக்கு தொழிற் கூறைகள், மின்சக்தி, நீர்போன்ற வசதிகளையும் அக்கல்லூரிகளில் கிடைக்கும் ஆய்வு வசதிகளையும் கிடைக்குமாறு செய்து அவர்களுடைய புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆக்கம் தேடுகின்றது.

மேற்காண் திட்டங்களனைத்தும் 1993–94 இல் ரூ. 36.11 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகின்றன. புதிய ஆண்டான 1994–95 இல் இந்திய அரசு மேலும் கணிசமான தொகையை இத்திட்டங்களுக்கு அளித்து உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தென் சென்னையில் ஓர் அறிவியல் நகரம்**

தமிழ்நாடு அரசு தென் சென்னையில் அறிவியல் நகரம் ஒன்றை நிறுவ முடிவு செய்துள்ளது. இதன் முக்கிய நோக்கங்கள் இரண்டாகும். அடிப்படையில் மக்கள் மத்தியில் அறிவியல் கண்ணோட்டத்தை ஏற்படுத்துதல் முதலாவதாகும். அடுத்ததாக, முதிர்ந்த நிலையில் அறிவியல் சமூகத்தின் ஆய்வுத் திறனை மேம்படுத்த ஊக்கமளித்தல் இரண்டாவதாகும். அறிவியல் ஆய்வு மேம்பாடு தொடர்புடைய நிறுவனங்கள் பல தென் சென்னைப் பகுதியில் செறிந்திருப்பது,

இம்முயற்சிக்கு உறுதுணையாய் அமைந்துள்ளது. இம்முயற்சி தமிழக அரசின் அறிவியல் தொழில் நுட்பவியல் பரப்பு கொள்கையின் மற்றுமொரு முயற்சியாகும். இதற்காக தமிழக அரசு 1994–95 இல் ஒரு கோடி ரூபாய் செலவிட திட்டமிட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு**

| வ. எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது | திட்டம் | திட்டத்தில் சேராதது | திட்டம் |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1 | 1991–92 | | 34.05 | | 30.00 |
| 2. | 1992–93 | | 37.50 | | 37.50 |
| 3. | 1993–94 | | 38.25 | | 38.25 |
| 4. | 1994–95 | – | 38.55 | – | – |

**தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையங்கள்**

மாண்புமிகு, கல்வி அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, அறிவியல் மையம் மற்றும் கோளரங்கம் உள்ளிட்ட மேற்கண்ட மையத்தை சென்னை கோட்டூர்புரத்தில் தமிழக அரசு, 1983 ஆம் ஆண்டு நிறுவியது. நகரங்களிலும், கிராமங்களிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கருத்துக்களைப் பரப்புவதே இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் ரூ. 401.25 இலட்சங்கள் செலவில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் திரு சி. கே. பிர்லா அவர்கள் அளித்த நன்கொடைத் தொகையான ரூ. 200 இலட்சத்தில் கோளரங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. கோளரங்கம் 11–5–88 முதலும், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையம் 17–9–90 முதலும் பொதுமக்களின் பார்வைக்கெனத் திறக்கப்பட்டு, செயல்படத் தொடங்கின. இதுவரை 17,72,194 பேர் வருகை தந்துள்ளனர்.

**கோளரங்கச் செயல்பாடுகள்**

இதுவரை ஒன்பது கோளரங்க நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு விண் அரங்கத்தில் திரையிடப்பட்டுள்ளன. இரவில் விண்வெளிக் காட்சிகள், கிரகணங்கள் மற்றும் புதன் கோள் சூரியன் முன்பாதை– நகர்வு மற்றைய கோளரங்கச் செயல்பாடுகளை பொதுமக்களும், மாணவர்களும், தொலைநோக்கி கருவி மற்றும் தக்க சாதனங்களைக் கொண்டு கவனிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவை தவிர சிறிய கோளரங்க உதவியுடன் பள்ளிகளில் கோளரங்க நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் செயல்பாடுகள்

அறிவியற் கொள்கைகளின் அடிப்படையில், போக்குவரத்து, மின்னணுவியல் மற்றும் தொடர்பு இயல், அறிவியல் போன்றவற்றை விளக்கிடும் வகையில் சிறுவர் காட்சிக்கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் உயிர் அறிவியல், இயக்கத்திறன் ஆற்றல், பொருள் அறிவியல் மற்றும் உடன் உறவாடும் மூன்று காட்சிக் கூடங்களும் திறக்கப்பட உள்ளன. இந்திய எண்ணெய்க் கழகத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் போக்குவரத்துப் பூங்கா முடிவடையும் தறுவாயில் உள்ளது. அறிவியல் பூங்காவில் உள்ள காட்சிப் பொருட்களை மேலும் அதிகப்படுத்த 1993–94 ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

### விரிவாக்கச் செயல்பாடுகள்

இம்மையத்தின் விரிவாக்கப் பணிகளின் தொடர்பாக பேருரை நிகழ்த்தல், கருத்தரங்கங்கள், தற்காலிக பொருட்காட்சி அமைத்தல், வினாடி வினா நிகழ்ச்சிகள் போன்ற பணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டுவருகின்றன. காட்சிப் பொருட்கள் உள்ளடங்கிய ஒரு நடமாடும் காட்சிக்கூட ஊர்தி, மாவட்டத்திலுள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் சென்று மாணவர்கள் பயனடையுமாறு செயல்பட்டு வருகிறது.

### மேம்பாட்டு செயல்பாடுகள்

அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களை அதிக அளவில் பரப்பும் வகையில் திருச்சி, மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் மண்டல அறிவியல் மையங்களைத் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தேவையான நிலத்தை கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மொத்த நிதி ஒதுக்கீடு

| வ. எண் | ஆண்டு | வரவு செலவு மதிப்பீடு | | திருத்திய மதிப்பீடு | |
|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதது | திட்டம் | திட்டத்தில் சேராதது | திட்டம் |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | 1991–92 | | 17.50 | | 32.00 |
| 2. | 1992–93 | | 34.50 | | 34.50 |
| 3. | 1993–94 | | 44.60 | | 44.60 |
| 4. | 1994–95 | | 33.60 | | – |

பேராசிரியர் க. பொன்னுசாமி

*கல்வி அமைச்சர்*

## புள்ளி விவரம்

1. பள்ளிக் கல்வி புள்ளி விவரம் :

I. பள்ளி வயது சிறார், சேர்க்கையும் சதவீதமும்
II. பள்ளிகளின் எண்ணிக்கை
III. ஆசிரியர்களின் எண்ணிக்கை
IV. ஆசிரியர் – மாணவர் விகிதாச்சாரம்
V. பள்ளிகளின் எண்ணிக்கை (நிர்வாக வாரியாக) சேர்க்கையும் – ஆசிரியர்களும் 1993–94
VI. ஆசிரியர்கள் எண்ணிக்கை – நிர்வாக வாரியாக 1993–94
VII. பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வகுப்பு வாரியாக 1993–94
VIII. மாணவர் சேர்க்கை நிலவர அட்டவணை 1993–94
IX. தொழிற்கல்வி பாடங்கள் 1993–94
X. தமிழ்நாட்டில் பள்ளியை விட்டு விலகுவோர் பற்றிய தகவல் (சதவீதத்தில்)
XI. தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிகள் வளர்ச்சி மேலாண்மை வாரியாக (1979–80 முதல் 1993–94 முடிய)
XII. தமிழ்நாட்டில் உயர்நிலைப் பள்ளிகள் வளர்ச்சி மேலாண்மை வாரியாக (1979–80 முதல் 1993–94 முடிய)
XIII. உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை மேலாண்மை வாரியாக (1979–80 முதல் 1993–94 முடிய)
XIV. மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை மேலாண்மை வாரியாக (1978–79 முதல் 1993–94 முடிய)
XV. உயர்நிலை மற்றும் மேல்நிலை வகுப்பு தேர்வு முடிவுகள் 1992–93
XVI. பெண்களின் கல்வி நிலை – புள்ளிவிவரம்
XVII. தமிழ்நாட்டில் மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம்

2. உயர்கல்வி புள்ளி விவரம்

I. கல்லூரிகளின் புள்ளி விவரங்கள்

II. கல்லூரிகளில் ஆசிரியர்கள்/ஆசிரியர்கள் அல்லாதோர் எண்ணிக்கை

III. கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை

IV. மாநிலத்தில் உள்ள கல்லூரிகளின் எண்ணிக்கை

V. பொறியியற் கல்லூரிகள்

VI. தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள்

# புள்ளி விவரங்கள்

## 1. பள்ளிக் கல்வி 1993–94

I பள்ளி வயது சிறார்களின் சேர்க்கை மற்றும் சதவீதம்

| வயது தொகுதி | | | மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்) | மாணவர் சேர்க்கை (இலட்சத்தில்) | மாணவர் சேர்க்கை (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|
| 6–11 | மாணவர்கள் | .. | 40.46 | 43.06 | 106.44 |
| | மாணவிகள் | .. | 39.32 | 37.15 | 94.49 |
| | மொத்தம் | .. | 79.78 | 80.21 | 100.55 |
| 11–14 | மாணவர்கள் | .. | 18.64 | 19.86 | 106.55 |
| | மாணவிகள் | .. | 18.11 | 15.49 | 85.51 |
| | மொத்தம் | .. | 36.75 | 35.35 | 96.18 |
| 14–16 | மாணவர்கள் | .. | 10.30 | 7.86 | 76.27 |
| | மாணவிகள் | .. | 10.07 | 5.27 | 52.33 |
| | மொத்தம் | .. | 20.37 | 13.13 | 64.44 |
| 16–18 | மாணவர்கள் | .. | 9.72 | 3.33 | 34.21 |
| | மாணவிகள் | .. | 9.50 | 2.37 | 24.97 |
| | மொத்தம் | .. | 19.22 | 5.70 | 29.64 |
| | பெருமொத்தம் | .. | 156.12 | 134.39 | 86.08 |

## II பள்ளிகளின் எண்ணிக்கை

| பள்ளிகளின் வகை | 1990–91 | 1991–92 | 1992–93 | 1993–94 |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் .. | 29,979 | 30,004 | 30,098 | 30,329 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 5,624 | 5,581 | 5,608 | 5,593 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 3,136 | 3,163 | 3,203 | 3,270 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 2,008 | 2,084 | 2,165 | 2,221 |
| மொத்தம் .. | 40,747 | 40,832 | 41,074 | 41,413 |

## III ஆசிரியர்களின் எண்ணிக்கை

| | 1990–91 | 1991–92 | 1992–93 | 1993–94 |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் .. | 1,19,927 | 1,20,721 | 1,21,212 | 1,16,396 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 65,555 | 65,667 | 65,895 | 62,192 |
| உயர் நிலைப் பள்ளிகள் .. | 42,565 | 42,683 | 42,654 | 42,329 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 72,816 | 73,872 | 74,443 | 74,496 |
| மொத்தம் .. | 3,00,863 | 3,02,943 | 3,04,204 | 2,95,413 |

## IV ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம்

| பள்ளிகளின் வகைகள் | 1990–91 | 1991–92 | 1992–93 | 1993–94 |
|---|---|---|---|---|
| (பள்ளிகள் இனம் வாரியாக சிறப்பு ஆசிரியர் உள்ளிட்ட) | | | | |
| தொடக்கப் பள்ளிகள் .. | 46 | 47 | 47 | 49 |
| நடுநிலைப் பள்ளிகள் .. | 46 | 47 | 47 | 51 |
| உயர்நிலைப் பள்ளிகள் .. | 37 | 39 | 41 | 43 |
| மேல்நிலைப் பள்ளிகள் .. | 33 | 34 | 35 | 37 |

## V பள்ளிகளின் எண்ணிக்கை (நிர்வாக வாரியாக)

மாணவர்கள் சேர்க்கையும் ஆசிரியர்களும் 1993–94

| பள்ளிகளின் வகைகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்) | ஆசிரியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **1. தொடக்கப் பள்ளிகள்** | | | |
| அரசுப் பள்ளிகள் .. | 1,481 | | |
| நகராட்சி, மாநகராட்சி .. | 1,134 | | |
| ஊராட்சி ஒன்றியம் .. | 22,598 | | |
| தனியார் .. | 5,116 | | |
| மொத்தம் .. | 30,329 | 57.20 | 1,16,396 |

| | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்) | ஆசிரியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **2. நடுநிலைப் பள்ளிகள்** | | | |
| அரசுப் பள்ளிகள் .. | 219 | | |
| நகராட்சிப் பள்ளிகள் .. | 417 | | |
| ஊராட்சி ஒன்றியம் .. | 3,053 | | |
| தனியார் .. | 1,904 | | |
| மொத்தம் .. | 5,593 | 31.74 | 62,192 |
| மொத்த ஆரம்ப நடுநிலைப் பள்ளிகள் .. | 35,922 | 88.93 | 1,78,588 |
| **3. உயர்நிலைப் பள்ளிகள் – மாநிலப் பள்ளிகள்** | | | |
| அரசு .. | 1,889 | | |
| நகராட்சி – மாநகராட்சி .. | 83 | | |
| தனியார் .. | 440 | | |
| மொத்தம் .. | 2,412 | 14.98 | 35,004 |
| ஆங்கிலோ – இந்தியன் .. | 13 | 0.13 | |
| மெட்ரி குலேசன் .. | 759 | 2.58 | |
| நடுவண் அரசு பள்ளிகள் .. | 86 | 0.46 | |
| மொத்த உயர் நிலைப் பள்ளிகள் .. | 3,270 | 18.15 | 42,329 |

| பள்ளிகளின் வகைகள் | | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 4. மேல்நிலைப் பள்ளிகள் – மாநிலப் பள்ளிகள் | | | | |
| அரசு | .. | 891 | | |
| நகராட்சி – மாநகராட்சி | .. | 68 | | |
| தனியார் | .. | 772 | | |
| மொத்தம் | .. | 1,731 | 23.58 | |
| ஆங்கிலோ–இந்தியன் | .. | 28 | 0.44 | |
| மெட்ரிக்குலேசன் | .. | 373 | 2.31 | |
| நடுவண் அரசு பள்ளிகள் | | 89 | 0.97 | |
| மொத்த மேல்நிலைப் பள்ளிகள் | .. | 2,221 | 27.30 | 74,496 |
| மொத்த உயர்/மேல் நிலைப் பள்ளிகள் | .. | 5,491 | 45.45 | 1,16,825 |
| பெருமொத்தம் உயர்,மேல் நிலைப் பள்ளிகள் | .. | 41,413 | 134.38 | 2,95,413 |

**சேர்க்கை விவரம்**

| | | |
|---|---|---|
| சிறுவர் | .. | 74,11,140 |
| சிறுமியர் | .. | 60,26,700 |
| மொத்தம் | .. | 1,34,37,840 |

## VI நிர்வாக வாரியாக ஆசிரியர்களின் எண்ணிக்கை 1993–94

| பள்ளி வகைகள் (1) | | அரசு மாநிலம் மற்றும் மையம் (2) | நகராட்சி மாநகராட்சி (3) | பஞ்சாயத்து யூனியன் (4) |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | .. | 7,718 | 8,912 | 69,320 |
| நடுநிலைப் பள்ளிகள் | .. | 2,915 | 6,874 | 24,106 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | 25,927 | 1,452 | - |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | 30,757 | 3,882 | - |
| மொத்தம் | .. | 67,317 | 21,120 | 93,426 |

| பள்ளி வகைகள் (1) | | தனியார் (2) | மொத்தம் (3) | ஆசிரியர்கள் ஆண் (4) | ஆசிரியர்கள் பெண் (5) |
|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | .. | 30,446 | 1,16,396 | 68,601 | 47,795 |
| நடுநிலைப் பள்ளிகள் | .. | 28,297 | 62,192 | 32,299 | 29,893 |
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | 14,950 | 42,329 | 24,524 | 17,805 |
| மேல்நிலைப் பள்ளிகள் | .. | 39,857 | 74,496 | 43,883 | 30,613 |
| மொத்தம் | .. | 1,13,550 | 2,95,413 | 1,69,307 | 1,26,106 |

## VII பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை (வகுப்பு வாரியாக)

### 1993 – 94

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1–5 | 90,457 | 70,697 | 1,61,154 |
| 6–8 | 40,229 | 31,203 | 71,432 |
| 9–10 | 25,351 | 14,881 | 40,232 |
| 11–12 | 13,270 | 9,325 | 22,595 |
| 1–12 | 1,69,307 | 1,26,106 | 2,95,413 |

## VIII மாணவர் சேர்க்கைப் பட்டியல் – 1993–94

(இலட்சங்களில்)

| வகுப்புகள் | மேல்நிலைப் பள்ளி | உயர்நிலைப் பள்ளி | நடுநிலைப் பள்ளி | தொடக்கப் பள்ளி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **I-V** | | | | | |
| மாணவர் | 1.23 | 1.24 | 10.00 | 30.59 | 43.06 |
| மாணவியர் | 1.09 | 1.00 | 8.45 | 26.61 | 37.15 |
| மொத்தம் | 2.32 | 2.24 | 18.45 | 57.20 | 80.21 |
| **IV-VIII** | | | | | |
| மாணவர் | 6.85 | 5.61 | 7.40 | – | 19.86 |
| மாணவியர் | 4.86 | 4.74 | 5.89 | – | 15.49 |
| மொத்தம் | 11.71 | 10.35 | 13.29 | – | 35.35 |
| **IX - X** | | | | | |
| மாணவர் | 4.72 | 3.14 | – | – | 7.86 |
| மாணவியர் | 2.85 | 2.42 | – | – | 5.27 |
| மொத்தம் | 7.57 | 5.56 | – | – | 13.13 |
| **XI - XII** | | | | | |
| மாணவர் | 3.33 | – | – | – | 3.33 |
| மாணவியர் | 2.37 | – | – | – | 2.37 |
| மொத்தம் | 5.70 | – | – | – | 5.70 |
| **I - XII** | | | | | |
| மாணவர் | 16.13 | 9.99 | 17.40 | 30.59 | 74.11 |
| மாணவியர் | 11.17 | 8.16 | 14.34 | 26.61 | 60.28 |
| மொத்தம் | 27.30 | 18.15 | 31.74 | 57.20 | 134.39 |

## IX தொழிற் கல்வி பாடங்கள் – 1993–94

| வ.எண் | பாடப் பிரிவு | | சேர்க்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | | மாணவர் | மாணவியர் | |
| 1. | வேளாண்மை | .. | 8,668 | 590 | 9,258 |
| 2. | மனை இயல் | .. | 74 | 5,912 | 5,986 |
| 3. | வணிகவியல் மற்றும் வாணிபம் | .. | 26,010 | 24,630 | 50,640 |
| 4. | பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் | .. | 21,016 | 2,511 | 23,527 |
| 5.. | சுகாதாரம் | .. | 1,267 | 6,693 | 7,960 |
| 6. | இதரப் பிரிவுகள் | .. | 318 | 127 | 455 |
| | மொத்தம் | .. | 57,353 | 40,463 | 97,816 |

## X தமிழ்நாட்டில் பள்ளியைவிட்டு விலகுவோர் பற்றிய தகவல் (சதவீதத்தில்)

| ஆண்டு (1) | ஆரம்பப் பள்ளிகள் மாணவர் (2) | மாணவியர் (3) | மொத்தம் (4) | நடுநிலைப் பள்ளிகள் மாணவர் (5) | மாணவியர் (6) | மொத்தம் (7) |
|---|---|---|---|---|---|---|
| 1984–85 | 21.34 | 25.28 | 23.14 | 53.93 | 64.51 | 58.86 |
| 1985–86 | 20.13 | 25.20 | 22.48 | 51.47 | 62.23 | 56.45 |
| 1986–87 | 19.86 | 25.06 | 22.29 | 47.66 | 57.82 | 52.38 |
| 1987–88 | 19.44 | 24.46 | 21.78 | 44.08 | 53.14 | 48.22 |
| 1988–89 | 19.17 | 24.01 | 21.42 | 41.33 | 51.35 | 45.97 |
| 1989–90 | 18.78 | 23.64 | 21.05 | 40.87 | 50.65 | 45.43 |
| 1990–91 | 18.27 | 22.68 | 20.32 | 40.17 | 49.43 | 44.48 |
| 1991–92 | 17.71 | 21.16 | 19.31 | 37.48 | 46.50 | 41.67 |
| 1992–93 | 17.11 | 19.62 | 18.27 | 34.76 | 43.54 | 38.86 |
| 1993–94 | 16.39 | 18.35 | 17.30 | 32.16 | 41.20 | 36.35 |

4B

தமிழ்நாட்டில் பள்ளியைவிட்டு விலகுவோர் பற்றிய தகவல் (சதவீதத்தில்) – தொடர்ச்சி

| ஆண்டு | உயர்நிலைப் பள்ளிகள் | | | மேல்நிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1984–85 | 72.95 | 80.87 | 76.55 | 88.31 | 90.70 | 89.39 |
| 1985–86 | 72.03 | 79.71 | 75.53 | 88.11 | 90.00 | 88.97 |
| 1986–87 | 71.41 | 78.59 | 74.68 | 87.50 | 89.64 | 88.47 |
| 1987–88 | 69.72 | 77.32 | 73.24 | 87.13 | 88.84 | 87.91 |
| 1988–89 | 66.75 | 76.45 | 71.26 | 86.52 | 88.58 | 87.46 |
| 1989–90 | 66.11 | 73.85 | 69.64 | 85.11 | 87.98 | 86.44 |
| 1990–91 | 64.91 | 72.38 | 68.32 | 84.23 | 86.60 | 85.31 |
| 1991–92 | 64.46 | 71.93 | 67.94 | 83.92 | 86.07 | 84.90 |
| 1992–93 | 63.65 | 71.02 | 67.08 | 82.94 | 85.39 | 84.08 |
| 1993–94 | 62.98 | 69.85 | 66.17 | 81.89 | 84.28 | 83.00 |

## XI தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வாரியாக) — (1979–80 – 1993–94)

| | மாநில வாரியப் பள்ளிகள் | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | அரசு | நகராட்சி – மாநகராட்சி | உதவிபெறுவது | உதவி பெறாதது | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1979–80 | 485 | 54 | 483 | – | 1,022 |
| 1980–81 | 572 | 57 | 542 | – | 1,172 |
| 1981–82 | 653 | 60 | 574 | 1 | 1,288 |
| 1982–83 | 654 | 60 | 576 | 2 | 1,292 |
| 1983–84 | 654 | 60 | 576 | 2 | 1,292 |
| 1984–85 | 686 | 60 | 584 | 1 | 1,331 |
| 1985–86 | 690 | 62 | 627 | 1 | 1,380 |
| 1986–87 | 755 | 62 | 651 | 1 | 1,469 |
| 1987–88 | 765 | 62 | 653 | 1 | 1,481 |
| 1988–89 | 769 | 62 | 676 | 19 | 1,526 |
| 1989–90 | 809 | 68 | 677 | 53 | 1,607 |
| 1990–91 | 848 | 68 | 674 | 70 | 1,660 |
| 1991–92 | 869 | 68 | 674 | 88 | 1,699 |
| 1992–93 | 879 | 68 | 674 | 94 | 1,715 |
| 1993–94 | 891 | 68 | 674 | 98 | 1,731 |

4C

தமிழகத்தில் மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வாரியாக) – தொடர்ச்சி

| ஆண்டு | மெட்ரிகுலேஷன் (7) | ஆங்கிலோ இந்தியன் (8) | மைய அரசு (9) | மொத்தம் (10) | பெரு மொத்தம் (11) |
|---|---|---|---|---|---|
| 1979–80 | 24 | 26 | 52 | 102 | 1,124 |
| 1980–81 | 31 | 26 | 57 | 114 | 1,286 |
| 1981–82 | 36 | 26 | 57 | 119 | 1,407 |
| 1982–83 | 41 | 26 | 57 | 124 | 1,416 |
| 1983–84 | 52 | 26 | 57 | 135 | 1,427 |
| 1984–85 | 59 | 27 | 57 | 143 | 1,474 |
| 1985–86 | 79 | 28 | 67 | 174 | 1,545 |
| 1986–87 | 100 | 30 | 79 | 209 | 1,678 |
| 1987–88 | 121 | 29 | 79 | 229 | 1,710 |
| 1988–89 | 155 | 29 | 79 | 261 | 1,787 |
| 1989–90 | 192 | 29 | 89 | 308 | 1,915 |
| 1990–91 | 276 | 28 | 81 | 385 | 2,045 |
| 1991–92 | 276 | 28 | 81 | 385 | 2,084 |
| 1992–93 | 338 | 28 | 84 | 450 | 2,165 |
| 1993–94 | 373 | 28 | 89 | 490 | 2,221 |

## XII தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி

(நிர்வாக வாரியாக 1979-80 – 1993-94)

| ஆண்டு | | | மாநில வாரியப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|
| | அரசு | நகராட்சி – மாநகராட்சி | உதவிபெறுவது | உதவி பெறாதது | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1979-80 | 1,500 | 73 | 424 | 2 | 1,999 |
| 1980-81 | 1,486 | 72 | 399 | 1 | 1,958 |
| 1981-82 | 1,547 | 69 | 398 | 7 | 2,021 |
| 1982-83 | 1,590 | 71 | 397 | 13 | 2,071 |
| 1983-84 | 1,621 | 72 | 441 | 7 | 2,141 |
| 1984-85 | 1,686 | 73 | 465 | 5 | 2,229 |
| 1985-86 | 1,723 | 80 | 450 | 5 | 2,258 |
| 1986-87 | 1,765 | 80 | 445 | 2 | 2,292 |
| 1987-88 | 1,762 | 80 | 450 | 2 | 2,294 |
| 1988-89 | 1,795 | 80 | 416 | 2 | 2,293 |
| 1989-90 | 1,839 | 78 | 387 | 23 | 2,327 |
| 1990-91 | 1,864 | 83 | 370 | 44 | 2,361 |
